தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி

36203

தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை.

தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி

தமிழ்த் துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை - 9

முதற்பதிப்பு : டிசம்பர் ; 1987

TAMIL ILAKKIYAK KALAICHOL AKARATHI
(Dictionary of Literary Terms in Tamil)

By Dept. of Tamil
Thiagarajaar College
Madurai - 9.

First Edition : December 1987
Pages 158 + 4 = 162
Types : 10 point
Paper used : 14. k. g. D/d.
Size of the Book: 21cm × 14cm

Printers : Meena Prints,
Madurai-7.

இந்நூல் பல்கலைக்கழக மானியக் குழுவின் கல்லூரிகளுக்கான கலை, சமூக அறிவியல் துறை வளர்ச்சித் திட்டத்தின் (COHSSIP) நிதி உதவியுடன் வெளியிடப்படுகிறது.

This work is Published under the COHSSIP grant of U. G. C., New Delhi.

முன்னுரை...

தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறையில் பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி [A Dictionary of Literary Terms in Tamil] ஒன்றை 19.12.1977 முதல் 18.6.1980 வரை தமிழ்த்துறையினர் தொகுத்தனர். அவ்வாசிரியர் குழுவிற்குத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் தலைவராக இருந்தார்கள். திரு. இல. க. சுபாசு சந்திர போசு இப்பணிக்கென ஆய்வாளராக அமர்த்தப்பெற்றுச் சொற்களைத் தொகுப்பதிலும் விளக்கங்கள் எழுதுவதிலும் பெரிதும் உதவியாக இருந்தார்.

இவ்வகராதித் தொகுப்பிற்கென ரூ 15,000/- [ரூபாய் பதினைந்தாயிரம்] நிதியுதவி வழங்கிய பல்கலைக்கழக மானியக்குழுவிற்குத் தியாகராசர் கல்லூரியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாசிரியர் குழுவில் இருந்து பணி புரிந்த தமிழ்த்துறை ஆசிரியர்கள் காலஞ்சென்ற பேராசிரியர் அ. சங்கர நாராயணன், டாக்டர். நா. பாலுசாமி, டாக்டர். ந. மாணிக்கம், டாக்டர். ஆ. இராமகிருட்டினன் ஆகியோர்க்கும், ஆய்வாளர் திரு. இல. க. சுபாசு சந்திர போசுக்கும் எமது நன்றி உரியது.

பழந்தமிழிலக்கியங்களுக்கு இவ்வகையான அகராதி தொகுக்கும் பணி முதன்முறையாக எங்கள் கல்லூரியால்தான் 1977-இல் தொடங்கப்பெற்றது. இவ்வகராதியில் இப்பொழுது வெளிவருவது உயிரெழுத்துக்கள் முழுவதும் அடங்கிய முதல் தொகுதி மட்டுமே. அடுத்த தொகுதிகள் விரைவில் வெளியிடப்பெறும்.

''ஓர் அகராதி சொல்லடுக்கு மாத்திரமன்று, பொருள் அடுக்கு மாத்திரமன்று, அந்த மொழியைப் பேசும் மக்களின் கலையை ஊகிப்பதற்கு ஒரு பெருங்கருவியாகவும் இருக்கின்றது' என்பர் டாக்டர். வ. அய். சுப்பிரமணியம். இக்கருத்துக்கேற்பத்

தமிழ் மக்களின் இலக்கியக் கலையின் ஆழத்தையும் அகலத்தையும் ஒருவாறு உணர்வதற்கு இவ்வகராதி துணைபுரியும் என்று நம்புகிறோம்.

விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட சொல், அதனுடைய பொருள் வழி வகைப்பாடு, சொற்பொருள், விளக்கம், துணையான இலக்கண, இலக்கிய மேற்கோள்கள் என்னும் அமைப்பில் இவ்வகராதி தொகுக்கப்பெற்றுள்ளது.

இந்நூல் பல்கலைக்கழக மானியக் குழுவின் கல்லூரிக் கலை, சமூக அறிவியல் துறைகளின் வளர்ச்சித் திட்டத்தின் (COHSSIP) நிதியுதவியுடன் வெளியிடப்பெறுகிறது என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்த்துறைக்காக இந்நூலை அச்சிடவும், மெய்ப்புத்திருத்தவும் பொறுப்பேற்ற தமிழ்த்துறை ஆசிரியர்கள் டாக்டர் தொ. பரமசிவன், திரு. நா. கருணாமூர்த்தி, திரு. சு. சக்திவேல் ஆகியோர்க்கும் ஆய்வாளர் சு. செந்தூரனுக்கும் இவர்களை இயக்கிப் பணி கொண்ட பேராசிரியர் ஈ. வே. மாரியப்பன் அவர்களுக்கும் எம் நன்றி.

தமிழாய்வாளர்கள் இதனைப் பயன்கொள்ளவும் அடுத்த பதிப்பின் செம்மைக்கு உதவவும் வேண்டுகிறோம்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த மீனா அச்சகத்தார்க்கு எம் நன்றி.

டாக்டர். சுப. அண்ணாமலை

2-12-1987. **முதல்வர்/தமிழ்த்துறைத் தலைவர்**

மதுரை. **தியாகராசர் கல்லூரி**

அ

அகத்திணை :- (அகம்.) இன்ப ஒழுக்கம். அகம் — இன்பம்; திணை—ஒழுக்கம். "அகப்பொருளாவது போக நுகர்ச்சியாதலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம என்றார்" (தொல். பொ. இளம்.)

அகத்திணை, கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என எழுவகைப் படும.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

(தொல். பொ. அகத். 1.)

இவற்றுள் குறிஞ்சி முதல் பாலை இறுதியாகிய இடை நின்ற ஐந்தும் ஐந்திணை என ஒரு தொகுதியாக வழங்கப் பெறும். எழுவகைக் காதல் ஒழுக்கங்களே எழுதிணையாயின. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவை ஒத்த காமத் தன்மையால் ஒன்றுகி ஐந்திணை எனப் பெயர் பெற்றன. குறிஞ்சி முதலாகிய குறியீடுகள் அவ்வந் நிலத்திற்குரிய மலர்களின் பெயர்களே என்றும், இப்பெயர்கள் பின்னர் உரிப்பொருளைப் புலப்படுத்தும் குறியீடுகள் ஆயின என்றும் சிலர் கருதுவர். அவ்வாறின்றிக் குறிஞ்சி முதலாயவை புணர்தல் முதலாய உரிப்பொருள்களை முதற்கண் தருவன எனவும், பின்னரே மலர்-களையும நிறங்களையும் குறிக்கப் போந்தன எனவும் மற்றுஞ்சிலர் கருதுவர் குறிஞ்சி முதலாய ஐந்திணைகட்கு நிலம் வழங்கப் பட்டும், கைக்கிளை. பெருந்திணைக்கு நிலம வழங்கப் படா-மலும் உள்ளது. நிலமில்லாக் கைக்கிளை, பெருந்திணையும் நிலங்-கொண்ட ஐந்திணைகளோடு எழுதிணை எனக் கொள்ளப்-படுதலின் இவற்றுக்கு நிலப் பொருள் கொள்வதைக் காட்டிலும் உரிப்பொருள் கோடலே முறையாகும்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்" என முதலிடம் பெற்ற கைக்கிளை, பொருள் கூறும்போது முதலிடம்

பெற்றிலது. 'கைக்கிளைக் குறிப்பே', 'பெருந்திணைக்குறிப்பே' என இவ்விரு திணைகளின் சிறுநிலை தோன்ற அவற்றின் பொருட் சூத்திரங்களை முடித்துக் காட்டுவார் தொல்காப்பியர். 'குறிப்பு' என்ற சொற்பெய்வால் இவ்விரு திணைகளும் விரித்துப்பாடும் பெற்றியவல்ல என்றும் சுட்டுவார். தொல்காப்பியம் ஐந்திணையே அகத்திணை என்பதுபோல ஐந்திணையின் இலக்கணக்கூறுகளைப் பலபட விரித்துரைப்பக் காணலாம். அகத்திணையியல் 55 நூற்பாக்களைக் கொண்டது. அவற்றுள் 50 நூற்பாக்கள் குறிஞ்சி முதலாய ஐந்திணையின் நெறிகளையே விரித்து மொழிதல் காணலாம். மற்றும் கற்பியல், களவியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் எனப்படும் பிற நான்கு இயல்களும் ஐந்திணை நுதலும் அமைப்பினவாகவே உள்ளன.

அகத்திணைப் புறம் : (அ. பெ.). கைக்கிளை, பெருந்திணை, (பார்க்க) அகப்புறத்திணை.

அகத்தியல் : உள்ளத்தியற்கை, (அகம் + இயல்) ''அகத்தியல் முகத்தில் காட்ட'' (கம்ப. வீடண. 141)

அகத்துழிஞை : (பு. பொ.). கோட்டையில் உள்ளவரைப் புறத்தேயுள்ளவர் போர் வெல்லும் புறத்துறை. (பு வெ. 6.22). (அகம் + உழிஞை) புறத்திணையில் ஒன்றாக உழிஞைத் திணையுள் அமைந்த துறைகளுள் ஒன்று.

''முரணவியச் சினஞ்சிறந்தோர்
அரணகத் தோரை அமர் வென்றது''

உழிஞை மறவர் மதிலகத்து நொச்சியாரை வென்றது அகத்துழிஞை எனப் பெறும். ''முகிலுரிஞ்சுஞ் சூழி ... ... அகத்தாரை வென்றார் அமர்'' முகில் தவழும் உச்சியினையுடைய அரணகத்துள்ள நொச்சியாரை வென்ற தன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலை குறிக்கின்றது.

அகத்துறுப்பு : மனப்பண்பு. அன்பு, இரக்கம், முதலிய மனப்பண்பு, ''அகத்துறுப் பன்பிலவர்க்கு'' (குறள். 9).

அகநாடகம்: (நா) நாடக வகை. (சிலப். 3. 14. உரை)

அக நாடகவுரு : (நா) அக நாடகத்திற்குரிய பாடல் (சிலப் 3. 14. உரை)

அக நிலை : (இசை). சாதிப் பெரும்பண் வகை. ''அகநிலை புறநிலை, அருகியல், பெருகியல்''

அகநிலைக் கொச்சகம் : (பா) கொச்சக வகை

அகநிலைப் பசாசம் : (கூ) சுட்டு விரல் நுனியில் பெருவிரல் அகப்பட மற்றைய மூன்றும் பொலிந்து நிற்பது (சிலப். 3. 18. உரை)

அகநிலை மருதம் : (பண்) ஒரு பண். அது உழை குரலாய கோடிப்பாலை என்னுமிசை

அகநிலை யொத்தாழிசை : (பா) கலிப்பா வகை. கலியுறுப்பு வகை (தொல். பொ, 450 உரை)

அகப் பாட்டு : (பா) அகப்பொருள் அமைந்த செய்யுள்.

அகப்பாட்டு வண்ணம் : (யா) இறுதி அடி ஏகாரத்தால் முடியாது இடையடி போன்று வரும் சந்தம். (தொல். பொ, 536)

அகப்பாட்டுறுப்பு : (பா) அகப்பாட்டிற்குரிய உறுப்புக்கள். அவை திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், பயன் முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை எனப் பன்னிரு வகைப்படும். (நம்பி. 211)

அகப்புறக் கைக்கிளை ; (அ. பா.) காமம் அமையாதவளிடத்துக் கொள்வதாகிய காமம். காமம் அமையாத இளமைத் தன்மையினையுடைய தலைமகளிடத்துத் தலைமகன் குறிப்பறியாது சென்று சார்ந்து அவளோடு மேலும் மேலும் கூறுவது, இவ்வகப்புறக் கைக்கிளை தலைமைப் பாடில்லாதார்க்கும் இழிந்த குலத்தார்க்கும் உரியது. [நம்பி. 241]

"காமஞ்சான்ற இளையாள் மாட்டுக் கொள்கின்ற ஒரு தலையுறவு அகத்திற்கேயுரிய அகப்பொருட் கைக்கிளையாகும் காமம் அமையாத இளையவளிடத்து அவளது மனக் குறிப்பையும அறியாமல் நெருங்கி நின்று, அவளிடம் மேலும் மேலும் உரையாடுவது அகப்புறக் கைக்கிளையாகும். காமம் அமையாதவளிடத்துக் கொள்ளுகின்ற இவ்வுறவு அகத்திற்குப் புறம்பாகையால் அகப்புறக் கைக்கிளை" எனப்பட்டது. [நம்பி. பக். 423]

அகப்புறத் தலைவன் : [அ. பொ.] கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்களுக்கு உரிய தலைவன். [கலித். 108. உரை].

அகப்புறத்திணை : [அ. பொ.] அகத்திணைக்குப் புறம்பான கைக்கிளை, பெருந்திணை முதலியன. [யாப். வி. பக். 529]

அகப்புறப் பாட்டு : [பா] கைக்கிளை, பெருந்திணைகளுக்குரிய செய்யுள். [நம்பி. 250] அகப்பாட்டிற்குரிய உறுப்புக்கள் அனைத்தும் அகப்புறப் பாட்டிற்கும் உரியனவாம். [பார்க்க] அகப்பாட்டுறுப்பு

அகப்புறப் பெருந்திணை : [அ. பொ.] அகனைந்திணைக்குப் புறமாகிய பெருந்திணை, மடலேறுதல், விடை தழுவுதல், குற்றிசை குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபதநிலை, தபுதாரநிலை என்பனவற்றில் இயற்பெயர் சுட்டாமல் வருவது [நம்பி. 244]. இயற்பெயர் சுட்டின் புறப்பொருட் பெருந்திணையாம்.

அகப்புற முழவு : [இசை] தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலிய மத்திமமான வாச்சியம் [சிலப். 3).

அகப்புறம் : [அ. பொ.] அகத்திற்கு ஒருசார் தொடர்பு கொண்டு புறமாவது. [பார்க்க] அகத்திணைப் புறம். [தொல். பொ. 51 உரை] அகப்புறமாவன : காந்தள், வள்ளி, சுரநடை, முதுபாலை, தாபதம், தபுதாரம், குற்றிசை, குறுங்கலி இல்லாண்முல்லை, பாசறைமுல்லை, [தொகை அகராதி. பக். 2]

அகப்பொருட்கோவை : [சிற். வகை] இலக்கிய வகை. அகப் பொருளைக் கூறும் கோவைப் பிரபந்தம். இருவகைப்பட்ட முதற்பொருளும் பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும் பத்து வகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்தி, கைக்கிளை முதலுற அன்புடைக் காமப் பகுதியான களவொழுக்கத்-தினையும் கற்பொழுக்கத்தினையும் கூறுவதே எல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றால் பன்னிரெண்டு அகப்-பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப் பாடுவதாகிய இலக்கிய வகை. இது வெண்பா, கலி, வஞ்சி, வண்ணம் இவற்றாலும் வழங்கப்படும். [இலக். விள. பாட். பக். 481].

நவநீதப் பாட்டியல், கோவை எனக் குறிப்பிடுகிறது. இது அரசர் கோவை, பாண்கோவை போல்வன. களவியற் காரிகை-யுரையில் அரையர் கோவை என்னும் ஒரு நூற்பெயர் காணப்படுகின்றது.

அகப் பொருட்டிணை : [அ. பொ] ஐந்திணை, பெருந்திணை, கைக்கிளை. [பார்க்க • அகத்திணை].

அகப் பொருட்டுறை : [பார்க்க] அகப்பாட்டுறுப்பு.

அகப் பொருள் ; [பார்க்க] அகத்திணை.

அக மலர்ச்சியணி : (அணி) ஒன்றின் குணம், குற்றங்களால் மற்றொன்றிற்கு அவை உள்ளதாதலைச் சொல்லுதல். இவ்வணி நான்கு வகைப்படும். அவை,

1. குணத்தினால் குணத்தைச் சொல்லுதல்
2. குற்றத்தினால் குற்றத்தைச் சொல்லுதல்
3. குணத்தினால் குற்றத்தைச் சொல்லுதல்
4. குற்றத்தினால் குணத்தைச் சொல்லுதல்

இவ்வணி வடமொழியில் உல்லாசாலங்காரம் என வழங்கப் பெறும்.

அகமுழவு : (இசை) உத்தமவாச்சியம். இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா முதலிய உத்தமமான வாச்சியம். (சிலப். 3.27, உரை)

அகம் : [அ பொ.] காம இன்பம் [தொல், பொ. 1. உரை] அகம் - இன்பம். அகத்துணர்வாலே அறியப்படும் இன்பம். ''இன்பம் பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கம் அகம் எனப் பட்டது'' [திருக்கோ. பக் 3]

அகலக் கவி : (இலக். வகை) **வித்தார கவி.** தொடர் நிலைச் செய்யுளாலும், அடிபலவாய் நடக்கும் முத்தகச் செய்யுளாலும பாடப்படுவது. (தமிழ்ப்பேரகராதி. பக்.6) அகலக்கவியின் வருவன பிள்ளைக்கவி, கலம்பகம், பன்மணிமாலை, மும்மணிக் கோவை, அகப்பொருட் கோவை, தொகை-நிலைச் செய்யுள், இணைமணி மாலை, இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, இருபா இருபஃது, ஒலியந்தாதி, ஊரின்னிசை, வருக்கமாலை, கைக்கிளைச் செய்யுள், மங்கல வள்ளை, இரட்டைமாலை, ஊர் நேரிசை, பெயர் நேரிசை, மெய்க்கீர்த்தி கரப்புமாலை, வேனின்மாலை, பல்சந்தமாலை, அங்கமாலை, வசந்தமாலை, நவமணிமாலை, பரணி, தசாங்கப்பத்து, பதிற்றந்தாதி, நூற்றந் தாதி, அட்டமங்கலம், அலங்கார பஞ்சகம், ஊசல், சின்னப்பூ, சதகம், எண் செய்யுள், ஐந்திணைச்செய்யுள், நாளிகை வெண்பா, நானாற்பது, பயோதரப் பத்து, நயனப்பத்து, வில் விருத்தம், வேல் விருத்தம், வாள் விருத்தம், செங்கோல் விருத்தம், யானை விருத்தம், குதிரை விருத்தம், நாட்டு விருத்தம், ஊர் விருத்தம், கொடை விருத்தம், பெருங் காப்பியம், சிறு காப்பியம், வளமடல் உலாமடல், உலா, அனுராகமாலை மெய்க்கீர்த்திமாலை, புகழ்ச்சி மாலை, நாம மாலை, தாரகை மாலை, உற்பவமாலை, தானை மாலை, வரலாற்று வஞ்சி, செருக்கள வஞ்சி, பொருள்-வஞ்சி, குழமகன், பாதாதி கேசம், கேசாதி பாதம், யானைத்-தொழில், சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம், குறிஞ்சிப் பாட்டு, அகப் பாட்டு, புறப்பாட்டு என்பன. (தொகையகராதி பக். 2)

அகலக்கவி வகை ; தனிநிலை, தொடர் நிலை,

அகல வாய்ச்சி : (இசை) வாய்ச்சிக் கருவி வகை.

அகலவுரை: (உரை) விரிவாக எழுதும் உரை. விரித்துரை அதாவது இலக்கணமும், இலக்கியமும் எடுத்துக் காட்டிய பொருள் விரித்துரைக்கும் விசேட உரை. (ம. த. பே. அகராதி, பக். 6)

அகவலன் : பாணன். 'களம் வாழ்த்து மகவலன்' (பதிற். 43)

அகவலுரிச்சீர் : (யாப்) ஈரசைச்சீர்.

நேர் நேர் நிரைநேர்

நிரை நிரை நேர் நிரை (காரிகை உறுப். 10)

(பார்க்க) அகவற்சீர்.

அகவலோசை: (யாப்) ஆசிரியப்பாவிற்குரிய ஓசை. அகவலோசை மூவகைப்படும். அவை

(1). ஏந்திசையகவல்
(2). தூங்கிசை யகவல்
(3). ஒழுகிசை யகவல்

அகவல் : (யாப்) ஆசிரியப் பாவுக்குரிய ஓசை (காரிகை, செய். 1.) ஆசிரியப்பா (தொல். பொ. 393) எடுத்த லோசை (பிங்). அழைத்தல் மயிற்குரல் - (பிங்), கூத்தாடல். (பிங்) அகவல் அறுவகையின. (1) அகப்பாவகவல், (2) புறப்பாவகவல், (3) நூற்பாவகவல். (4) உறுப்பினகவல், (5) சித்திரவகவல், (6) ஏந்திசையகவல்.

அகவல் விருத்தம் : (பா) ஆசிரிய விருத்தம், (இலக். வி. 845)

அகவற்சீர் : [யாப்] அகவற்பாவிற்குரிய சீர் ஈரசைச்சீர்.

நேர் நேர் — தேமா	}	மாச்சீர்
நிரை நேர் — புளிமா		
நிரை நிரை — கருவிளம்	}	விளச்சீர்
நேர் நிரை — கூவிளம்		

அகவற்சீர் அகவலுரிச்சீர் எனவும் பெயர் பெறும் (பார்க்க அகவலுரிச்சீர்.

அகவற்சுரிதகம்: (யாப்) ஆசிரியச் சுரிதகம். சுற்றயலடி மூச்சீராக வரும் சுரிதகம் அகவற் சுரிதகம் எனப்படும்.

அகவற்பா : [பா] ஐந்து வகைப் பாவில் ஒன்று. அது நான்கு சீர்களால வரும் அளவடியாயும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும். தன்தளை தழுவியும், பிறதளை மயங்கியும் கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இருசீர் கலவாது, மூன்று முதலிய பல அடிகளைக் கொண்டு முடிவது.

அகவற்பா என்பது ஆசிரியபபாவாகும். ''அகவ லென்ப தாசிரி யம்மே'' (தொல். பொ. செய். 393) வழக்கினால் அகவல் என்று வழங்கப்பெறும் பாவினை ஆசிரியத்திற்குரிய பாவென்பர். அகவிக் கூறுதலான் அகவலெனப்பட்டது. அதாவது கூற்றும் மாற்றமுமாகிய ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறாது தாம் கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுதோர் முறையும உண்டு. அதனை அழைத்தல் என்பர். அவ்வாறு சொல்லுவார் சொல்லின்கண் எல்லாந் தொடர்ந்து கிடந்த ஓசை அகவல் எனப்படும். அவை தச்சுத் தொழிலாளரிடத்தும், களம்பாடு வாரிடததும், கட்டும் கழங்கும் இட்டு உரைப்பாரிடத்தும் தம்மில் உறழ்ந்து உரைப்பாரிடத்தும், பூசலிசைப்பாரிடத்தும கேட்கப்படும். கழங்கிட்டுரைப்பார் அவ்வாறே வழக்கினுள்ள தாய்க்கூறும் ஓசை ஆசிரியம் எனப்படும். (தொல். பொ. செய். 393, உரை. இளம்.)

அகவற்றாழிசை : (யாப்) ஆசிரியப் பாவினத்துள் ஒன்று. அது எவ்வகைச் சீராலும். தளையாலும். ஒத்த மூவடியாகத் தனித்தாவது ஒரு பொருள் மேல மூன்றடுக்கியாவது வரும். ஒருவகைச் செய்யுள்.

அகவற்றாழிசை எனினும் ஆசிரியத் தாழிசை எனினும் ஒன்றே. 'மூன்றடி ஒத்த முடிபின ஆய்விடின் ஆன்ற

அகவற்றாழிசை ஆகும் (யாப் வி. 75) ஆசிரியத்தாழிசை எனினும் ஆசிரிய ஒத்தாழிசை எனினும் ஒன்றே. 'அடி மூன்றொழுத்தின் ஒத்தாழிசையே' [காக்கைபாடினியம்].

''ஒத்த வொருபொருண்மூ வடிமுடியி னஃ
தொத்தாழிசையாம் உடன்மூன் றடுக்கின்''

என்பர் மயேச்சுரர்.

அகவற்றாழிசை ஒரு பொருள மேல் மூன்றடுக்கி வருவதும் தனியே வருவதும் என இருவகையில் அமையும்.

அகவற்றுள்ளல் : (யாப்) வெண்டளையும் கலித்தளையும் கலந்து வரும துள்ளலோசை. (யாப். காரிகை. செய். 1. உரை)

அகவற்றுறை : [யாப்] ஒரு வகைப் பாவினம். ஈற்றயலடி குறைந்து நான்கு அடியாக வருவனவும், ஈற்றயலடி குறைந்து இடை அந்தத்து அடி மடக்காய் நான்கு அடியாய் வருவனவும் இடையடி குறைந்து நான்கு அடியாய் வருவனவும், இடை இடை குறைந்து இடை மடக்காய் நான்கடியாய் வருவனவும் அகவற்றுறை.

''கடையதன் அயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான் கடியாகி

இடையிடை குறைநவும் அகவற்றுறையே'' [யாப். வி. 79] அகவற்றுறை எனினும் ஆசிரியத்துறை எனினும் ஒன்றே. சீர வரையறை இல்லை. அடிவரையறையுள் நடு இரண்டடி குறைந்தும் மிகுந்தும் வருவன ஆசிரியத்துறை. ஓர் அடி குறைந்து வருவன ஆசிரிய நேர்த்துறை. ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக் குறட்டுறை.

அகவற்றூங்கல் : [யாப்] ஒன்றாத வஞ்சித்தளையால் வரு-வதாகிய தூங்கலோசை. [யாப். காரிகை. செய். 1. உரை]

அகவன் மகள் . பாண் மகள்.

அகணம் : [இசை] யாழின் பத்தர். ''வணகயமை யகணத்து'' (சிறுபாண். 224)

அகனைந்திணை : [அக பொ] குறிஞ்சி முதலிய ஐந்திணை [பார்க்க] அகத்திணை.

அகன்றிசைப்பு : [யாப்] யாப்பு வழு. யாப்பு முறையிலிருந்து அகன்று காட்டும் குற்றம். முற் பகுதி செய்யுளாயும் பிற்பகுதி கட்டுரையாயும் வருவது.

அகுன்றி : (இசை) வாச்சிய வகை.

அகைப்பு : (பார்க்க) அகைப்பு வண்ணம்.

அகைப்பு வண்ணம் : இருபது வகை வண்ணங்களுள் ஒன்று. ஒரு வழி நெடிலும், ஒரு வழிக் குறிலும் பயின்று விட்டுவிட்டுச் செல்லும் சந்தம்.

அக்கார தாரணை : நவதாரணையுள் ஒன்று. [யாப். வி. 96. பக். 516]

அங்கதச் செய்யுள் : வசைக்கவி, பழிக்கவி.

அங்கதப் பாட்டு : அங்கதச் செய்யுள்.

அங்கதம் : பழிச்சொல், ஒரு வகைச் செய்யுள்.

அங்கதாளம் : தாளவகை, பரத சாத்திரத்தில் கூறப்பட்ட தாளப் பிரமாணங்கள் பத்தினுள் ஒன்று. அது அனுதுரிதம், துரிதம், இலகு, குருபுலுதம், காகபதம் என்பன. [பரத. தாள 4. உரை]

அங்கமாலை : [சிற் இலக்] தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. ஆண், பெண் இவர்களுக்குச் சிறந்தது என எடுத்துக் கூறப்படும் அவயவங்களை வெண்பா அல்லது வெளி விருத்தம் அல்லது பாதாதிகேசம், கேசாதிபாதம் இவற்றால் முறை பிறழாது தொடர்புறப் பாடும் ஒரு வகைச் சிற்றிலக்கியம்.

" நிறுத்த வெளிவிருத்த நீடுறுப்பில் வந்தால்
குறித்தங்க மாலையாக் கொள்க — உறுப்பமைந்த
பாதாதி கேசமுங் கேசாதி பாதமுமா
ஓதுங் கலி வெண்பா வொன்று "

(வெண்பாப்பாட்டியல்)

அங்கமாலை, பாதாதிகேசமாலை, கேசாதிபாதமாலை எனவும் பெயர் பெறும்.

அங்கம் : [நா] நாடக நூலின் உறுப்பு. அறம் மட்டுமே பொருளாக வரும் நாடகம். [சிலப். 3. 31] தாளப் பிரமாணத் தொன்று. [பரத. தாள. 35] தாள வகை. [பரத. தாள. 35]

அங்கிதம் : பாட்டுடைத் தலைமை. பாட்டுடைத் தலைவனை அப்பாட்டினுள் குறிக்கும் பெயர்.

அங்கியற் பொருள் : ஐவகை நிலக் கருப் பொருள். (வீரசோ. பொருட். 11 உரை) (பார்க்க) கருப்பொருள்.

அசதிக்கிளவி : பரிகாசச் சொல் " அசதிக் கிளவி நயம்வர மிழற்றி" (பெருங். இலாவண. 17. 191.)

அசுரம் : [பார்க்க] ஆசுரம்.

அசை : [யா] செய்யுள் உறுப்புவகை எழுத்துக்கள் ஒன்றோடொன்று அசைத்து நிற்றல. அசைத்து இசை கோடலின் அசை எனப்பட்டது. அசை இருவகைப்படும், அவை. நேரசை நிரையசை.

1. குறில் தனித்தோ [க], நெடில் தனித்தோ [கா] குறில் ஒற்றடுத்தோ [கல்], நெடில் ஒற்றடுத்தோ [கால்] வருவது நேரசை.

2. குறில் இணைந்தோ [கல] குறில் நெடில் இணைந்தோ [கலா], குறில் இணைந்து ஒற்றடுத்தோ [கலம்] குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தோ [கலாம்] வருவது நிரையசை.

[யா. காரிகை. அ. ப. பக். 1]

அசைச்சீர் : [யா.] தளை கொள்வதற்கு இடமாக அமைந்து ஓரசையே சீராக வருவது. நாள், மலர் என்பன, ஓரசைச்சீர். ''அசைச்சீர்க் குதாரணம் நாண் மலரே'' [காரிகை. யாப் உறுப்பு 7] [நேர் X நாள் ; நிரை X மலர்]

அசை நிலையளபெடை : [யா.] அசை கொள்ளற் பொருட்டுக் கொண்ட அளபெடை. (பி. வி. 5. உரை).

அசையடி : அம்போதரங்கம். பாவங்கம். [இலக். வி. 738]

அசையந்தாதி : [யா] செய்யுளில் ஓரடியின் ஈற்றசை அடுத்த அடிக்கு முதலசையாக வருவது. (தொல். பொ. 411 உரை) [எ. டு.] ''குன்றச் சாரற் குறித்தன கோண்மா மாவென மதர்த்தன கொடிச்சி வாண்கண்''.

அச்சோப்பருவம் ; தாய் குழந்தையை அணைக்க அழைக்கும் பருவம், [திவ். பெரியாழ். 1, 9, பதி], பிள்ளைத்தமிழில் ஒரு பகுதி.

அஞ்சலி : [கூ] இணைக்கை வகை (சிலப். 3, 18, உரை).

அஞ்சிபதம் : (கூ) குதிகாலை ஊன்றிப் படத்தை மேனோக்கி வைத்து நிறுதல் (பரத. பாவ. 83)

அஞ்சி முகம் : (கூ) வருத்தம் ஆற்றாது இரு தோள்களின் மீது தலை சாய்த்தல்.

அடக்கம் : (இசை) பறைவகை. (சிலப். 3. 27. உரை)

அடக்கியல் : (பா.) கலிப்பாவின் செய்யுள் உறுப்பு, சுரிதகம். சுரிதகம் எனினும் அடக்கியல் எனினும் வாரம் எனினும் வைப்பு எனினும், போக்கியல் எனினும் ஒன்றே. (வீரசோ. யாப். 11 உரை) [பார்க்க] சுரிதகம்.

அடக்கியல் வாரம் : சுரிதகம். (தொல். பொ. 455) (பார்க்க) சுரிதகம்.

அடதாளம் : (இசை) தாளவகை (பரத தாள. 23).

அடந்தாளம் : (இசை) தாளவகை.

அடி : (யா.) சீர்கள் இயைந்து தளையடுத்து முடிவது அடி. அவை ஐந்து வகைப்படும். 1. குறளடி: 2, சிந்தடி; 3. அளவடி. அல்லது நேரடி; 4. நெடிலடி; 5. கழி நெடிலடி.

1. இருசீர் கொண்டது குறளடி.

2. முச்சீர் கொண்டது சிந்தடி.

3. நாற்சீர் கொண்டது நேரடி.

4. ஐந்து சீர் கொண்டது நெடிலடி

5. ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்களும் கொண்டது கழி நெடிலடி. வெண்பா இரண்டடிச் சிறுமையும், அகவற்பா மூன்றடி குறைந்த அளவும், கலிப்பா நான்கடிச் சிறுமையும், வஞ்சிப்பா மூன்றடிச் சிறுமையும் பெறும். (யா. காரிகை. அ. ப. பக். 4)

அடித்தோழி : (அகம்) தலைமைத் தோழி (சிலப். வாழ்த்து)

அடிபட இருத்தல் : (புறப.) புறப்பொருள் துறை. உழிஞைத்-துறை. உழிஞை அரசன் பகைவர் நாட்டைத் தன்னடிப் படுத்தற்-பொருட்டும், தன்பாற் போர்செய்தற் பொருட்டும் பாச-றையிலே நீண்ட காலம் தங்கி இருந்தது பற்றிக் கூறும உழிஞைத் துறை. (பு. வெ. உழிஞை. 31).

அடி மடக்கு : (அணி.) பொருள் வேறுபட்டேனும், வேறு-படாமலேனும், செய்யுளின் அடி மீண்டு மீண்டு வருவதாகிய சால்லணி வகை. "கொச்சக மெலா மடி மடக்க" (பெருந்-தொ. 1793).

அடி மயக்கு : (யா) பொருளில் திரிபின்றி அடிகளை முன் பின்-மாற்றும்படி அமைந்த பாடல்

அடிமறி ; (பொ. கோ.) எண்வகைப் பொருள் கோள்களில ஒன்றாகிய அடிமறிமாற்றுச் செய்யுள் (பார்க்க) பொருள்கோள்

அடிமறி மண்டிலம் : (யா) ஆசிரியப் பாவின் வகையுள் ஒன்று. செய்யுளின் எல்லா அடியும் முதல், நடு, இறுதியாக ஒத்த ஓசையும் பொருளும் பிழையாது வருவது.

(எ டு) "சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரலை எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே'' (காரிகை, செய் 8)

அடி மறிமாற்று : [பொ. கோ.] அடிகளை எடுத்து பொருளுக்கு ஏற்றபடி கூட்டுவதும், எந்த அடியை எங்குக் கூட்டினும் பொருளும் ஓசையும் ஒப்ப வருவது. [நன். 419] இதனை மொழி மாற்று என்பர் நேமிநாத உரையாசிரியர்.
[எ.டு.] நாலடி 93 ஆம் பாடலைக் காண்க.

'' நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால் ''

அடிமுரண்தொடை : (யா.) செய்யுளின் முதலில் வரும் சொல்லாவது பொருளாவது அடுத்த அடியின் சொல்லோடும் பொருளோடும் மாறுபடத் தொடுப்பது. (காரிகை, உறுப். 18. உரை

அடிமோனைத்தொடை : (யா) அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது. (காரிகை. 18 உரை)

அடியந்தாதி : (யா.) ஒரு செய்யுளின் இறுதி அடி அடுத்த செய்யுளின் முதல் அடியாகத் தொடுக்கப்படுவது. (யாப். வி. 52)
அடி யளபெடைத்தொடை : (யா.) அடிகள் தோறும் முதலில் அளபெடை வரத்தொடுப்பது. (காரிகை. உறுப். 18.)

அடியாகெதுகை : (யா.) அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

அடியியைபுத்தொடை : (யா.) அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வரத் தொடுப்பது. (காரிகை. உறுப். 18)

அடியெதுகைத்தொடை : (பார்க்க) அடியாகெதுகை.

அடிவரவு : பாட்டின் முதற்குறிப்பு.
அடிவரையறை ; பாட்டின் முதற்குறிப்பு வரிசை.
(மீனாட், சரித். 1, பக். 10)

அடுக்கியல் : (பார்க்க) அராகம்.

அடுத்துவரலுவமை : (அணி) உவமைக்கு உவமை. இதனைத் தொல்காப்பியர் ''அடுக்கிய தோற்றம்'' என்பர்.

''மதியத் தன்ன வாண்முகம் போலும்
பொறியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை''

எனத் தாமரைக்கு மதியமும், முகமும் உவமைக்கு உவமையாக்கப்பட்டது. இவ்வாறு உவமைக்கு உவமை கூறல் கூடாது என்பர் தொல்காப்பியர். ''அடுக்கிய தோற்றம் விடுத்தல பண்பே'' (தொல். உவ. 311.)

அடை : (யா) 1. கலிப்பாவின் உறுப்பாகிய தனிச் சொல். (தொல். பொ. 444) 2. பண்பு ''அடைசினை முதலென'' (தொல் பொ. 26) ‍ ''விசேடணம்''. ''ஈரடை முதலோடாதலும்'' (நன். 403).

அடை நேர்தல் : (அகம்) மகட்கொடை உடம்படுத்தல். 'தலைவர்க்கே நமை அடை நேர்ந்திலராயினும்.'
(குறிஞ்சிப் பாட்டு. 23 உரை)

அடை நிலை ; (யா.) கலிப்பாவின் உறுப்பாகிய தனிச் சொல். [தொல். பொ. 447]

அடைவு : (பார்க்க) நிரல்நிறையணி.

அட்டகணம் : (யா) செய்யுளில் முதற் சீராக வரும் கணம். அவை நிலக்கணம், நீர்க்கணம், சந்திரகணம், இந்திரகணம் அல்லது இயமானகணம், சூரியகணம், தீக்கணம், வாயுகணம். ஆகாசகணம் என எண் வகையுடையனவும் நல்லனவுந் தீயனவுமாய் வருவனவுமான முதற்சீர்கள்.

அட்ட மங்கலம் : சிற்றிலக்கிய வகை. கடவுளைப் பாடி, அக்கடவுள் காக்க என ஆசிரிய விருத்தம் எட்டில் அந்தாதித்துக் கூறுவது. (இலக். வி. பாட். பக். 481)

அட்ட வெற்றி : (புறம்) போர்வகைகள். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை வாகை என எண் வகைப் போர்கள். (யாழ். அக).

அட்டையாடல் : (புறம்) உடல் துண்டிக்கப்பட்ட விடத்தும் அட்டை போல வீரனுடல் வீரச்செயல் காட்டி ஆடுதல். (தொல். பொ. 71 உரை)

அணங்காட்டு : வெறியாட்டு

அணங்காடுதல் : தெய்வம் ஆவேசித்து ஆடுதல். "அணங்காடுத லன்றந்தோ" (திவ். திருவாய் 4. 6.5,)

அணங்கு : (பார்க்க) அணங்காட்டு

அணி இலக்கணம் : அலங்கார லக்ஷணம்.

அணிந்துரை : பாயிரம். நூலின் பெருமை முதலியன விளங்க அலங்கரித்துச் சொல்வது. அணிந்துரை எனினும் புனைந்துரை எனினும் ஒக்கும். (பார்க்க) பாயிரம்.

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல் : (அகம்) புணர்தல் நிகழ்வதற்கு முன் தலைவி தன் கொங்கை, குழல் முதலியவற்றில் அணிந்திருந்த முத்துமாலை போன்ற அணிகள், புணர்ச்சியினால் வேறுபட்டதனைத் தலைவன் தன் கையினால் வேறுபடு தோன்றாமல் அணிவன். அப்போது தலைவி தோழியால் அணியப்பட்ட அணி இவர் கையால் அணியும்போது வேறுபடுமென்றும் இவ்வேறுபாட்டைத் தோழி அறிந்தால் ஐயம் பிறக்கும் என்றும், நாணமடைந்து முகம் வேறுபடுவள். அவ்வேறுபாட்டை அறிந்து தலைவன் தலைவியைத் தெளிவிப்பான். (அகப். வி. அ.ப. க பக். 277)

அணியியல் : அணியிலக்கணம்

அணி : 1. அணியிலக்கணம், 2. செய்யுளணி, 3 ஓர் உவமஉருபு (சீவக. 2562 உரை) 4. படையுறுப்பு.

அணைசு : (இசை) வங்கியத்தின் முகத்திலமைப்பது. "வெண்கலத்தா லணைசு பண்ணி" [சிலப். 3.26. உரை].

அதரிடைச் செலவு :- (புறப்). புறப்பொருள். வெட்சிமறவரை அவர் சென்ற வழியே கரந்தை மறவர் தொடர்ந்து சென்றதைக் கூறும் புறத்துறை. இங்கு, வெட்சியார் வெட்சித்துறையாகிய செலவின் இது வேறாதல் தோன்ற அதரிடைச் செலவு என அடை புணர்க்கப்பட்டது. அதர்—வழி. (பு. வெ. கரந்தை. 3) இது கரந்தைத் திணையுள் அடங்கும்.

அதர்ப்படுதல் :- நெறிப்படுதல். அதர்ப்பட யாத்தல்.
(தொல். பொ. 652)

அதிகரணம் :- (1) ஒரு விடயத்தைக் குறித்த பகுதி. (சி. போ) சிற். 1 அவ) (2) ஏழாம வேற்றுமைப் பொருள். (பி. வி. 9). (3) ஆதாரம். (சி.சி. 1.65. சிவஞா).

அதிகாரமுறை :- நூற்பிரிவின் முறைவைப்பு.
(தொல். பொ. 666. உரை).

அதிகாரம் :- —நூற்பிரிவு. (பிங்).

அதிகிருதி :- செய்யுளில் ஓரடிக்கு ஒற்று நீக்கி இருபத்திரண் டெழுத்தாய் வரும் விருத்தம். (எ.டு).

தளையவி ருடபுவி நறைவிரி யும்பொழில் தடமலி துறைமாடே
வளைமொழி நித்தில மளநில வைத்தரு மயிலையி லெழுகாரே
யளவிய முற்கலி மழைபொழி யச்செயு மடறிகழ் புயவீரா
வளையம டக்கொடி யிடரொழி யப்புனை மலர்தலருளாயே
(வீரசோ. யாப். 33. உரை)

அதிக்கண்டம் :- (யா.) செய்யுட்சீர். (யாப்.வி.)

அதிசக்குவரி :- (பா). செய்யுளில் ஒற்றொழித்துப் பதினைந்து எழுத்தாய் வரும் விருத்தம். (எ.டு.)

அருண கிரண மேபோ லங்க ராகங் குலவுந்

தருண கலவி மாரன் றயங்கு சிந்தை யென்னோய்
தெருண முழைய தென்றா லதுவோ சேலாய் கண்ணார்
கருணை சிறிது பெய்யுங் காலை யுண்டே லினிதாம்'
(வீரசோ. யாப். 33 உரை)

அதிசய உவமை :- (அணி). மிகையுவமை.
(வீரசோ. அலங். 14. உரை)

அதிசயதி :- (பா) செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்துப் பதின்மூன்று எழுத்தாய் வரும் விருத்தம். (எ. டு)

"பரிசில வெம்மொடு போது மம்பு மென்றாங்
கரிசில வேந்தி யகன்று நீண்ட கண்மேற்
குரிசிலை யன்று கனற்றி வெந்த காமன்
கருசிலை போற்புரு வத்தாள் காட்சி மிகாள்"
(வீரசோ. யாப். 33. உரை)

அதிதிருதி :- (பா). செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்துப் பததொன்பது எழுத்தாய் வரும் விருத்தம்.
(எ.டு)

பாரா வார மருங்கு லாவு மொலியினொடு பரவை கொண்டே
சாரா வார மளைந்து தங்குந் தொன்னுமர் தெள்ளுபுகார்
மன்னவர்

வீரா வார மணிந்த வாழிவலவர் மென்பூங் கரும்பினறுங்
காரா வார மருள ராய கவின்பூ மலரொண் சூடாமணி
(வீரசோ. யாப். 33. உரை)

அதியாடி :- (பா). செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்துப் பதினேழு எழுத்தாய் வரும் விருத்தம். (எ.டு).

தேனார் பொழுதிற் றிருந்தா தேநீ சிந்ைதகொண் டேவே
(றாரிற்

போனார் தேருர்சுவடு புதையல் வாழிபொங் கோத மேலை
வானூர் மாவுங் கிரியு முதவா வாரல் கொடுவாய் மேவிக்
கானார் சோலைத் தருவிலு லாவுங் காவல் யாவ ருளரே
(வீரசோ. யாப். 33. உரை)

அதியுத்தம் :- மிகைபடக் கூறுகை.

அதியுத்தம்:- (பா). செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்து இரண்டு எழுத்தாய் வரும் விருத்தம். இது வடமொழி விதி.
(எ. டு)

போதி
யாதி
பாத
மோது

(வீரசோ. யாப். 33 உரை)

அந்தரி :- (இசை) தோற்கருவி வகை. (சிலப். 3.27. உரை)

அந்தாதி :- (பார்க்க) அந்தாதித்தொடை.

அந்தாதித்தொடை :- (யா.) அடிதோறும் இறுதிக்கண் நின்ற சீரும், அசையும், எழுத்தும், மற்ற அடிக்கு முதலாகத் தொடுப்பது. (இலக். வி. 724).

அந்தாதியுவமை :- (அணி.) இறுதிச் சொல்லே மடக்கி முதலாகக் கொண்டு உவமை பெறக் கூறும் அணி. (மாறன. 101. உரை)

அந்தாளி : (இசை) பண் வகை. குறிஞ்சி யாழ்த்திற வகை முப்பத்திரண்டில் ஒன்று. (த. பே. அக)

அந்தாளிக் குறிஞ்சி : (இசை) குறிஞ்சி யாழ்த்திறவகை. (தேவா)

அந்தாளிப்பாடை : (இசை) பாலை யாழ்த்திறவகை, ஒரு பண்.
(த. பே. அக)

அந்தாளிப்பண் : (பார்க்க) அந்தாளிப்பாடை.

அந்தி : (இசை) பாலை யாழ்த்திறவகை (பிங்)

அபயவத்தம் : (கூ) இணைக்கை லணா (சிலப், 3.18. உரை)

அபாயவேது : (பார்க்க) ஏதுவணி.

அபிகிருதி : (பா) செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்து இருபத்தைந்து எழுத்தால் வரும் விருத்தம். (எ டு.)

> அங்குலிய மொன்றுபுன லாழ்தருகி ணற்றில் விழ
> வந்தமுனி தேடுமி னொனாப்
> புங்கமொடு புங்கமுற வெய்தவ னெடுத்தமை
> புகன்றருகு நின்றவரை நீ
> ரிங்கித னிலைத்தொகைகள் யாவுமுரு வப்பகழி
> யேவுமினெ னாமுன் விசயன்
> துங்கவில் வளைத்தொரு கணத்தினில் வடத்திலை
> துளைத்தனனி லக்கிறொடை யால்.
>
> (வீரசோ. யாப். 33 உரை)

அபிநயக்கை : (கூ), கையாற் செய்யும் அபிநயம்.

அபிநயசிரம் : (கூ), தலையாற் செய்யும் அபிநயம்,

அபிநயம் : (கூ) மனக் கருத்தைக் குறிப்பாய் விளக்கும் அங்கச் செய்கை. ''மகளிர் தங்களபிநயம்'' [இரகு, தசரதன். சா. 38]

அபிநய விடுகதை : ஒரு சொல்லில் பல பிரிவுகளை அபிநயத்தாற் காட்டும் பிதிர். (Pond.)

அபூத உவமை : (அணி) இல்பொருளுவமை அணி

அமலை : [புறப்] 1 பட்ட பகை வேந்தனைச் சூழ்ந்து நின்று வீரர் திரண்டு ஆடும் ஆட்டம். ''அட்ட வேந்தனை வாளோராடு மமலையும்''. 2, பட்ட பகை வேந்தனை நெருங்கி வீரர் திரண்டு பாடும் பாட்டு. (தொல், பொ. 72. இளம்பூ)

அமுதர் ; முல்லை நில மக்கள். [பிங்.]

அமுதவெழுத்து : காவியத்தின் முதற் செய்யுள் முதன் மொழியிலும், தசாங்கத் தயலிலும் வருவதற்குரிய சுபவெழுத்து. கசதபநமவ என்னும் ஏழொடும் அகரம் இகரம் உகரம் எகரம்

ஆகிய நான்கு உயிரும் முதன் மொழிக்கு ஆகும் அமுத வெழுத்துக்கள் (இலக். வி 779)

அம் : (இசை) ஏழிசை யாதியளவு.

அம்பல் : 1. சிலரறிந்து புறங்கூறும் மொழி (தொல். பொ. 225) 2. பழிச்சொல் (பிங்)

அம்பாவாடல் : தை நீராடல். "அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர" (பரிபா. 11. 18)

அம்புலிப் பருவம் : (சிற்.) பிள்ளைத் தமிழ்ப் பருவங்கள் பத்துனுள் ஒன்று. பாட்டுடைத் தலைமை ஏற்கும் பிள்ளையின் பதினைந்தாந் திங்களிற் பாடப் படுவது இப்பருவத்தில் குழந்தை அம்புலியோடு விளையாடுதலை விரும்புதலால் அம்புலியைக் குழந்தையிடம் வருமாறு சாம தான பேத தண்டங்களால வசப்படுத்தி அழைத்தல, இப்பருவமே பிள்ளைத் தமிழில் மிகச் சிறந்த பருவம் என்பர். "அம்புலி புலவர்க்குப் புலி" என்று கூறும் வழக்கு இப்பருவத்தின் தனிச் சிறப்பைப் புலப்படுத்தி நிற்கிறது. அசநானூற்றில்-54 வது செய்யுளில் தாய ஒருத்தி திங்களை நோக்கித் "திங்களே! பொன்னாலாகிய தாலியினை அணிந்த என் மகனை நினைந்து நீ யிங்கு வந்தால் உனக்கும் பால் தருவேன்" என்று அமைந்துள்ள செய்தி சிற்றிலக்கியப் பிள்ளைத்தமிழில் உள்ள அம்புலிப்பருவத்திற்குத் தோற்றுவாயாக இருக்கலாம். (எட்டுத் தொகைச் செல்வம். பக். 44)

அம்போதரங்கம் :- (யா.) கலிப்பாவின் உறுப்புக்களுள் ஒன்று. தாழிசைக்கும் தனிச் சொற்கும் நடுவிலோ அல்லது அராகத்திற்கும் தனிச் சொற்கும் நடுவிலோ வரப்பெறும். (தரங்கம்—அலை) நீரலையானது கடலிடைத் தோன்றும் போது உயர்ந்தும குறுகியும் காணப்படும; கரைக்கு வர வர அகன்றும், விரிந்தும குறைந்தும் வரப்பெறும்; அதுபோல நாற்சீரடியும் இருசீரடியும் ஆகிய அசையடிகளைப் பெற்று வருவது. அசையடி, பிரிந்திசை, குறள், சொற்சீரடி, எண் என்பன இதன் வேறு பெயர்கள்

நாற்சீரடி இரண்டு கொண்ட அம்போதரங்கம் பேரெண் எனவும், நாற்சீர் ஓரடி நான்கு கொண்ட அம்போதரங்கம் அளவெண் எனவும், முச்சீரடி நான்கோ, எட்டோ கொண்ட அம்போ-தரங்கம் இடையெண் எனவும், இருசீர் அடி எட்டோ, பதினாறோகொண்ட அம்போதரங்கம் சிற்றெண் எனவும் பெயர் பெறும். (காரிகை. அ. ப. பக். 74)

அம்போதரங்க ஒத்தாழிசை :- (பார்க்க) ஒத்தாழிசை.

அம்போதரங்க ஒரு போகு :- (யா) ஒத்தாழிசைக் கலிப்பா வகை-யுள் ஒன்று. (பாப்பா. 105)

அம்போதி :- பாட்டின் உட்பொருள் (சங், அக)

அம்மனைப்பாட்டு :- அம்மானை ஆட்டத்தில் பாடும் பாட்டு.
(தொல். பொ. 461. உரை)

அம்மனை மடக்கு :- கலித்தாழிசையால் வினா விடையாக மகளிர் இருவர் இருபொருள்படக் கூறுவதாகக் இயற்றும் பாட்டு.
(மாறனு. 267).

அம்மானார் :- அம்மானைப் பிரபந்தம். "சீரமர் அம்மானார் முசிந்தது முற்றும்" (தஞ் சரசு-). 467)

அம்மானை :- (1) பிள்ளைத்தமிழ்ப் பருவம் பத்தனுள் ஒன்று, பரு-வம்பத்தனுள் இறுதிக்கண் கூறப்பெறும் சிறுபறை முழக்கலும் சிற்றில் சிதைத்தலும், சிறுதேர் உருட்டலும் பெண்பாற்கு ஆகா-"பின்னைய மூன்றும் பேதையர்க்கு ஆகா" ஆண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதிக்கண் அமையும் அம்மூன்று பருவங்கட்குப் பதி-லாகக் கழங்கு, அம்மானை ஊசல் என மூவேறு பருவங்கள் பெண்பாற்கு அமையும். கழங்கு, அம்மானை, ஊசல் பாடுங்-கவிகளால் பாடப்பட்டு, வகுப்பானும், அகவல் விருத்தத்தானும் சுற்றமுறப் பாடப்பெறும்.

அம்மானைப் பருவம் பிள்ளையின் பத்தொன்பதாம் திங்-களிற் பாடப்பெறும்.

(2) அம்மானை, கலம்பக உறுப்புக்களில் ஒன்றாகும். மகளிர் மூவர் தம்முள் உறழ்ந்து அம்மானை பாடுவதைக் கூறுவது. முதல் இரண்டடியும், அடுத்த இரண்டடியும், ஈற்றடியும் தனித்தனியே ஒவ்வொருத்தி கூற்றாக அமையும்.

அம்மானைப் பருவம் :- (பார்க்க) அம்மானை.

அம்மானை வரி :- மகளிர் அம்மானை ஆடும்போது பாடும் பாட்டு (சிலப். 29)

அம்மை :- நூல்வனப்புகளுள் ஒன்று. (தொல். பொ. 547) சில வாய், மெல்லியவாய சொற்களால் ஒன்றியவாய பொருண்மேல் சிலவடியால் சொல்லப் பெறுவது.

அம்ஸஸ்வரம் :- இராகத்தில் முக்கியமாக ஒலிக்க வேண்டிய சுரம (Mus. of Ind. P. 39)

அயன்மணமுரைத்தல் ;- (அகம்) தலைவற்குத் தோழி படைத்து மொழிந்து பிறரும் மணம் வேண்டிக் காப்பணியக் கருதுவரென்று கூறும் அகத்துறை. (களவியற். 113).

அயிர்த்துரைத்தல் :- (அகம்). தலைமகளின் கண்சிவப்பு முதலிய-வற்றைத் தோழிகண்டு ஐயங் கொள்வதைக் கூறும் அகத்துறை. (களவியற். 150)

அயிர்ப்பு :- (இசை). குறிஞ்சி யாழ்த்திறவகை. (பிங்.)

அயிற்பெண்டு :- (கூ). வரிக் கூத்துவகை. (சிலப். 3.13. உரை)

அயுத்தவேது :- சித்திரவேது வகை. (பார்க்க). ஏதுவணி.

அரங்கக் கூத்தி :- (கூ). நாடக சாலையில் கூத்தாடும் பெண் "அரங்கக் கூத்தி சென்றையங் கொண்டதும்" (மணி. 24. 22)

அரங்கபூசை :- (1) (கூ) நாடகத் தொடக்கத்திற் செய்யும் பூசை. (2) (புறம்). போர்த் தொடக்கத்துச் செய்யும் களப்பூசை

அரங்கபூமி :- (கூத்து) நடிக்கும் கூடம். அரங்க மேடை, நாடகம் நடிக்கும் இடம்.

அரங்கம் :- (கூ) (பார்க்க) அரங்கபூமி.

அரங்கேற்றம் :- (பார்க்க) அரங்கேற்றுதல்

அரங்கேற்றுதல் :- புது நூல், நடனம், முதலியவற்றை முதன்முறை சபையில் ஏற்கச் செய்தல். "அரங்கேற்று காதை" (சிலப். 3).

அரச உழிஞை :- (புறப்.). உழிஞை வேந்தனின் புகழைப் பாராட்டிக் கூறும் புறத்துறை. இது உழிஞைத் திணையுள் அடங்கும். (பு. வெ. உழிஞை. 6). இதனை "உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்" என்பர் தொல்காப்பியர். (தொல். புறத் 68).

அரசமுல்லை ;- (புறப்). அரசன் தன்மை கூறும் புறத்துறை (பு. வெ. 8 17)

அரச வாகை :- (புறப்) வேந்தன் இயல்பு கூறும் புறத்துறை (பு. வெ, 8. 3)

அரசர்பக்கம் :- (புறப்,). ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய்தல், (தொல். பொ. 75).

அரசர்பா :- (பா) ஆசிரியப்பா. (இலக். வி. 873).

அரசன் விருத்தம் :- (1) பிரபந்தவகை. பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும், கலித்தாழிசையுமாக மலை, கடல், நாட்டு வருணனையும், நில வருணனையும், வாள் மங்கலமும், தோள்-மங்கலமும் பாடிமுடிப்பது. இது முடிபுனைந்த வேந்தர்க்கு ஆகும் (இலக். வி. பாட். 482)

அரடா :- அணியுறுப்பு வகை.

அரதனமாலை :- (அணி) சொல்லத் தொடங்கிய பொருள்களை முன்பின் முறைவழுவாது வரச் சொல்லுதல்.

(எ. டு).

உனதுபிர தாபமுயி ரிழந்த தெவ்வர்
மனைவியரானோருறுப்பின் மண்ணும் -சினவிழியின்
நாராமுநெஞ் சிற்றீயு நாசியிற்கா லும்மறிவின்
ஆருப வெளியுருவு மாம்.

இதில் ஐம்பூதங்களும் முறைபிறழாமல் சொல்லப்பட்டன. இவ்வணி வடமொழியில் ரத்னாவளியலங்காரம் என வழங்கப் பெறும் (அணியி. 74)

அரந்தை : (இசை) ஓர் இராகம். குறிஞ்சிப்பண்.

அரவம் : (புறப்.) படை எழுச்சி (வீரசோ. பொருட். 16 உரை)

அரவுச் சக்கரம் : (பா), சித்திரக் கவிவகை (யாப். வி. 497)

அரற்றல் : (இசை) யாழ் நரம்போசை (பிங்.)

அரற்று : (இசை), குறிஞ்சி யாழ்த்திறவகை (திவா).

அராகம் : (பா) கலிப்பா வகைகளின் உறுப்புக்களுள் ஒன்று. கலிப்பாவின் துணை உறுப்பு. முடுகிய ஓசையுடையது; முடுகியல், வண்ணம், அடுக்கியல் என்பன இதன் வேறு பெயர்கள். அளவடி முதலிய எல்லா அடியாலும் அமையும். நான்கடிச் சிறுமையும், எட்டடிப் பெருமையும் பெறும். தாழிசைக்குப் பின்னரும் அம்போதரங்கத்தின் முன்னரும் வரப் பெறும். (காரிகை. அ. ப. பக். 74)

அராளகடாமுகம் : (கூ) நிருத்தக்கை முப்பதனுள் ஒன்று (சிலப். 3. 13. பக். 81. கீழ்க்குறிப்பு).

அராளம் : (கூ) இணையா வினைக்கை வகை (சிலப். 3. 18 உரை).

அரிகண்டம் பாடுதல் : கழுத்திற் கத்தி கட்டி எதிரி கொடுக்கும சமத்திற்கு இணங்கப் பாடுதல்.

அரிகிணை : (இசை) கிணைப்பறை வகை. மர வயிரத்தால் செய்யப்பட்ட ஒரு வகை மருத நில வாத்தியக் கருவி. (த. பே. அக).

அரிமா நோக்கு : சூத்திர நிலை நான்கனுள் ஒன்று. சிங்கம் உடலைத் திருப்பாமல் முன்னும் பின்னும் பார்ப்பது போல ஒரு சூத்திரப் பொருள் முன்னும் பின்னுமுள்ள சூத்திரப் பொருளோடு இயைபுடைத்தாதல். (நன். 19. உரை).

அரிமா நோக்கம் : (பார்க்க), அரிமா நோக்கு.

அரியளா மெனல் : (அகம்), தலைவியின் மனநிலையறிதல், அருமையெனத் தோழி தலைமகற்குக் கூறும் அகப்பொருட்டுறை (களவியற்.' 58).

அரிவை : எழுவகைப் பெண்டிருள் ஒரு வகை, இருபது வயது முதல் இருபத்தைந்து வயதிற்குட்பட்ட பெண் [பிங்]

அருகியற் குறிஞ்சி : [இசை] - ஒரு பண். ஓரிராகம், ஓரிசை. (த பே. அக.)

அருகியல் : (இசை) - சாதிப் பெரும்பண் வகை.

அருகியற் செவ்வழி : (பார்க்க). அருகியற் குறிஞ்சி.

அருகியற் பாலை : [இசை]- ஓரிராகம், பாலைப் பண். (த. பே. அக.)

அருகியன் மருதம் : [இசை]- பண் வகை. [சிலப். 8.40] குரல். குரலாய செம்பாலை. [த. பே. அக.]

அருகு சாதி : [இசை]- ஆசான் சாதியாழ்த் திறங்களுள் ஒன்று [சிலப். 13. 112. உரை.]

அருங்கவி : சித்திரக் கவிப் புலவன் [யாப். வி. 96. பக். 513].

அருட் குண முரைத்தல் : [அகம்]. இயற்கைப் புணர்ச்சி வகை. இயற்பழியாமென்று நினைந்தோமென்று கூறக் கேட்ட தலைமகள், இது நம் தோழியறியின் என்னாகுமோ என்று பிரிவுட்கொண்டு பிரிவாற்றாது வருந்தா நிற்ப, அக்குறிப்பறிந்து அவள்

பிரிவுடம்படுவது காரணமாகத் தலைமகள் யாம் பிரிந்தே மாயினும் பிரிவில்லையெனத் தெய்வத்தினருள கூறியது.
[திருக்கோ. இ. பு. 14]

அருட்பா : [பா]- இறையருளால் பாடப் பெற்ற செய்யுள்.

அருட்புரி : [இசை]- குறிஞ்சி யாழ்த்திற வகை. [பிங்].

அருத்த வாதம் : புனைந்துரை.

அருமவதி : [இசை]- ஒரு பண். ஓரிராகம். ஓரிசை.
[த. பே. அக.]

அருமதாளம் : [இசை]- ஒன்பது வகைத் தாளத்தினொன்று
[திவா.]

அருமையறிதல் : [அகம்]- இயற்கைப் புணர்ச்சி வகை. பிரிவு கண்டு கலங்கிய தலைமகளை வற்புறுத்தி ஆடிடத்துய்த்துச் சென்ற தலைமகன் ஆயவெள்ளத்தையும், அவ்விடத்தையும் நோக்கி,' இவளை யானெய்தினே னென்பது மாயமோ? கனவோ? இன்னதென்று அறியேன்; இனி இவள் நமக்கு எய்துதற்கு அரியவள்' என அவளது அருமையறிந்து வருந்தியது.
[திருக்கோ. இ. பு. 17]

அரும்பாலை : [இசை]- பாலைப் பண் வகை. [பிங்]. ஓரிசை.

அரும்பொருள் வினை நிலை : அசுரமணம் [இறை 1. உரை.]

அருவி : பெயர் கூறப்படாத கிழவி தலைமகன்.
" உருவாகிய .... தலைவனை ''யருவி
கூறுதலானந்தம்மே. [யாப். வி. பக். 525]

அருளியல் கிளத்தல் : [அகம்]. தலைவன் தலைவியை அடையமடலேறுவேன் எனக் கூற, பாங்கி, மடலேறப் பனையை வெட்டுதல், அதன்கண் தங்கிய பறவைகளின் முட்டையைச் சிதைத்தல், பார்ப்புகளை வதைத்தல், முதலிய பாவங்கள் சூழ்தலின் அருளுடையார்க்கு ஆகாதென்று கூறுதல்.
[அ. பொ.வி. 280].

அருளொடு நீங்கல் : [புறப்]. உலகின் துன்பத்தைப் பார்த்துப் பற்று நீங்கும் புறத்துறை. [பு. வெ. 8. 34.]

அர்த்த பிருட்டகம் : [கூ]. கூத்தின் அங்கக் கிரியைகளுள் ஒன்று. [சிலப்.]பக். 81.]

அலகிடல் : [யா.] அளவிடுதல். செய்யுள் அசையைக் கணக்கிடுதல். [இலக். வி. 752.]

அலகிருக்கை வெண்பா : [பா]. மிறைக்கவி வகை. [யாப். வி. 510].

அலங்கார பஞ்சகம் : சிற்றிலக்கிய வகை. வெண்பா கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், இவ்வகையே மாறி நூறு [100] செய்யுள் அந்தாதித்துப் பாடுவது. [இலக். வி. பாட். பக். 482].

அலங்கார பஞ்சரம் : சிற்றிலக்கிய வகை வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம், சந்தவிருத்தம் ஆகிய இவ்வைந்தும் அந்தாதியாக வரப் பாடப் பெறுவது. [இலக். வி. பாட். 844.]

அலங்காரம் : செய்யுளணி. இசையுறுப்பு வகை.

அலகு ; சுருதி அளவு.

அலரறிவுறுத்தல் : [அகம்]. ஊரில் அலர் பரவியுள்ளமையைத் தலைவனுக்கு அறிவுறுத்தல். [அ. பொ. வி. பக். 282.]

அலர் : [அகம்] பலரும் அறிந்து கூறும் புறங்கூற்று [குறள். 1142]

அலர்க் குறி : [அகம்]. குறியிடை வந்த தலைவன் தலைவியைக் காணாத நிலையில் தான் வந்ததை அவள் அறிய விரும்பிப் பூவொன்றை அடையாளமாக வைத்துச் சென்றது குறிக்கும் அகத்துறை. [தனிப்பா. ii 413 உரை].

அலர் பார்த்துற்ற அச்சக் கிளவி : [அகம்]. ஊராரும், சேரியாரும் சொல்லும் அலரைக் கருதி அதனாலுற்ற அச்சத்தால் தலைமகள் கூறுதல். அலர் - பழிச்சொல். [அ. பொ. வி. அ. ப. 282].

அலாபத்திரம் : [கூ]- இணையா வினைக்கை வகை.
[சிலப். 3. 18. உரை]

அலாரிப்பு ; [கூ]- கூத்தின் தொடக்கத்தில் பாடும் சொற்கட்டு.

அலிக்கை : [கூ]- அலிச் செயல் காட்டும் அபிநயக்கை.
[சிலப். 3. 18. உரை].

அல்பத்துவம் : [இசை]- சிறுமை. ஓர் இராகத்தில் சிறுபான்மை உபயோகிக்கப்படும் சுரம்.

அல்லகுறி ; [அகம்]- குறிபிழைபடுதல் [குறி அல்ல > அல்ல குறி] தலைமகன் இரவுக்கண் தன் வருகையை உணர்த்தப் புள் எழுப்பல், புன்னைக்காய் சொரிதல் போன்ற அடையாளக் குறிகளைச் செய்வான். சில நேரங்களில் இக்குறி இயற்கையாகவே நிகழ்தலுமுண்டு [நம்பியக. பக். 111] தலை மகனா-லன்றிப் பிறி தொன்றினால் நிகழும் குறி.
[நம்பியகப். 159]

அல்ல குறிப்படுதல் : [அகம்] இரவுக் குறியிடத்துக் குறியில்லாத குறியிலே மயங்குதல். [தொல். பொ. 134. உரை.]

அல்லகுறியறிவித்தல் : [அகம்]- இரவுக் குறிக்கண் அல்ல குறிப்-பட்டுத் தலைவியும், தோழியும் மீண்ட செய்தியை மறு நாள் தலைவன் சிறைப்புறத்தே வந்து நிற்புழி அவனுக்கு அறிவித்தற் பொருட்டு, அவன் கேட்பத் தோழி தலைவிக்குக் கூறுவாள் போன்று அக்குற்றத்தினை அன்னப் பறவையின் மேல் ஏற்றிக் கூறுவது. [கல்லாடம். பக். 287].

அல்லிப்பாவை : [கூ]- அல்லியக் கூத்தில் ஆட்டும் பிரதிமை.
[புறநா. 33].

அல்லியம் ; [கூ]- மாயோனாடலுள் ஒன்று. [சிலப். 6.48].

அவகீதம் : [இசை]- வசைப்பாட்டு [நாதார்த்த].

அவசரப் பாடல் : அவசியமாக நினைவில் வைக்க வேண்டும் பாடல்கள். [மீனா. சரித். i. 10.]

அவதாளம் ; [இசை] தாளப்பிசகு, "தாளவியல்பு பொலிவு பெற அவதாள நீங்க" [சிலப். 3, 135 6. உரை]

அவநுதி : [அணி.] - ஒன்றன் தன்மையை மறுத்து வேறொன்றன் தன்மையை ஏற்றிக் கூறும் அணி. [தண்டி. 37].

அவலச்சுவை : சோகரசம் [சிலப். 3. 13. உரை.]

அவயவங் கூறல் : [அகம்] - தோழியை மதியுடம்படுத்த தலைவன் தலைவியின் அடையாளங்கள் இவை என தோழிக்குக் கூறுதல். [கல்லாடம். பக். 327.]

அவலந்தவிநயம் : [கூ] - சோகரசம் தோன்றும் அபிநயம். "அவலத்த விநய மறிவரக்கிளப்பின்,...புலவர்" (சிலப். 3.13; உரை)

அவலம் : அழுகை. சோகரசம். குற்றம.

அவவிடி : [கூ] - வரிக்கூத்து வகை. [சிலப். 3. 13 உரை]

அவள் குறிப்பறிதல் : [அகம்] - தலைமகனது நினைவறிந்த தோழி இவளிடத்து இவன் நினைவே யன்றி இவளிடத்து இவன் நினைவு முண்டோவெனத் தலைமகளை நோக்க அவன் முகத்தேயும் அவன் செயல் புலப்படக்கண்டு, இவ்வொண்ணுதல் குறிப்பு மொன்றுடைத்தென அவளினைவுந் துணிந்துணரா நிற்றல்.]திருக்கோ. பக். 132.]

அறிவு நாடல் : [அகம்] - இவன்யாவனோ என்று கூறா நின்ற தோழி பேராராய்ச்சியளாதலின், அவன் கூறிய வழியே நாடாது வந்து தங்களிடைக்கே முடிதலின், இவ்வையர் வார்த்தை இருந்தவாற்றான் ஆழமுடைத்தாயிருந்தது என்று அவளினை வறியா நிற்றல். [திருக்கோ.பக். 123]

அவன் குறிப்பறிதல் : [அகம்] - குறையுறா நின்றவன் முகத்தே தன்னினைவு செயல்புலப்படக் கண்டு இவ்வண்ணல் குறிப்பு இவளிடத்தேயெனத் தோழி தலைமகனது நினைவு துணிந்து-ணரா நிற்றல். [திருக்கோ. பக். 130]

அவக்ஷேபணம் : (கூ) கூத்தின் அங்கக் திரியைகளுள் ஒன்று (சிலப். பக். 21)

அவிநயக்கூத்து : (கூ) - பாடற் பொருளைக் கையாற் காட்டியாகும் கூத்து (சிலப். பக் 3.12. உரை)

அவிப்பலி : (புறப்) புறப்பொருள் துறை. தம் வேந்தனுக்கு உற்றுழிப் போர்க் களத்தின் கண் செஞ்சோற்றுக் கடன் நினைந்து மறவர்தம் உயிரை வழங்கியது பற்றிக் கூறும் வாகைத்துறை. [பு. வெ. வாகை. 30] ஆவிப் பலி என்பது அவிபபலி எனக் குறுகிற்று. இதனைத் தொல்காப்பியர்,

ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றோடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி'' என்பர்.
[தொல். பொ. புறத். 75.

அவையடக்கம் : அவையோர்க்கு வழிபடு கிளவி கூறுதல். [சீவக. 4 உரை]

அவையமுல்லை : [புறப்] - புறப்பொருள் துறை. அறங்கூர் அவையத்துச் சான்றோர் இயல்பினைக் கூறும் வாகைத்துறை அவையத்து வாகையுடையோர் ஆவர். [பு. வெ. வாகை. 15] இதனை ''எட்டு வகை நுதலிய அவையத் தானும்'' என்பர் தொல்காப்பியர். [தொல். பொ. புறத். 75]. எட்டு வகையாவன. 1. குடிப்பிறப்பு, 2. கல்வி, 3. ஒழுக்கம், 4. வாய்மை, 5. தூய்மை, 6. நடுவு நிலைமை, 7. அழுக்காறாமை, 8. அவாவின்மை.

அவ்விடத் தேகல் : [அகம்] - செவ்வி செப்பக் கேட்ட தலைவன் இவ்வாறு காணப்பட்டது உண்டாயின் அது என்றுபோய்த் தான் அவ்விடம் நோக்கிச் சொல்லியது [திருக்கோ. பக். 78.

அவ்வியாப்தி : இலக்கியத்தின் ஏக தேச இலக்கணத்தைச் சொல்லா யிருக்கும் தோஷம். [தருக்க. சங். 6.]

அழகு : நூல்வனப்பு எட்டனுள் ஒன்று. செய்யுட் சொல்லாகிய திரிசொற்களால் ஓசை இனிதாகப் புணர்க்கப் படுவது. [தொல. 1492 உரை.]

அழிபடைதாங்கல் : [புறப்]- உழிஞை மறவரால் தமது படை அழிந்தமை பொறாது நொச்சி மறவர் சினந்து தமது பதில் காத்தலில் கொண்ட உறுதி பற்றிக் கூறும் புறத்துறை இது நொச்சித் திணைக்கண் அடங்கும். [பு. வெ. நொச்சி. 8]

அழிவழக்கு ; இழிந்தோர் வழக்கு. [தொ. எழுத். மொழி. 31]

அழிவு பாட்டு அபாவம் : [பார்க்க] ஏதுவணி.

அழுங்கு : [இசை]- பாலையாழ்த்திற வகை. [பிங்].

அழுங்கு வித்தல் : விலக்குதல [குறள். 154. உரை] துன்புறுத்துதல் "அன்புருகு நெஞ்சம அழுங்கு விக்கும்" [சீவக. 2051]

அழுவம் : [இசை] முரசு.

அழுகைப் பூசல் : அழுகைப் பேரொலி. [மணி. 6. 73.]

அளபெடை வண்ணம் : [பா]- அளபெடை மிகுந்து வரும் சந்தம். [தொல். பொ. 531.]

அளவடி : [யா.]- நாற்சீரடி. (காரிகை. உறுப். 12. உரை.)

அளவடிச் சந்தம் :- (பா) நான்கு முதல் இருபத்தாறு எழுத்து வரை வந்து அளவொவ்வாத அடிகளுடைய செய்யுள் வகை. (யாப். வி. 95. பக் 447.)

அளவழித்தாண்டகம் :- (பா). இருபத்தேழு எழுத்து முதலாக வந்து அளவொவ்வாத அடிகளுடைய செய்யுள் வகை (யாப். வி 95. பக் 447)

அளவியற்சந்தம் :- [பா]. நான்கு முதல் இருபத்தாறு எழுத்து வரை அளவொத்து வரும் அடிகளை உடைய செய்யுள் வகை. [யாப். வி. 95. பக். 447]

அளவியற்றாண்டகம் :- (பா) இருபத்தேழு எழுத்து முதலாக வரும் அளபொருந்த அடிகளையுடைய செய்யுள் வகை.
(யாப். வி. 95 பக் 447).

அளவெண் : (யா.) நாற்சீர் ஓரடியாய் வரும். அம்போதரங்க உறுப்பு வகை. (காரிகை. செய். 10 உரை)

அளைமறிபாப்பு :- பொருள் கோள்வகை. செய்யுட்கண் ஈற்றில் நின்ற சொல இடையிலும் முதலிலும் சென்று பொருள் கொள்ளுட முறை (அளை—புற்று; பாப்பு—பாம்பு) புற்றினுள் பாம்பு தலைகீழாக நுழைந்து, பின் மடிந்து உடலோடும் வாலோடும் ஒட்டி மேல் வருதல்போல ஈற்று நின்ற சொல் இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள்தருவது.

முதலில் உள்ள சொல்லை இடையிலும், இறுதியிலும் ஒட்டிப பொருள் முடித்தல் என்பர், நேமிநாத உரைகாரர் (நேமி. சொல். 68. உரை) (எ. டு.) யாப். வி. ஒழிபு. சூ. 2. உரை மேற்கோள் காண்க.

அறக்களவழி ; [புறப்]- வேளாண் தொழிலைக் கூறும் புறத்துறை. (மாறன. 120. உரை).

அறத்தொடு நிற்றல்: (அகப்)- கற்பென்னும் கடைப் பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப் படுத்தல். (தமிழ்க் காதல், வ. சு. ப. மா.) களவினை வெளிப்படுத்தலாவது :- தலைவி பாங்கிக்கும், பாங்கி செவிலிக்கும்; செவிலி நற்றாய்க்கும்; நற்றாய் தந்தை, தனயர்க்கும் அறத்தொடு நிற்றலாகும். இது முன்னிலை, முன்னிலைப் புறமொழி என இரண்டு வகையினை உடையது. இதன் விரியாவன.

1. கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.
2. தலைமகள் கலுழ்தற் காரணங் கூறல்.
3. தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்.
4. இறைவி தலைவனிகந்தமை யியம்பல்.
5. பாங்கியிற் பழித்தல்.

6. தலைமகளியற்பட மொழிதல்.
7. தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்.
8. இல்வயிற் செறித்தமை இயம்பல்.
9. செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்.
10. எறிவளை வேற்றுமைக் கேது வினாதல்.
11. பாங்கி வெறி விலக்கல்.
12. வெறி விலக்கியவழி பாங்கியைச் செவிலி வினாதல்.
13. பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.
14. புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.
15. களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.
16. தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்.
17. செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியால் அறத்தொடு நிற்றல்.

அறத்தொடு நிற்றல் என்ற நுண்துறை பற்றி ஐம்பத்தொரு [51] செய்யுட்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன.

அறப்பாடல் : அறம்பாடல்; வசைபாடல். கேடு விளைவிக்கும் சொற்பயிலும் பாட்டு.

அறம்பாடுதல் : தீச்சொற்பட்டுத் தீப்பயனுண்டாகப் பாடுதல்

அறிமடம் : அறிந்தும் அறியாதது போல் நடந்து கொள்ளல் அறிமடமும் சான்றோர்க் கணி. (பழமொழி). விளையாடும் பருவத்து நிகழும் அறியாமை.

அறியாள் போன்று நினைவு கேட்டல் : (அகம்)- இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தோழியை மதியுடம் படுக்கும் தலைவன் தலைவிக்கு வழங்குவதற்குத் தழை கொணர்ந்து 'இதை ஏற்றுக் கொள்க!' எனத் தோழியை வேண்டா நிற்ப அது கேட்ட தோழி அத்தழையை இவன் வருந்தா நிற்கும் பொருட்டு ஏற்றுக் கொள்வேன் எனத் தன்னுட் கருதி 'ஐய' என்னுடைய தோழியர்

பலர்; அவருள் யாருக்கு நீ இத்தழை கொணர்ந்தனை?" எனத் தான் அறியாதாள் போல அவன் நினைவினை வினவியது.
(கல்லாடம். பக் 248).

அறிவறிவுறுத்தல் : [அகம்]- தோழி தலைமகளறிவு தலைமகனுக்கு அறிவுறுத்தல். (அ. பொ. வி. பக் 282.)

அறிவன்வாகை : (புறப்)- புறப்பொருள் துறை. முக்கால நிகழ்ச்சிகளையும் (இறப்பு நிகழ்வு. எதிர்வு.) உணர்ந்துரைக்கும் அறிவனின் தன்மையைப் பற்றிக் கூறும் வாகைத்துறை. [பு. வெ. வாகை. 1, 8.)

' மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும் "
என்பது தொல்காப்பியம். [தொல், பொ புறத்.வாகை-74]

அறுத்திசைப்பு : (யா)- யாப்புவழு. நாலசைப் பொதுச்சீர் பலவும் வந்து வஞ்சி தூங்கிசைத் தன்மையுடையது.
(யாப். வி. ஒழிபு.)

அனுட்டுப்பு : [பா]- செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்து எட்டு எழுத்தாய் வரும் விருத்தம்.

[எ. டு] " அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாதமல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாதமேவார் "
(வீரசோ. யாப். 33 உரை.)

அனுத்துருத பஞ்சமம் : [இசை]- குறிஞ்சியாழ்த்திற வகை [பிங்]

அனுபலத்தியேது : ஒன்றன் இன்மையால் மற்றொன்றன் இயைபை அறியும் ஏது. (சி. சி. அளவை 10 மறைஞா).

அனுபல்லவி : (இசை)- பல்லவிக்கு அயலாய் வரும் பல்லவி, கீர்த்தனத்தின் இரண்டாம் உறுப்பு.

அனுப்பிராசம் : (யா)- வழியெதுகை. (இலக். வி. 748 உரை.)
" மண்டலம் பண்டுண்ட திண்டோள் வரகுணன் "

அனுமதம் : [இசை]- வீணை வகை [பாரத. ஒழிபி. 15].

அனுமந்தரம் : [இசை]- மந்தரத்திற்குத் துணையாயுள்ள நரம்பு. (சங். சந்).

அனுமோனை : (யா.)- இனவெழுத்தால் வரும் மோனைத் தொடை (தொல். பொ. 402 உரை.)

அனுராகமாலை : சிற்றிலக்கிய வகை. தலைவன் கனவின் கண் ஒருத்தியைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து இனிமையுறப் புணர்ந்ததைத் தன் உயிர்ப் பாங்கற்கு உரைத்ததாக நேரிசைக் கலி வெண்பாவால் கூறுவது. (இலக். வி. 481.)

அனுலோமம் : (இசை)- இசையின் கால அளவை வகை.

அனுவாதம் : முன்னற் பெறப்பட்ட தொன்றனைப் பின்னரும் எடுத்தோதுகை. (குறள். 739. உரை).

அனுவெழுத்து : (யா)- மோனை எழுத்து.

அனை காந்திகம் : ஏதுப் போலிகளுள் ஒன்று. (மணி. 29. 291.)

அன்வயித்தல் : செய்யுளிலும், வசனத்திலும் ஒரு மொழியை மற்றொன்றோடு பொருட் பொருத்தமுறப் பொருத்துதல்; ஒரு பதம் மற்றொன்றுடன் இயைதல், பின் தொடர்தல். (கம்பரா. இரணி. 136)

அன்ன பக்கம் : (கூ)- அவிநயக் கைகளுள் ஒன்று. (சிலப். 3. 18 உரை)

அன்னமோடழிதல் : [அகம்] ஒருவழித் தணந்த தலைவனுடைய பிரிவினை ஆற்றாத தலைவி அன்னப் பறவையை நோக்கி உலகமெல்லாம் துயிலா நின்ற இந்நிலைமைக்கண்ணும் யான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைக் கண்டு வைத்தும் இப்பெடை அன்னம அவர்பாற்சென்று என் நிலைமை சொல்லாமல் தன் சேவலைக் கூடிக் கவலையின்றித் துயிலா நின்றது என்று அவ்வன்னத்தோடு அழிந்து கூறா நிற்றல் (கல்லாடம். பக் 344)

அன்னுவயித்தல் : செய்யுட்டொடரைப் பொருட் பொருத்தமுற ஒழுங்கு படுத்தல். பின்பற்றுதல்.

அஷ்டபந்தனம் : நாற்கவி.

அக்ஷரமீ : [இசை]- தாள அளவு வகை. (Mus. of Ind. 78)

ஆகனகைக்கிளை : *(இசை)- சாதாரணமான காந்தாரம்* *(த. பே. அக.)*

ஆகதம் : *பத்துவிதமான கமகத்துள் ஒன்று. (த. பே. அக)*

ஆகம மலைவு : *சாத்திரப் பிரமாணத்திற்கு மாறாக வருவது* *(தண்டி. 121)*

ஆகரி : *(இசை)- ஓர் இராகம் (சிலப். 14. 166 உரை)*

ஆகாச கமனம் : *அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று. ஆகாய கமணம் - அறுபத்து நான்கு கலைகளுள் ஆகாயத்தில் நடந்து செல்லும் வித்தை ஆகாயப் பிறவேசம·64 லைகளுள் ஆகாயத்தில் புகுந்து மறையும் வித்தை.*

ஆகாச மண்டலம் : *(கூ)- நாட்டிய வகையுள் ஒன்று.* *(திருவிளை. கான்மாறி. 9)*

ஆகாயகணம் : *செய்யுட்கணத்துள் ஒன்று. [இலக். வி. 800 உரை] செய்யுளில் முதல், இடை, இறுதி, முற்று ஆகிய இடங்களில் நேரசையும், நிரையசையுமாய்வரின் அவற்றுள் இறுதி நேர் ஆகாயகணம் எனப்படும்.*

கணப்பொருத்தம் மூவகைச் சீர்க்கே சிறப்பாகக் கருதப்படும். கணங்களுக்குச் சீர், நாள், பயன் என்பன கொள்ளப் படும்,

ஆகாயகணம் : *கருவிளங்காய் [சீர்] புனர்பூசம் [நாள்]*
வாழ் நாள் நீக்கம் [பயன்]

ஆகாயச்சக்கரம் : *சித்திரக்கவி வகை, [யாப் வி. 497]*

ஆகாயச் சொல் : *இல்லாதானொருவனை முன்னிலைப் படுத்தித் தானே கூறும் பேச்சு.* *(சிலப். 3. 13 உரை)*

ஆகிரி நாட்டை : *(இசை)- இராகவகை (பரதக. ரா. 002)*

ஆகிருதி : *(யாப்)- அடிதோறும் ஒற்று நீங்கிய இருபத்திரண்டு*

உயிர் எழுத்துக் கொண்ட நான்கடியையுடையதாய் வரும் சந்தம். (வீரசோ. யாப். 33. உரை).

அ்குதி : (இசை)- ஒரு வகைப் பறை. (குரு. தூது. 114).

அ்குளி : (இசை)- ஒரு வகைச் சிறுபறை. நுண்ணீராகுளி யிரட்ட (மதுரைக் - 606). சிறுகொட்டு; தமுக்கு.

ஆகோள் : [புறப்]- போரில் பகைவர் பசுக்களைக் கவர்ந்து கொள்ளுகை. ''ஊர் கொலையா கோள்'' [தொல். பொ. 58] புறத்துறை

ஆசனம் : இருக்கை நிலை (சீவச. 656 உரை) உரிய காலம் வரும் வரை பகைமேற் செல்லாதிருக்கை. ஆசன முந்திய காலமங் குணர்ந்திருத்தல் (இரகு. திக்கு. 21)

ஆசான் : (இசை) பாலை யாழ்த்திறவகை (பிங்).

ஆசி ; (அணி) வாழ்த்தணி [வீரசோ. அலங். 33].

ஆசிடுதல் : [யாப்]- நேரிசை வெண்பா முதற்குறளின் இறுதிச் சீர்க்கும் தனிச் சொற்குமிடையே 'விட்டிசைப்பின் ஒரசை-யேனும், ஈரசையேனும் சேர்த்தல். (காரிகை. செய். 3 உரை) எதுகையில் ய; ர; ல; ழ என்ற நான்கில் ஒன்றை ஆசாக இடுதல். (இலக். வி. 748).

ஆசிடை எதுகை : (பார்க்க)- ஆசெதுகை.

ஆசிடை நேரிசை வெண்பா : (பா)- இருகுறள் வெண்பாக்-களைச் சேர்த்து நேரிசை வெண்பாவாகச் செய்யுங்கால் முதற் குறட்பாவின் இறுதிச் சீர் நாள் எனவோ மலர் எனவோ நின்று விட்டிசைக்குமாயின் அச்சீரினை முழுமைப்படுத்தித் தனிச் சொல்லோடு இயையப் புணர்த்தல் வேண்டும். அவ்விறுதிச் சீரினை ஓரசையோ ஈரசையோ கூட்டித் தளை தட்டாது அமைக்கப்படுவதற்கு ஆசிடை நேரிசை வெண்பா என்று பெயர். ஆசின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓராசிடையிட்ட நேரிசை

வெண்பா எனவும், ஈராசிடையிட்ட நேரிசை வெண்பா எனவும், பெயர் பெறும். ஒரு விகற்பத்தானும் வரப்பெறும் ஆசு என்பது உலோகங்கள் ஒன்றோடொன்று பற்றுவதற்கு இரு-விகற்பத்தாலும் வைக்கப்படும் பற்று (பொடி) போல தளை பெற நில்லாத சீரினைத் தளை பெறுதற்கேற்ப ஓரசையோ ஈரசையோ கூட்டுவதாகும். (காரிகை. அண்ணா, பக். 68).

ஆசிடைவெண்பா : (பார்க்க) ஆசிடை நேரிசை வெண்பா.

ஆசிமொழி : (அணி)- வாழ்த்தணி (வீரசோ. அலங் 33 உரை.)

ஆசிரியச்சீர் : (யாப்)- ஆசிரிய உரிச்சீர், அகவலுரிச்சீர் எனவும் பெயர் பெறும். (அகவலென்பது ஆசிரியமே) இரண்டு அசையினால் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய (உரி)ச்சீர் எனப்படும்

நேர் நேர் — தேமா
நிரை நேர் — புளிமா
நிரை நிரை — கருவிளம்
நேர் நிரை — கூவிளம்

இந்நான்கும் ஆசிரிய உரிச்சீராகும். ஆசிரியச்சீர் இயற்சீர் எனவும் பெயர் பெறும்.

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையா மகளிர் புரையுஞ் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"

என்னும் குறுந்தொகைப் பாடலில் (5) ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்தமை காண்க.

ஆசிரியச் சுரிதகம் : (யாப்)- ஆசிரியச் சீரால் முச்சீரடியும் இரு சீரடியும் கொண்டு கலிப்பாவின் துணையுறுப்பாக வருவது ஆசிரியச் சுரிதகத்திற்கு எடுத்துக் காட்டு :-

"அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்

தொன்று முதிர்கட லுலகம்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே ".

ஆசிரியத்தளை : (யாப்.) மாமுன் நேரும் விளமுன் நிரையும் வரத்தொடுக்கும் செய்யுள் தளை. [காரிகை. உறுப். 10 உரை]

ஆசிரியத் தாழிசை : (பார்க்க)- அகவற்றாழிசை.

ஆசிரியத் துறை : (பார்க்க)- அகவற்றுறை

ஆசிரியத் தூங்கல் : தூங்கலோசை வகையுள் ஒன்று. அது வஞ்சித் தளையாற் பிறக்கும் ஓசை, ஆசிரியத் தூங்கலோசை.

ஆசிரியப்பா ; [பார்க்க]- அகவற்பா.

ஆசிரியம் : ஆசிரியப்பா.

ஆசிரிய வசனம் : மேற்கோள் (நன். 21.)

ஆசிரியவிருத்தம் ; (பா.)- கழிநெடிலடி நான்காய்த் தம்மில் அளவொத்து முடிவது. அறுசீர் முதல் பதின்சீர் (10) வரை ஆசிரிய விருத்தம் அமையும். பதின்சீர்க்கு மிக்கு வருவனவும் உள என்பர் விருத்தியார்.

1. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
(எ. டு.) 'இறைக்கு மஞ்சிறைப் பறவைக' ளெனத் தொடங்கும் சூளாமணிச் செய்யுள் (கல். 51). காண்க

2. எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :
(எ, டு.) கணிகொண் டலர்ந்த எனத் தொடங்கும் சூளாமணிச் செய்யுள் (அரசி. 197) காண்க.

3 எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :
(எ. டு.) 'மூவடியி னாலிரண்டு' எனத் தொடங்கும் சூளாமணிச் செய்யுள் (துறவு. 64). காண்க.

4. ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

(எ. டு.) "இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின்
எதிர்ந்த தானையை
இலங்கும் ஆழியின் விலங்கியோர்"

5. பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :

(எ. டு.) "கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடு நீடு மோடை நெற்றி",

6. பதின்சீர்க்கு மிக்குவரும் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:

(1) 11 சீர்(எ. டு.)

"அருநாழி ஒன்றும் அறனோர் இரண்டும்
அவிர்சோதி மூன்றொ டணியோடு நான்கும்
மதமைந்தும் ஆறு பொருண் மேல்"

2) பன்னிருசீர் ஆசிரிய விருத்தம் :

(எ. டு) "கோளரி வாளரி வல்லிய மெல்லொலி
கொண்ட கொலைத் தொழில் எண்கொடு கேழல்கள்
கொட்கும் நெடுஞ்சிமை யுட்கிவர் மால்வரை"

(3) பதின்மூன்றுசீர் ஆசிரிய விருத்தம் :

(எ. டு.) "நாலடி மீட லல்ல தில்லை நல்ல பூவி னல்லி
மேய
நம்பி போலு நம்பி தன்னோ டன்பளாய்"

(4) பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம் :

(எ. டு) உண்டாங் கெலினு மிலதென் றறிஞர்கள்
பொய்யெனபுகலவு மமெய்யெனப் பெயர் பெற்
றுன்னாமுன மின்னாமென வுளதாய்
மாய்வது நிலையில் யாக்கை"

ஆசிரியப்பாவில எண் சீரின் மிக்கு வரும் அடியெல்லாம் சிறப்புடையவலல (காரிகை. பக். 95)

ஆசிரியவுரிச்சீர் (பார்க்க) ஆசிரியச்சீர்.

ஆசிய நாடகம் : (கூ) நகைச்சுவையுள்ள நாடகம்.

ஆசு :- (யாப்.) நேரிசை வெண்பாவின் முதற்குறளின் இறுதிச் சீர்க்கும், தனிச்சொற்கும் இடையே கூட்டப்படும் அசை. (காரிகை. செய். 3) எதுகையிடையில் வரும ய, ர, ல், ழ், என்னும் ஒற்றுக்கள். (காரிகை. ஒழிபி. 6)

ஆசுகவி :- கொடுத்த பொருளை அடுத்தபொழுதிற்பாடும் பாட்டு. (வெண்பாப். செய். 2. உரை) ஆசுகவி பாடும் புலவன்.
" இம் என்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம் என்னும் முன்னே ஆயிரம்தான் ஆகாதோ "

ஆசுரம் :- மணவகை. தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத்-தார்க்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்ளும் மணம்.
(நம்பியகப். 117. உரை)

ஆசெதுகை :- எதுகை வகை. ய், ர், ல், ழ் என்னும் நான்கு ஒற்றுக்களும் எதுகையின் இடைவந்து ஏதேனும ஓரடியில் நிற்பினும் அது எதுகையாகக் கொள்ளப்படும். இதற்கு ஆசெதுகை என்று பெயர். (காரிகை. அ ப. பக். 116)

ஆச்சிரயாசித்தம் :- ஏதுப்போலி பட்சத்திலில்லாத ஏதுவைக் கூறுவது. (மணி. 29, 194).

ஆஞ்சிக் காஞ்சி :- (புறப்.) புறத்துறை. போர்க்களத்தில் இறந்த கணவனது வேல் வடுவைக் கண்டு மனைவி அஞ்சியது கூறும் புறத்துறை. (தொல் [பொ. 79) போர்க் களத்தில் இறந்த கணவ-னுடன் தீயில் மூழ்கும் மனைவியின் பெருமை கூறும் புறத்-துறை. (பு. வெ. 4. 22)

ஆடனூல்:- (கூ) நாட்டிய நூல். 'ஆடனூல் வரம்பு கண்டவராகி, (திருவிளை. கான்மாறி'7)

ஆடல் வென்றி :- (புறம்) புறப்பொருள் துறை. கூத்தாடுதல் தொழிலில் வென்றதனைக் கூறும் புறத்துறை.
(பு. வெ. பெருந். 54)

ஆடவை:- (கூ) நடன அவை.

ஆடற் கூத்தியர் :- (கூ) அகக் கூத்தாடுங் கணிகையர். 'காவற் கணிகைய ராடற் கூத்தியர்' (சிலப் 5. 50.)

ஆடற்றரு :- (கூ) கூத்துப்பாட்டு வகை.

ஆடி :- (பா) செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்துப் பதினாறு எழுத்தாய் வரும் விருத்தம்.

(எ. டு.) "தேனுட னாடுஞ் சிலைபொழி மலினச் செயலாட
ஆனுட னாடுங் கவரித ழாயத் தயில் விழியென்
மானுட னாடும் மயிலன சாயள் மதர் விழியார்
வானுட னாடும் மதிதரு துனிநோய் மதியாரோ"
(வீரசோ. யாப். 33 உரை)

ஆடிடத்துய்த்தல் :- (அகம்.) இயற்கைப் புணர்ச்சி வகை. பிரிவு குறித்து வருந்திய தலைமகட்குத் தனது ஊரின் அணிமை கூறி அகலா நின்ற தலைமகன், 'இனி நீ முற்பட்டு விளையாடு. யான் இங்ஙனம போய் அங்ஙனம் வருவேன், என அவளை ஆடிடத்துச் செலுத்தியது. (ஆடிடம் - விளையாட்டிடம்)
(திருக்கோ. இ. பு. 16)

ஆட்டம் :- கூத்தாட்டு. விளையாட்டில் தொடங்கும் முறை.

ஆட்டு :- கூத்து 'உரையும் பாட்டு மாட்டும் வரைஇ' (மதுரைக் .618) விளையாட்டு.

ஆணை :- ஆன்றோர் மரபு. 'தொல்லாணை நல்லாசிரியர்)
(மதுரைக். 701)

ஆண்கூத்து : (கூ). நடன்.

ஆண்கை :- (கூ) ஆண்பாற் செயல்காட்டும் அபிநயக் கை. (சிலப்.3.18.உரை)

ஆண்சோடினை :- (கூ) ஆண்கூத்திற்குச் செய்யும் ஒப்பனை. (சிங்காரம்)

ஆண்டி :- (கூ) வரிக்கூத்துவகை (சிலப் 3. 13. உரை)

ஆண்பாற்கிளவி:- (புறப்). புறப்பொருள் துறை. காமம் எல்லை கடத்தலால் ஏங்கி மயங்கிய தலைவன் கூறியது பற்றிக் கூறும் புறத்துறை. இது இருபாற் பெருந்திணையில் அடங்கும். (பு. வெ. பெருந் 27)
(பார்க்க)பெருந்திணை ஆண்பாற்கிளவி கைகடந்த காமம்உடையார்க்கே உரிய என்பர் உரையாசிரியர்.

ஆண்பாற்பிள்ளைக்கவி :- (பார்க்க) பிள்ளைத்தமிழ்

ஆண்பாற்பிள்ளைப்பாட்டு :- (பார்க்க) பிள்ளைத்தமிழ்

ஆதல் .- [கூ] கூத்து (அக. நி)

ஆதாரங்கூறல் :- (அகம்) போக்கருமை கூறிய தலைவனுக்குத் தோழி, 'பெருமானே, எப்பெருயாட்டி நின்னோடு போகப் பெறின் அவளுக்கு வெஞ்சுரமும் தண் சுரமாம்;ஆதலின் நீ அருமை கூறாது அவளை அழைத்துப்போ, என்று தலைவியின் ஆதரரங்கூறல். ''நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' (கம்ப. அயோத். 521)

ஆதிதாளம் :-(இசை)- தாளவகை. சங்கீத சுருதிப்பிரமாண அளவாக எட்டு அட்சரங்கள் (எழுத்துக்கள்) கூடிய மூன்றாந் தாளம. (த. பே அக)

ஆதிமடக்கு :- அடியின் முதலில் சொல் மடங்கி வருவது.

ஆதோரணமஞ்சரி :- (பார்க்க) வாதோரண மஞ்சரி.

ஆமையாழ் :-(இசை) செவ்வழி யாழ்வகை

ஆம்பற்குழல் :-(இசை) வெண்கலத்தில் குமுத வடிவாக அணைசு பண்ணிச் செறித்த ஓரிசைக் குழல். (சிலப் 17. பாட்டு. 2. உரை)

ஆம்பி :- (இசை) பன்றிப்பத்தர். "ஆம்பியும் கிழாரும் வீங்கிசை ஏற்றமும்" (சிலப்.10.110)

ஆமந்திரிகை :- [இசை] இடக்கை என்னும் வாச்சியம். (சிலப்.3.143)

ஆயத்தம்:- (இசை). இசைக் கிளையில் ஒன்று (பெரியபு. ஆனாய.16.உரை)

ஆயத்தார்'- [அகம்] தோழியர் கூட்டம்.

ஆயத்துய்த்தல்:- (அகம்) இன்றியமையாமை கூறியப்பிரியலுற நின்ற தலைமகன், 'இனிப் பல செல்லி என்ன? என்னுயிர் நினக்கு அடிமைபாயிற்று; இனிச் சென்று நின் ஆயத்திடைச் சேர்வாயாக" என்று பிரிவின்மை கூறித்தலைமகளை ஆயத்துச் செலுத்தியது. [திருக்கோ.பக்97]

ஆயம்:- (அகம் தோழியர் கூட்டம் (திருக்கோ.7
]இசை) மல்லரிப்பறை (அக.நி)

ஆயலோட்டல்:- பறவைகளை வெருட்டுகை.

ஆரபடி :- (கூ) பொருள் பொருளாக வீரன் தலைவனாக வரும் நாடக விருத்தி [சிலப். 3 13. உரை]

ஆரபி :-(இசை) ஓர் இராகம்.

ஆயப்பாலை :- [இசை] பாலைவகை. பாலை என்பது பண்களை அமைப்பதற்காக இசைச் சுரங்களை நிறுத்தும் வரிசைமுறை. 1) ஆயப்பாலை, 2) திரிகோணப்பாலை, 3) சதுரப்பாலை 4) வட்டப்பாலை என அவை நான்கு வகைப்படும். அவற்றுள் ஆயப்பாலையாவது, குரல், துத்தம, கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம என நிரலபட்டு நின்ற இரண்டு நிரல்

க்னாதும். ஆபப் பாலை எனினும் நேரிசைப்பாலை எனினும் ஒன்றே (சிலப். 31. 70. 71.)

பாலையைக் 'கேள்வி' எனவும் வழங்குவர். இக்காலத்தார் 'சுரம்' என்பர்.

ஆராய்தல் :- [இசை]. இசைக் கரணம் எட்டனுள் ஒன்று சுருதி கூட்டுகை. (சிலப். 7. 1. அரும்)

ஆரிடம் :- மணவகை. ஆவையும், ஆனேற்றையும், அலங்கரித்து அவற்றிடையே மணமக்களை நிறுவி நீர்பெய்து கொடுக்கும் மணம். (தொல் பொ. 92 உரை) ஆவும் ஆனேறும் பரிசாகப் பெற்றுக்கொண்டு கன்னியைத் தீ முன்னர்க் கொடுக்கும் மணம். (நம்பி 117 உரை). இது பெருந்திணைக்குரியது.

ஆரிய குச்சரி :- (இசை) மருத யாழ்த்திறவகை. (பிங்).

ஆரியக்கூத்து :- [கூ] கழைக்கூத்து. ஆரியக் கூத்தாடினும் காரியத்திற் கண்ணாயிரு என்பது நாட்டுவழக்கு

''ஆரியக்கூத்தாடினாலும் தாண்டவக்கோனே—காசு
காரியத்தில் கண்ணவையடா தாண்டவக்கோனே''

ஆரியப்பாவை:- (கூ) பாவைக் கூத்து.

ஆரியவேளர்கொல்லி : (இசை) செவ்வழியாழ்த் திறவகையுள் ஒன்று. (பிங்)

ஆரியை :- (யாப்) வடமொழியாப்பு வகை. (நாதார்த்த)

ஆரோகி :- (இசை) இசையின் வர்ண பேதங்களுள் ஒன்று.

ஆரோசை;- (இசை) ஏற்றிப்பாடும் இசை.

ஆரெயில்உழிஞை :- (புறப்.) புறப்பொருள்துறை. உழிஞையார் கைவரது மதிலின் திண்மையைக் கூறியதுபற்றிய புறத்துறை. இது உழிஞைத் திணையுள் அடங்கும்.

(பு. வெ, உழி 11)

ஆர்:- (புறப்.) புறப்பொருள்துறை. சோழன் சூடும் அடையாளப் பூவாகிய அத்திமாலையைப் புகழ்ந்து கூறிய புறத்துறை. இது பொதுவியல் திணையுள் அடங்கும். (பு. வெ. பொது. 3) ஆர்-அத்திமாலை. ஆகுபெயராய்த் துறைக்கு அமைந்தது.

ஆர்வமொழி :- (அணி). உள்ளத்து நிகழும் அன்பை மிகுதியும் வெளிப்படுத்தும் ஓர் அணி. (தண்டி. 67)

ஆலங்காட்டாண்டி :- (கூ) வரிக்கூத்து வகை. (சிலப்.3. 13 உரை)

ஆலாபனம் :- (இசை) இராகத்தை விவரித்துப் பாடுகை. ஆலாபித்தல்.

ஆலாபினி :- (இசை) சுரபேதம். (பரத. இராக.44)

ஆலோலிதமுகம் :- [கூ] ஆசையால் மலர்ந்த முகத்தோடு ஒருவனை அழைக்கும் அபிநயவகை. [சது]

ஆவிருத்தியலங்காரம் :- (அணி) பின்வருநிலையணி.

ஆளத்தி:- [பார்க்க] ஆலாபனம்.

ஆளெறிபிள்ளை :- [புறப்] புறப்பொருள்துறை, வெட்சியாருக்கு அஞ்சிவரும் மறவரை இகழ்ந்து கரந்தை மறவன் ஒருவனே எதிர் சென்று அவ்வெட்சி மறவரை வெட்டி வீழ்த்தியது பற்றிக் கூறும் புறத்துறை. இது கரந்தைத் திணையுள் அடங்கும். ஈண்டுப் பிள்ளை என்றது வீரனுக்கு உவம ஆகுபெயர். வெட்சி மறவர் பலராகவும், ஆற்றல்மிக்கவராகவும் இருக்கத் தான் ஒருவனே சென்று போர் செய்வதால் ஏற்படும் விளைவினை ஆராயாது பிள்ளைக் குண முடையவனாய்ச் சென்று பொருதான் என்பதனால் இத்துறை ஆளெறிபிள்ளை எனப்பட்டது. (பு. வெ. கரந்தை.7 உரை)

ஆள்வினைவேள்வி :- (புறப்) புறப்பொருள்துறை. வேந்தனின் இல்லறச் சிறப்பைக் கூறும் பாடாண்துறை. [பு. வெ. பாடாண் 27] இல்லறச் சிறப்பாவது மனையின்கண்ணிருந்து செய்யும் வேள்வி. அஃதாவது விருந்தோம்பல் முதலியன. முயற்சியாற்

செய்யும் அறம் அதுவேயாகலின் ஆள்வினை வேள்வி எனப்பட்டது.

ஆளமுடைத்தாதல் :- நூலழகு பத்தனுள் ஆழ்ந்த கருத்தை உடைத்தாதல் [நன் 13. உரை]

ஆறன்மட்டம் :- (இசை) தாளவகை (சிலப்.3.16அரும்] ஆறுமாத்திரை அளவுபட்ட தாளம் (த பே. துக)

ஆறாச்சக்கரம் :- மிறைக்கவியுள் ஒன்று. (மாறன். 282 உரை)

ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி :- [அகம்] தலைவன் இரவுக் குறிக்கண் வரும் வழியைப் பார்த்து அவ்வழியின் இடர்ப்பாட்டால் தோன்றும் அச்சத்தால் தலைவி கூறுதல்.

(அ.பொ.வி.பக் 282)

ஆற்றாமை கூறல் :- [அகம்.] பொருளீட்டுதற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்வதற்குக் கருதும் தலைமகனுடைய கருத்தினைக் குறிப்பாலுணர்ந்த தோழி தலைவியின் பிரிவாற்றாத் தன்மையை அவனுக்குத் கூறியது [கல்லாடம், பக்.171]

ஆற்றுப்படை :- (பா.) சங்கச் சான்றோர் பாடுதற்குக் கொண்ட பாட்டு வகையுள் ஒன்று. ஆற்றுப்படையாவது; ஆற்றின் கண் படுப்பது; ஆறு என்பது வழி; படுப்பது-செலுத்துவது. ஒருவர்க்குச் சொல்ல வேண்டும் வழிதுறைகளைச் சொல்லித் தெரிவித்து அவற்றைப் பின்பற்றிச் செல்க எனச் செலுத்துவது. இது பாடாண் திணையுள் அமைந்துள்ள ஒரு துறையாகும்.

செல்லவேண்டிய குறிப்புடைய ஒருவனுக்குச் சென்று பயின்ற ஒருவன் செல்லுதற்குரிய நெறியைத் தெரிவித்துச் செலுத்துவது ஆற்றுப்படையின் கருத்தாகும்.

[பத். பாட். சொற் பக்.31]

''ஆடன் மாந்தரும், பாடற்பாணரும், கருவிப் பொருநரும இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலரும் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை எல்லாம

பெறுமாறு கூறிய கூறுபாடு" எனத் தொல்காப்பியரின் ஆற்றுப் படை இலக்கணத்திற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும உரைவகுப்பர். ஆற்றுப்படை குறித்த தொல்காப்பிய நூற்பா பின்வருமாறு :-

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

[தொல். புறத். 36]

இவ்விலக்கணம் பிற்காலத் தெழுந்த பன்னிருபாட்டியலில விரிவடைந்து காணப்படுகின்றது. பன்னிருபாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை, இலக்கணவிளக்கப் பாட்டியல் போன்ற இலக்கண நூல்கள் தொல்காப்பியர் மொழிந்த கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோருடன் புலவரையும் சேர்த்து ஐவரையும் ஆற்றுப்படைக்கண் குறிப்பிடுகின்றன.

ஆற்றுப்படை ஆசிரியப்பாவால் அமைதல் மரபாகக் காணப்படுகிறது. ஆறு அகவற் கலியாற் பாடுவது ஆற்றுபடை என நவநீதப்பாட்டியல் குறிக்கிறது ஆற்றுபபடை ஐவகைப் பாகுபாடுடையது :-

1. புலவராற்றுப்படை 2. கூத்தராற்றுப்படை 3. பாணர் ஆற்றுப்படை 4. பொருநர் ஆற்றுப்படை 5. விறலியாற் றுப்படை

சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டில் ஐந்து பெரும பாடல்கள் ஆற்றுப்படையில் அமைந்துள்ளன. அவை :

1. திருமுருகாற்றுப்படை — புலவராற்றுப்படை
2. பொருநராற்றுப்படை — பொருநர்

3. சிறுபாணாற்றுப்படை }
4. பெரும்பாணாற்றுப்படை } - பாணர்

5 மலைபடுகடாம் — கூத்தர்

புறப்பொருள் வெண்பாமாலை மேற்குறித்த ஐந்து ஆற்றுப்படைப் பிரிவுகளையும் பாடாண் படலத்துள் தனித் தனித் துறையாகக் கொள்ளும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுப்ரதீபக் கவிராயரால் பாடப்பெற்ற 'கூளப்ப நாயக்கன் காதல்' என்னும் நூல் விறலி-யாற்றுப்படையாகக் கருதப்படுகின்றது. எட்டுத் தொகையுள் இருபது பாடல்கள் ஆற்றுப்படையில் அமைந்து காணப்படு கின்றன.

ஆற்றுவரி :- (இசை). ஒருவகை வரிப்பாடல்.
[சிலப். 6. 35. உரை]

ஆற்றொழுக்கு :- சூத்திரநிலை நான்கனுள் ஒன்று. ஆற்றுநீர் இடையறாமல் ஒருமுகமாகவே ஒழுகுதல் போலச் சூத்திரங்களும் தம்முள் பொருளியைபு உடையனவாக ஒழுகுதல்.
[நன். 19. உரை]

ஆற்றொழுக்குப் பொருள்கோள் :- (பார்க்க) யாற்றுநீர்.

ஆனந்தக் களிப்பு :- (பா) மகிழ்ச்சி மிகுதியால் பாடும் ஒரு-வகைப் பாடல். [தாயு.]

ஆனந்தத் தாண்டவம் : (கூ.) சிவன் புரியும் நிருத்தம். ஆனந்த நிருத்தம். (கோயிற்பு. பதஞ். 1. உரை)

ஆனந்தப் பையுள் :- (1) (புறப்). கணவன் இறப்ப மனைவி மெலிந்து வருந்தும் புறத்துறை. (பு. வெ. 10. 3). (2) (நூற் குற்றம்). பிரிந்த தலைவன் தலைவியரது துயர்மிகுதியைப் பாட்டுடைத் தலைவனின் நாட்டுடனும், ஊருடனும் சார்த்திச் சொல்லுவதாகிய நூற்குற்றம். (யாப். வி. 96. பக். 523)

ஆனந்த பைரவி :- (இசை). ஓர் இராகம். ஒரு பண்.

ஆனந்தம் :- பா குற்றங்களுள் ஒருவகை (இலக். வி. 887) அவை. எழுத்தானந்தம்; சொல்லானந்தம்; பொருளானந்தம்; யாப்பானந்தம்; தூக்கானந்தம்; தொடையானந்தம்.

ஆனந்தரியம் :- இது ஆராய்ந்த பின் இது கேட்டற்பாற்று என்னும் யாப்பு. [நன். விருத். சிறப். உரை] ஈண்டு யாப்பென்றது நூலை. இன்ன நூலைக் கற்றுத் தெளிந்தபின் இந்நூல கற்கபாற்று எனக் கூறுதல இது இயைபு எனப்படும். யாப்பு இயைபு என்பனவற்றை வடநூலார் ஆனந்தரியம் என்பர்.

ஆனந்தவுவமை :- மிகவும் இழிந்த பொருளோடு ஒப்பிடுதலாகிய உவமைக் குற்றம். (புறநா. 60. உரை)

ஆனந்தை : (இசை) குறிஞ்சி யாழ்த்திறவகை. (பிங்).

ஆக்ஷேபாலங்காரம் :- (அணி.) எதிர்மறை அணி. ஒழிப்பணிக்கு வேறாகியும் கேட்போரை மகிழ்விப்பதாயும் இருக்கின்ற மறுபபைச் சொல்லுதலாம். இது மறுக்குமட்டும செய்யும். ஒழிப்பணி ஆரோபித்தற் பொருட்டு மறுக்கும் எதிர்மறை அணியை வடநூலார் ஆக்ஷேபாலங்காரம் என்பர் இவ்வணி மூன்று வகைப்படும.

(1) தன்னால் சொல்லப்பட்ட பொருளை ஒரு நிமித்தத்தினால் மறுத்தல் :- (எ.டு.)

> ''ஒண்கதிர்த் திங்காணீ உன்வடிவை யிங்கெமக்குக்
> கண்களிகூ ரக்கடிது காட்டுவாய் - வண்கவின்கூர்
> பூண்டாங்கு கொங்கையுடைப் பூவைமுக முண்டிதனால்
> வேண்டாம்போ எற்றுக்கு வீண்''

இதில் தான் விரும்பிய சந்திர தரிசனத்தை முகமிருக்கையால் வீணென்று மறுத்தது.

(2) மறுப்புத்தான் தள்ளுண்டு மற்றொரு பொருளைத் தோன்றச் செய்தல். (எ.டு)

(எ.டு.). தண்ணறா உண்டளிசூழ் தாமமணி திண்டிறற்றோள்
அண்ணலே யான்னூதி யல்லேன்காண் . வண்ணமிகு
வேயெனுந்தோ ளாய்மெய் விரகதா பம்வடவைத்
தீயெனவே தோன்றுஞ் செறிந்து''

இதில் அல்லேனென்னும் மறைதள்ளுண்டு, விரைந்து வந்து அவளைக் காப்பாற்றென்னும் மற்றொரு பொருளைத் தோன்றச் செய்தது.

(3) உடன்பாட்டுச் சொல்லால் மறுப்பைக் காட்டுதல் : (எ.டு.)

''விளைபொருண்மே லண்ணல் விருப்புளையே வீண்டெம
கிளையழுகை கேட்பதற்கு முன்னே - விளைதேன்
புடையூர் பூந்தார்ப் புனைகழலாய் போக்குக்
கிடையூறு வாராம லேகு''

இதில் ஏகு என்னும் உடன்பாட்டுச் சொல்லாற் போகேல் என்னும் மறுப்பு, சுற்றத்தழுகையால் குறிக்கப்பட்ட தலைவி இறக்குமென்பதைக் கொண்டு காட்டப்பட்டது.

(அணியி. பக். 27).

இ

இகந்தமைஇயம்பல் :- (அகம்.) தலைவி தலைமகன் நீங்கினமை கூறல். [அ.பொ வி.பக்.348]

இகழாவிகழ்ச்சி :- [அணி.] புகழ்வது போலப் பழித்துக் கூறும் அணி

இகழ்ச்சியணி :- [அணி.] பொருளணி வகை. ஒன்றன்குண குற்றங்களால் மற்றொன்றற்கு அவை உளவாகாமையைச் சொல்லுதல். இவ்வணி இரண்டு வகைப்படும்.

1. குணத்தினால் குற்றமுண்டாகாமை :

[எ.டு]. ''ஆழவமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி''

இதில் கடலின் பெருமைக் குணத்தால் நாழிக்கு அதிக நீர் கொள்ளலாகிய குணமுண்டாகாமை கூறப்பட்டது.

2. குற்றத்தாற் குணமுண்டாகாமை.

[எ.டு]. ''கமலமலர் தற்கண்டு கூம்புதலாற் காமர்
அமுதகிர ணற்கென் குறைவு''

இதில் கமலங் கூம்புதற் குற்றத்தாற் சந்திரனுக்குக் குறைவாகிய குணமுண்டாகாமை கூறப்பட்டது. இகழ்ச்சியணியை வட நூலார் 'அவஞ்ஞியாலங்காரம்' என்பர். [அணியி. 70]

இகழ்ந்ததற்கிரங்கல் :- [அகம்.] தலைவியின் பேரெழிலைக் கண்ட பாங்கன் தலைவியைக் காணாமுன் அறிவின்றி இகழ்ந்தோமே என்றிரங்கிக் கூறுதல். [நம்பி. பக். 278]

இகுளைவம்பென்றல் :- (அகம்.) கார் காலம் கண்டு தலைவி புலம்ப, அவள் தேறும் பொருட்டுத் தோழி, 'இது கார் காலத்தில் வந்த மேகமன்று, இடையே வம்பாக வந்தது' எனக் கூறல். [வம்பு—காலமல்லாக் காலத்தில தோன்றுவது.]

[அ. பொ. வி. பக். 283]

இங்கிதகவி :- பாட்டுடைத் தலைவன் கருத்தை விளக்கும் பாடல்.

இசை :- இசைப்பாட்டு. இசை மூன்று. அவை : 1. மந்தரம் 2. மத்திமம் 3. தாரம். இசைச் சுரங்கள் ஏழு. அவை :- 1. குரல் 2. துத்தம் 3. கைக்கிளை 4. உழை 5. இளி 6. விளரி 7. தாரம்.

(பட்டியலை அடுத்த பக்கத்திற் காண்க)

இசைக்கரணம் :- (இசை.) இசைக் கருவியில் காட்டுந் தொழில். [சிலப். 7. கட. 15]. இசைக் கரணம் எண் வகைப்படும். அவை.

1. பண்ணல்	2. பரிவட்டணை
3. ஆராய்தல்	4. தைவரல்
5. செலவு	6. விளையாட்டு
7. கையூழ்	8. குறும்போக்கு

இசைக்காரன் :- பாடுவோன். [சிலப். 3. 64. உரை]

இசைக்கிளை :- ஆயத்தம், எடுப்பு, உற்கிரம், சஞ்சரம், இடாயம் என்ற ஐந்துவகை இசை. [பெரியபு. ஆனாய. 26. உரை]

இசைத்தமிழ் :- முத்தமிழுள் ஒன்று (பிங்). (இயல்; இசை; நாடகம்).

இசைபேதம் :- இசைக்கேடு.

இசைப்பா :- இசையோடு சேர்ந்த பாக்களில் ஒருவகை. இசையளவுபா. [சிலப். 6. 35. உரை]

இசைப்பாமுகநிலை :- கொச்சகம்.

இசைப்பாட்டு :- வாச்சியத்தோடு பாடும் பாட்டு. அது சங்கீதம் எனப்படும். இசை, இராகம், காந்தருவம், காந்தாரம், காமரம், கானம், கீதம், குழல், பண், கேயம், கோளை, பா, பாட்டு, பாணி, பாண், மனைவிளி, வரி. [த. பே. அக.] சாகித்தியம் [சிலப். பதி 60. உரை]

	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
1. பிறக்குமிடம்	மிடறு	நாக்கு	அண்ணம்	தலை	நெற்றி	நெஞ்சு	மூக்கு
2. ஓசையுவமை	மயில்	இடபம்	ஆடு	கொக்கு	குயில்	குதிரை	யானை
3. சுவையுவமை	பால்	தேன்	கிழான்	நெய்	ஏலம்	வாழை	மாதுளங்கனி
4 வாசனையு-வமை	மௌவல்	முல்லை	கடம்பு	வஞ்சி	நெய்தல்	பொன்-னாவிரை	புன்னை
5. பெறும்எழுத்துக்கள்	ஆ அ	ஈ இ	ஊ உ	ஏ எ	ஐ இ	ஓ ஒ	ஔ உ
6. மாத்திரை ...	4	4	2	3	4	3	2
7. இறைவர்...	விசுவா-மித்திரர்	சமதக்கினி	சந்திரன்	சூரியன்	கௌதமன்	காசிபன்	ஈசன்

மேற்குறித்த ஏழு சுரத்திலும ஏழு பாலைப் பண்கள் பிறக்தும.
ஏந்திசை; தூங்கிசை; ஒழுகிசை [பார்க்க] சீர்.
நரம்பில் பிறக்கும் ஓசை.

இசைப்பாணர் : பாணருள் ஒரு வகையார்.
(தொல். பொ.91. உரை)

இசைப்பு :- (இசை.) யாழ் முதலியன வாசிக்கை.
(தொல். சொல். 310)

இசையளவுபா :- (பார்க்க) இசைப்பா.

இசையறுத்தல் :- ஓசை வேறுபடப் பிரித்தல். இசையறுத்து உச்சரித்துக் காண்க. [நன். 91. சங்கர]

இசையானந்தம் :- நூற்குற்றம். அவல முற்றிருந்தோர்க்கு உரிய இசைகள். தலைவன் பாட்டிற்கு இசையாகி வரப் புணர்த்தல்.
[யாப். வி. பக். 54]

இசையோன் :- இசைக்காரன். (சிலப். 3. 64)

இசைவாணர் :- பாடகர். 'தெள்ளுந் தமிழ் வாண ரிசைவாணர் சூழ' [திருவாலவா. 57. 22]

இடக்கரிசை :- செய்யுட் குற்றத் தொன்று. [யாப். வி. ஒழிபு.]

இடக்கை :- தோற்கருவி. இடக்கையாற் கொட்டும் கருவி. [சிலப். 3. 27. உரை) பெருமுரசு வகை. தம்பட்டம்.

இடத்துய்த்தகறல் :- [அகம்.] தலைமகளை இடத்துய்த்த தோழி தலைமகன் எதிர்ப்படுவனென்று கருதித் தான்நீங்குதலைக் கூறும் அகத்துறை. (களவியற். 73)

இடத்துய்த்தல் :- (அகம்.) தோழி, தலைமகற்கு இடங்காட்டி மீண்டும் தலைமகளிடஞ் சென்று அவளைத் தலைமகன் நின்றவிடத்துச் செலவிடுக்கும் அகத்துறை. [களவியற். 72]

இடநிலைப்பாலை :- [இசை.] பண்வகை [சிலப். 10 கட்டுரை 14] ஒருவகைப் பாலைப் பண்ணின் இராகம். [த. பே. அக]

இடந்தலைப்பாடு :- (அகம்) இயற்கைப் புணர்ச்சிநிகழ்ந்த இடத்தில் 'இரண்டாம் முறையும் தலைவனுந் தலைவியும் கூடுகை. (தொல். பொ. 498. உரை) இது தெய்வந் தெளிதல், கூடல், விடுத்தல் என மூவகைப்படும். புதிய பெரிய உறவை மீண்டும் ஒருமுறை களித்துக் காண்பதே இடந்தலைப்பாடு. சங்கவிலக்கியத்துள் இடந்தலைப்பாடுபற்றி மூன்று பாடல்களே உள்ளன. (ஐங்குறுநூறு. 197; நற்றிணை 39; 155) பொழிலிடைச் சேறல் என்னும் ஒரு பிரிவே திருக்கோவையாரில் காணப்படுகின்றது.

இடபம்:- (இசை) எழுசுரத் தொன்று.

இடமணித்துக்கூறி வற்புறுத்தல் - [அகம்.] இயற்கைப்புணர்ச்சிவகை; பிரிவு குறித்து வருந்திய தலைமகட்குத் தெய்வத்தினருள் கூறித் தலைமகன் வற்புறுத்தவும் ஆற்றாமை நீங்காத தலைமகட்குத் தன் ஊரின் அணிமை கூறி வற்புறுத்தியது. (திருக்கோ. இ.பு:15)

இடமயக்கம்:- ஒன்றற்குரிய உரிப்பொருளைப் பிறிதோர் இடத்திற்குரியதாகக் கூறும் இடமலைவு.

இடமலைவமைதி:- இடமலைவாகிய வழுவை அமைத்துக்கொள்ளுகை. (தண்டி. 122. உரை)

இடமலைவு:- (வழு.) ஓரிடத்துப்பொருளை மற்றோரிடத்துள்ளதாகச் சொல்லும் வழு. (தண்டி. 116)

இடம்பெற்றுத்தழால்:- [அகம்.] தலைவன், தலைவி நிற்குமிடத்திறகு அருகேயுள்ள மணங் கமழும் சோலையைக் கண்டு அவ்விடத்துத் தலைவியைத் தழுவ விரும்பிக் கூறுதல், (தழால்-தழுவுதல) [நம்பி. பக் 276).

இடாயம்:- (இசை.) இசைத்துறை ஐந்தனுள் ஒன்று [பெயரிபு. ஆனாய. 26]

இடிப்பணி:- குறிப்புரை; கருத்துரை; சுருக்கம். (த.பே. அக]

இடைக்கருவி:- [இசை.] சல்லி என்னுந் தோற்கருவி. (சிலப்.3.27 உரை) மதத்தளம அல்லது உடுக்கை.

இடைச்சியார்:- கலம்பக உறுப்புக்களுள் ஒன்று. இடைக்குல மகளை வீதிவாய் மோர்விற்க வந்தபோழ்து கண்ட காமுகன் கூறுவது. [குமர. பிர.மதுரைக். 62]

இடைசுருங்குபறை:- துடி. உடுக்கை. குடுகுடுப்பை.

இடைநிலை:-(பார்க்க) இடைநிலைத்தீவகம்.

இடைநிலைத்தீவகம்:- [அணி.] தீவக அணி மூன்றனுள் ஒன்று. செய்யுளின் இடையில் அமைந்தசொல் பிறவற்றோடு இயைந்து பொருள் தருதலாகிய அணி. குணம், தொழில், சாதி பொருள் என்பனவற்றின் அடிப்படையில இடை நிலைத் தீவக அணி நான்கு வகைப்படும். அவை:-

1. இடைநிலைக் குணத்தீவகம்
2. இடைநிலைத் தொழில் தீவகம்
3. இடைநிலைச் சாதித் தீவகம்
4. இடைநிலைப் பொருட் டீவகம்

இடைநிலைத் தீவக அணி பொருள் கோளில் தாப்பிசை எனவும் அழைக்கப்பெறும் (இலக்.வி பக் 190)

இடைநிலைப்பாட்டு:- [பா.] கலிப்பா வகையுள் ஒன்று. ஒத்தாழிசைக் கலிப்பா இடை நிலைப்பாட்டு என்று வழங்கப்பெறும். [பார்க்க] ஒத்தாழிசை. 'தாழிசை எனினும் எண் எனினும் இடை நிலைப் பாட்டு எனினும் ஒன்றே'. [வீரசோ.யாப்.11.உரை]

இடைநிலைவிளக்கு:- இடை நிலைத்தீவகம்.

இடைமடக்கு- மடக்கணி வகை. மடக்கு என்பது எழுத்துக்களது தொகுதி. பிற எழுத்தானும் சொல்லானும் இடைவிடாது தாமே பெயர்த்தும வேறு பொருளை விளக்குதல் அம்மடக்கு நான்கடிச் செய்யுளுள்ளே நடக்குங்கால் ஓரடிக்கண்ணும்; ஈரடிக்கண்ணும், மூன்றடிக்கண்ணும், நான்கடிக்கண்ணும் பொருந்தி நடக்கும. (தண்டி -91) இது சொல்லணிகளுள் ஒன்று.

இடையாகெதுகை:- [யாப்.] அடிதோறும் இரண்டாம் எழுத்தொன்றே ஒன்றிவரத் தொடுப்பது. (காரிகை. ஒழிபி. 6. உரை]

[எ.டு] "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

இடையினமோனை :- (யாப்.) இடையினத்துள் 'ய'கர 'வ'கரங்கள் ஒன்றற்கொன்று மோனையாக வருவது. [காரிகை. ஒழிபு6 உரை]

இடையிட்டெதுகை - [யாப்.] ஒவ்வோரடி இடையிட்டு வரும் எதுகை. (இடையீடு+எதுகை).

(காரிகை. ஒழிபு.6. உரை)

இடையூறுகிளத்தல் - [அகம்.] தலைவி நாணங் கொண்டு தன் கண்களை மறைத்துக் கொண்டதனால் எழுந்த துன்பத்தைத் தலைவன் கூறுதல் [நம்பி.பக் 2 6]

இடையெண் :- [யாப்.] முச்சீர் ஓரடியாய் வரும். அம்போதரங்க வகை. (காரிகை. செய். 10. உரை)

இடையொத்து :- [இசை] தாளவகை [திவ். திருவாய்.]

இடைவண்ணம் :- இசைவகை. [பெரியபு. ஆனாய.28)

இடைவினாதல் ;- [அகம்.] தலைவன் தழைகாட்டித் தன் கருத்தறிவித்து அது வழியாக நின்று, 'நும அல்குலும், முலையும் அதிகபாரமாய் இராநின்றன; இவை இவ்வாறு நிற்றற்குக் காரணம் யாதோ', என்று அவரிடை வினவியது.

(திருக்கோ.பக்119)

இடோல் :- [இசை] பறைவகை

இட்டி ;- சங்கிரகச் செய்யுள்.

இட்டுப்பிரிவு :- [அகம] அண்மை இடத்தில் தலைவன் பிரியும் பிரிவு. 'இட்டுப்பிரிவிரங்கினும்' (தொல. பொ. 109] களவுக் காலத்தில தலைவிக்குக் கூற்று நிகழும இடங்களாக வரையறுக்கப் பட்டவற்றுள், தலைவன் தன்னை இட்டுவைத்துப் பிரிவன் எனததலைவி அஞ்சுமிடதது அதற்கிரங்கித் தலைவியால் கூற்று நிகழும. இட்டுப பிரிவு என்பதனை ஒருவழித் தணத்தல் என்பர்

இலக்கண விளக்க முடையார். (இலக். வி. 524) ஒருவழித் தணத்தலாவது, அலரடங்குதற் பொருட்டுத் தலைவன் சிலநாள் வேறிடத்துச் சென்று தலைவியைப் பிரிந்து உறைதலாம்.
[செ.ந் அக 116]

இணை :- [பார்க்க] இணைத்தொடை.

இணைக்குறளாசிரியப்பா :- [பா.] குறளடி இரண்டு இணைந்த ஆசிரியப்பா. ஈற்றடியும் முதலடியும் அளவடியாக இடையடிகள் பல குறளடியானும் சிந்தடியானும் வரும் அகவல்.
[காரிகை. செய். 8. உரை]

இணைக்கை :- [கூ] இரண்டு கைகளாற் புரியும் அபிநயம். [சிலப்.3 18 உரை] அவை: 1, அஞ்சலி 2 புட்பாஞ்சலி 3 கபோதம் 4. கர்க்கடகம் 5. சுவத்திகம் 6 கடகா வருத்தம் 7. நிடதம் 8 தோரம் 9 உற்சங்கம் 10. புட்பபுடம் 11. மகரம் 12 சயந்தம 13. அபயவத்தம் 14. வருத்தமானம.

இணைத்தொடை :. (யாப்.) அளவடியுள் முதலிருசீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது.
[இலக்.வி; 723 உரை]

இணைமணிமாலை : சிற்றிலக்கிய வகை. வெண்பாவும் கலித்துறையும் தம்மில் இயைந்து குறைதல் இல்லாத அந்தாதியாய் நூறு செய்யுளில் அமைவது. [பன்னிரு - 150]

வெண்பாவும், அகவலும் அல்லது வெண்பாவும் கலித்துறையுமாக இணைந்துவர நூறு நூறாக அந்தாதித் தொடையாற் பாடுவது. அது பாட்டின் போக்குப் போல 1. வெண்பா அகவல இணைமணி மாலை, 2. வெண்பா கலித்துறை இணைமணி மாலை என வகுத்துக் கூறப்படும். (வெண்பாப். பக். 37) இலக்கண விளக்கமும் வெண்பாப் பாட்டியலின் கருத்திலேயே அமைந்துள்ளது.

இணைமுரண் :- [யாப்.] ஓரடியின் முதலிரு சீரும் முரண்பட இணைந்து வருந் தொடை. (காரிகை. உறுப். 16 உரை)

இணைமோனை :- (யாப்.) ஓரடியின் முதலிரு சீரினும் மோனை (முதலெழுத்து) இயைந்துவருந் தொடை
(காரிகை உறுப். 16 உரை]

இணையளபெடை :- (யாப்.) முதலிரு சீரினும் அளபெடை வந்ததொடை [காரிகை. உறுப். 16 உரை)

இணையா வினைக்கை : (கூ.) ஒரு கையாற் புரியும் அபிநயம். (சிலப் 3. 18 உரை). அவை : 1. பதாகை, 2. திரிபதாகை, 3. கத்திரிகை, 4. தூபம், 5 அராளம், 6 இளம்பிறை, 7. சுகதுண்டம், 8. முட்டி, 9. கடகம், 10. சூசி, 11 கமல கோசிகம், 12. காங்கூலம், 13. கபித்தம், 14. விற்பிடி, 15. குடங்கை, 16. அலாபத்திரம், 17 பிரமரம், 18. தாம்பிரசூடம், 19 பிசாசம், 20. முகுளம், 21. பிண்டி, 22. தெரிநிலை, 23. மெய்நிலை, 24. உன்னம், 25 மண்டலம், 26. சதுரம். 27. மன்றலை, 28. சங்கு, 29. வண்டு, 30. இலதை, 31. கபோதம், 32. மகரமுகம், 33. வலம்புரி.

இணையியைபு :- (யாப்.) ஓரடியின் ஈற்றுச் சீரிரண்டும் இணைந்து வருந்தொடை. (காரிகை. உறுப். 16 உரை)

இணையெதுகை :- (யாப்.) ஓரடியின் முதலிரு சீரினும் எதுகை யியைந்து வருந்தொடை. (காரிகை. உறுப் 16 உரை)

இதர விதரம் :- (அணி.) உவமை அணிவகை. உவமைகளுள்ள இரண்டு வாக்கியங்களுள் முதலாவதின் உபமேய உபமானங்கள் முறையே இரண்டாவதன் உபமான உபமேயங்களாகத் தொடர்ந்து வருமாறு இரண்டு வாக்கியமாகச் சொல்லப்படும் ஒருவகை உவமை அணி. [தண்டி. 30]

இதழகலந்தாதி : நிரோட்டகவந்தாதி.

இந்தளங் குறிஞ்சி : (இசை) ஓர் இராகம். ஒரு பண்.

இந்தளம் :- [இசை.] மருதயாழ்த்திற வகை. [பிங்.] ஒரு பண்.

இந்திரகணம் :- செய்யுட் கணத்துள் ஒன்று. செய்யுளில் முதல் இடை, இறுதி ஆகிய இடங்களில் முற்று நேர்வரின் அது இந்திரகணம் எனப்படும். இந்திரகணத்தை வெண்பாப் பாட்டியல் 'துறக்கம்' எனவும் இலக்கண விளக்கப் பாட்டியல் சுவர்க்கம்' எனவும் குறிப்பிடுகின்றன. 'துறக்க' கணத்தை 'இயமான' னென்பாருமுளர். கணப்பொருத்தம் மூவகைச் சீர்க்கே சிறப்பாகக் கொள்ளப்படும். கணங்களின் அடிப்படையில் சீர் நாள், பயன் என்பனவும் கொள்ளப்படுகின்றன.

	சீர்	-	தேமாங்காய் (முற்றும் சீர்)
இந்திரகணம் :	நாள்	-	பரணி
	பயன்	-	பெருக்கம்.

(இலக். வி. 800)

இந்தோளம் :- [இசை.] மாலை இராக வகை. [பரத.இராக. 73. (பார்க்க). இராகம

இமிலை :- (இசை). ஒரு வாச்சியம்.

இமிழ்தல் .- (இசை) யாழொலித்தல். (பிங்)

இயக்கம் :- (இசை.) இசைப்பாட்டு வகை. (சிலப். 3 67) சுருதி (சிலப். 8. 42)

இயங்குபடையரவம் :- (புறப்.) புறப்பொருள் துறை. பகையரணை முற்றுதற் கெழுந்த படையின் செல்வால் (போக்கால்) உண்டான ஆரவாரத்தைக் கூறும் புறத்துறை. [தொல் பொ.63]

இயந்தை :- [இசை.] செவ்வழியாழ்த்திறவகை. (பிங்). ஒருபறை-மருதயாழ்த்திறவகை. (த. பே. அக)

இயமரம் :- [இசை] பறைவகை. (பதிற்றுப். 50. உரை)

இயமானகணம் :- (பார்க்க) இந்திரகணம்.

இயம்புணர்த்தூம்பு :- (இசை.) நெடுவங்கிய மென்னும் வாத்தியம் (ஐங்குறு. 377)

இயலசை :- (யாப்.) நேரசை; நிரையசை, 'இயலசை முதலிரண்டு' [தொல். பொ. 318] [பார்க்க] அசை.

இயலிசையந்தாதி :- [யாப்.] பொருளாலன்றி ஓசையால் வரும் அந்தாதித் தொடை. (ஈடு. 1. 6. 2. ஜீ)

இயலிடங்கேட்டல் :- [அகம்.] தலைமகனுடன் வருந்தி நின்ற பாங்கன், 'யானும் இவனுடன் கூட வருந்தினால் இவனை ஆற்றுவிப்பார் இல்லை" என அது பற்றுக்கோடாகத் தான் ஆற்றிநின்று, 'அதுகிடக்க நின்னால் காணப்பட்ட வடிவிற்கு இயலயாது? இடம் யாது? கூறுவாயாக' எனத் தலைவியுடைய இயலும் இடமும் கேட்டு நிற்றல். (திருக்கோ. பக் 65)

இயலிடங்கூறல் :- [அகம்] இயலிடங்கேட்ட பாங்கனுக்குத் தான் அவளை அடைந்தாற்போலப் பெரியதோர் ஆற்றுதலையுடையனாய் நின்று, என்னால் காணப்பட்ட வடிவுக்கு இயல் இவை இடம இது என்று இயலும் இடமும் கூறியது.

[திருக்கோ. பக். 66]

இயல் :- ஒருசாதிப் பொருள் கொண்டது. [பார்க்க] ஓத்து [நன். 16. உரை] நூலின் பகுதி.

இயல்பு நயம் :- நயங்கள் நான்கனுள் ஒன்று [மணி. 30. 218]

இயல்மொழிவாழ்த்து :- (புறப்.) புறப்பொருள்துறை. இரவலன் புரவலனை நோக்கி இன்னவன் இத்தகைய பொருளை வழங்கினன். நீயும் அவன் போன்று எமக்கு வழங்குவாயாக எனக் கூறிய பாடாண்துறை. (பு. வெ. பாடாண் 6.) இதனை 'அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்து' என்பர் தொல்காப்பியர். [தொல. பொ. 87] ஒரு வேந்தனின் தன்மையைக் கூறிப் புகழ்வதும் இயலமொழி வாழ்த்து என்னும் துறையாகும்.

(பு. வெ. பாடாண். 7)

இயவன் :- (இசை.) தோற்கருவியாளன். "கலித்தியவரியந் தொட்டன்ன". [மதுரைக். 304].

இயற்கைப்புணர்ச்சி :- (அகம்). தலைவனுந் தலைவியும் தெய்வத்தாற் கூடும் முதற்கூட்டம். அன்புடைத் தலைமக்கள் இருவரும் தம்மனக் குறிப்பின் ஒருவரையொருவர் எதிர்பாரா நிலையில் எதிர்ப்பட்டுக் கூடுங் கூட்டமாகும். இது தெய்வத்தின் எய்தும் புணர்ச்சி, தலைவியினெய்தும் புணர்ச்சி என இருவகைப்படும். தெய்வத்தால் நிகழுங்கால் தலைமக்கள் முயற்சியின்றித் தானே முடியும். இத்தகைய களவுப் புணர்ச்சி உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என இருவகைப்படும். உள்ளப் புணர்ச்சியே முதற்கண் நிகழ்வது. பின்னர், காட்சி, வேட்கை, ஒரு தலை உள்ளுதல், மெலிதல், ஆக்கஞ் செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவவெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்ற பத்து அவத்தைகளும் ஒருங்கே நிகழ்ந்தபின் மெய்யுறு புணர்ச்சி நிகழும். (நம்பி. அகத்திணையியற் கருத்து)

''மெய்யுறு புணர்ச்சியாவது உடற் கூட்டுறவு. மனம் ஒன்றிய காதலோர் உடல் ஒன்றுதற்குத் தனியிடம் தேர்வர். இடம் வாய்ப்பின் இன்பப் பாயல் கொள்ளப் பின்வாங்கார். களவுக்காலத்து உடற் கூட்டுறவே இல்லை என்றும் அது கூடாது என்றும் கூறுவார் கொள்கை - பிழையானது. களவுக் காலத்து மெய்யின்பம் துய்த்தமை பற்றிய அகப்பாடல்கள் பலவுள. (எ. டு. - அகம். 62) மெய்யுறு செய்கை இன்றாயின் இரவுக்குறி முதலான எத்துணையோ அகத்துறைகள் சிறந்த பயனிலவாய் ஒழியும்'' என்பர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் (தமிழ்க்காதல், பக். 47:)

இயற்கைப் புணர்ச்சி பதினெட்டு வகைப்படும் அவை-
1. காட்சி, 2. ஐயம், 3. தெளிவு, 4. நட்பு, 5. உட்கோள் 6. தெய்வத்தை மகிழ்தல், 7. புணர்ச்சி துணிதல், 8. கலவியுரைத்தல், 9. இருவயினொத்தல், 10. கிளவிவேட்டல், 11. நலம்புனைந்துரைத்தல், 12. பிரிவுணர்த்தல், 13. பருவரலறிதல் 14. அருட்குணமுரைத்தல், 15. இடமணித்துக்கூறி வற்புறுத்தல் 16. ஆடிடத்துய்த்தல், 17. அருமையறிதல், 18. பாங்கியை அறிதல்.

இப்பதினெட்டும், இயற்கைப்புணர்ச்சியும் அதன் நிமித்த மாகிய கிளவியுமாம். இயற்கைப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, காமப்புணர்ச்சி, தெய்வப்புணர்ச்சி எனவும் வழங்கப்பெறும். (திருக்கோ. பேரா. உரை. பக் 47)

இயற்சீர் :- [பார்க்க] அகலற்சீர்.

இயற்சீர் வெண்டளை :- [யாப்.] மாமுன் நிரையும், விளமுன் நேரும் வரும் தளை. (இலக். வி. 718 உரை)

இயற்பட மொழிதல் :- [அகம்.] தலைவன் குணங்களைத் தலைவி புகழ்ந்து கூறும் அகத்துறை. [திருக்கோ. பக். 378]

இயற்பழித்தல் :- (அகம்). தலைவன குணங்களைத் தோழி இகழ்ந்து கூறும் அகத்துறை (திருக்கோ. பக். 376)

இயற்றமிழ் :- முத்தமிழுள் ஒன்று. (பிங்) [இயல், இசை, நாடகம்]

இயல்மொழிவாழ்த்து :- இக்குடிப் பிறந்தோர்க்கு எல்லாம் இக் குணம் இயலபாக உடையை என்றும், இன்னார் போல நீயும் இயல்பாக ஈ என்றும் உயர்ந்தோர் ஒருவனை வாழ்த்துவதாகக் கூறுவது. (இலக் வி. பாட் பக். 482)

இயைபின்மை நீக்கம்:- தன்னோடியைபின்மை நீக்கும் விசேடணம். செம்மை; செஞ்ஞாயிறு

இயைபின்மையணி :- (அணி) ஒரு வாக்கியத்துள் ஒரு பொருளையே உபமானமாகவும், உபமேயமாகவும் சொல்லுதல். இதனைத் தண்டியாசிரியர் பொதுமைநீங்குவமை என்பர். [எ.டு]

> "தேனே யனையமொழி சேயிழையாள் செவ்வியினால்
> தானே உவமை தனக்கு

இதில் இப்பொருளுக்கு ஒப்பு இரண்டாவது ஒன்றில்லை' என்பது கருத்து. இவ்வணி வடமொழியில் 'அநந்வயாலங்காரம்' எனப்படும். (அணியி. 2)

இயைபு:- நூல் வனப்புள் ஒன்று [தொ. பொ.552) (பார்க்க) இயைபுத்தொடை. (பார்க்க) ஆனந்தரியம். பொருத்தம். 'பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல், (குறள். 573) ஞ;ண;ந;ம;ன;ய;ர;ல;வ;ழ;ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாகவந்த பாட்டு (தொல்.1496.உரை)

இயைபுத்தொடை:- (யாப்.)ஈற்றெழுத்துஒன்றிவரத் தொடுப்பது. [இலக்.வி. 723).

இயைபுருவகம்:- (அணி.)உருவக அணியுள் ஒன்று. பல பொருள்களை உருவகம் செய்யும் போது தம்முள் இயைபுடையவாக வைத்து உருவகம் செய்வது. (எ.டு).

"செவ்வாய்த் தளிரும் நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளக மதுகரமும் – செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றே துயர்"

முகை — அரும்பு. இதனுள் தளிரும்,முகிழும்,மலரும், மதுகரமும் தம்முள் இயைபுடையன. வாய், நகை, கண், கூந்தல் ஆகியன ஒன்றற் கொன்று இயைபுடைய பொருள்கள். இவற்றை முறையே தளிர்,அரும்பு,மலர், வண்டுகளாகவும், அவை தம்முள் இயைபுடையனவாகவும் உருவகிக்கப்பட்டுள்ளமையின் இது இயைபுருவகமாயிற்று. [தண்டி. 35 உரை)

இயைபுவண்ணம்:- (யாப்.) இடை எழுத்துக்கள் மிகுந்து வரும் சந்தம். (தொல்.பொ. 530]

இரக்கமொடுநீட்சி:- [பார்க்க) உடன் போக்கிடையீடு.

இரங்கல்:- (இசை.) யாழ்நரம்போசை. [பிங்).

இரங்கல்விலக்கு:- (பார்க்க) முன்னவிலக்கணி.

இரங்கற்பா:- சரம கவி. கையறு நிலைப்பா.

இரசம்:- சுவை. செய்யுட்சுவை.

இரட்டல்:- [இசை] யாழ்நரம்போசை. [பிங்]. ஒலிக்கை. [பிங்]

இரட்டித்துச்சொல்லுதல்:- மீட்டுங் கூறுதல். மாறுபடக் கூறுதல்.

இரட்டுமி:- [இசை] ஒரு வாத்தியம். பேரிகை[த.பே.அக) பறைவகை.

இரட்டுறமொழிதல்:- [உத்தி] முப்பத்திரண்டு உத்திகளுள் கூறப்புகுந்த செய்தியை இருபொருள்படக் கூறுதல். [நன். 14. உரை] அணிவகையுமாகும்.

இரட்டுறல் :- சிலேடை. [மாறன். 299. உரை]

இரட்டுறுதல் :- இருபொருள்படுதல். ஐயுறுதல். மாறுபடுதல்.

இரட்டைக்கை :- [பார்க்க] இணைக்கை.

இரட்டைத்தாளம் :- [இசை] தாளவகை. 'இரட்டைத் தாளத்திற்குப் பொருந்த ஒரு பாட்டினை யான் பேணிப் பாடுதற்கு முன்னே' (பொருந 71 உரை]

இரட்டைத் தொடை :- [யாப்] ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொகுப்பது. [காரிகை. உறுப். 17. உரை]

இரட்டை நாகபந்தம்:- (பா) சித்திரக் கவிவகை இரண்டு பாம்புகள் தம்முள் இணைவனவாக உபதேச முறையான் எழுதி ஒருநேரிசை வெண்பாவும், ஓரின்னிசை வெண்பாவும எழுதிச் சந்திகளில் நின்ற எழுத்தே மற்றையிடங்களிலும் உறுப்பாய்நிற்கப் பாடுவது மேற்சுற்றுச்சந்தி நான்கினும் நான்கெழுத்தும், கீழ்ச்சுற்றுச்சந்தி நான்கினும் நான்கெழுத்தும, இரண்டு பாம்புகளின் நடுச்சந்தி நான்கினும் இரண்டுபாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாகச் சித்திரத்தில் அமைபபது. [இவ்விளக்கத்திற்கான சித்திரம தண்டியலங்காரம் - பக். 210 காண்க].

இரட்டைமணிமாலை :- சிற்றிலக்கிய வகை. முதலில் வெண்பாவும், அடுத்துக் கலித்துறையும், அடுத்து மீண்டும வெண்பாவும், இவ்-

வாறாக அந்தாதித் தொடையால் இருபது செய்யுட்கள் பாடப் படுவது; இரட்டைமணிமாலை என வெண்பாப் பாட்டியலும் [151] இலக்கண விளக்கமும் (819) குறிப்பிடும்.

வெண்பாப் பாட்டியலில் அந்தாதித் தொடையில் இருபது பாட்டு, வெண்பாவும் கலித்துறையுமாக வருவதும்; வெண்பா பத்தும் விருத்தம் பத்துமாக அந்தாதித் தொடையில் இயைந்து-வருவதும் என இரட்டைமணிமாலையின் இலக்கணம் வகுக்கப்-பட்டுள்ளது. [பக் 37]. வெண்பாவும், கலித்துறையும இயைந்த இரட்டைமணிமாலையை வெண்பாக் கலித்துறை இரட்டை-மணிமாலை எனவும், வெண்பாவும் விருத்தமுமாக இயைந்த இரட்டைமணிமாலையை வெண்பா விருத்த இரட்டைமணி-மாலை எனவும கூறும். [வெண்பாப். பக். 37]

இரட்டைவிருத்தம் :- (பா.) பதினொரு சீர்க்கு மேற்பட்ட சீரான் வரும் கழிநெடிலடி யாசிரிய விருத்தம். (வீரசோ. யாப். 3. உரை)

இரணத்தொடை :- [யாப்.] முரண்தொடை. (காரிகை. ஒழிபி.5)

இரண்டுறக் காண்டல் :- ஐயக் காட்சி. இது திரியக் காண்டல், இரட்டுறக்காண்டல், தெளியக் காண்டல் என மூன்று வகைப்-படும். (சி. போ. பா. 9. பக். 190)

இரதபந்தம் :- (பா.) சித்திரக் கவிவகை (மாறன். 286)

இரதம் போன்ற சித்திர அமைப்பிற்குள் எழுத்துக்களை அமைத்துக் கவிபாடல். "சதுரங்கவறையுள் தேர் செல்வது எனவும், மந்திரி செல்வது எனவும் ஒரு செய்யுட் குண்டான எழுத்துக்களைத் தேரினது அறைக்கு நடுவே ஒரு திருநாமமாதல், ஒரு பழமொழியாதல் அழகு பெற்று நிற்க இரதத்திலே எழுத்-துக்களை அடைப்பது" [மாறன் 286]

(சித்திரம்—மாறனலங்காரம் பிற்சேர்க்கையுள் காண்க)

இரத பந்தத்தில் அமைந்த பாடல் எடுத்துக்காட்டு.

"நாரரா ரார்ரா யநயன பணா விண்ண்
ணாராம ணாய னியமாயவா — சீராய

நான்கா நமநம நான்கா நமநம
மன்காமன் றாதாய் நம"

"மாயவனே வேதமதி யேவய நாக
பாயவனே தேநளின பாதா பராபரா
தூயவனே காரணா பூரணா தோணிலமா
ணாயகனே சீராக நாராய ணாயநம"

இரந்துபின்நிற்றல் :- (அகம்.) தலைவன், தலைவியை இரந்து அவள் மனம் மகிழும்படி சில சொற்கள் கூற எண்ணுதல். இது தலைவியினெய்தும் புணர்ச்சி வகையுள் ஒன்று. பின்னிற்றல் - இதஞ்சொல்லுதல். [மனம் மகிழக் கூறல்].

[அ. பொ. வி. பக். 275]

இரந்துபின்னிலை நிற்றல் :- (அகம்.) தலைவியை இரந்து அவள் மனம் மகிழக் கூறித் தலைவன் நிற்றல். [பார்க்க.] இரந்து பின்னிற்றல்.

இரவச்சம் :- மானம் தீரவரும் யாசகத்துக்கு அஞ்சுகை

(குறள். அதி. 107)

இரவுக்குறி :- (அகம்.) தலைவன் தலைவியர் களவுக்காலத்தில் இரவு நேரத்தில் சந்திப்பதற்காகக் குறிக்கப்படும் இடம். இத்தகைய இடம் வீட்டின்கண் மனையகம் புகாவிட்டு மனையோர்க் கிளவி கேட்கும் அணிமைத்ததாக அமையும் என்பர் தொல்காப்பியர். இரவுக்குறியின் வகை ஒன்பது. அவை:

1. இரவுக்குறி வேண்டல் 2. மறுத்தல் 3. உடன்பட்டல் 4. கூட்டல் 5. கூடல் 6. பாராட்டல் 7. பாங்கியிற் கூட்டல் 8. உய்ங்கல் 9. நீங்கல்.

தலைவன் இரவுக் குறிவேண்டத் தோழி நெறி அருமை கூறல்; தலைவன் நெறியின் எளிமை கூறல்; தோழி தலைவன் நாட்டு அணியியல் வினாதல்; தலைவனுக்குத் தோழி தன் நாட்டு அணியியல் சாற்றல் முதலான இருபத்தேழும் இதன் விரியாகும்.

[அ. பொ. வி. பக். 110]

இரவுக்குறியிடையீடு :- [அகம்.] தலைவன் தலைவியின் இரவுச் சந்திப்பின் தடைப்பாடு. இது அல்லகுறி, வருந்தொழிற்கு அருமைகூறல் என்ற இரு வகையினையுடையது.
[அ. பொ. வி. பக். 111]

இரவுக்குறிவேண்டல் :- [அகம்.] இரவுக் குறியின் வகை ஒன்பதுள் ஒன்று. (பார்க்க) இரவுக்குறி.

இரவுத்தலைச்சேறல் :- (புறப்.) புறப்பொருள்துறை. தலைவி தலைவனைக் காண விரும்பித் தன் மனையினின்றும் இருள்நெறிச் சென்றது பற்றிக் கூறும் புறத்துறை. [பு. வெ. பெருந். 9] இது பெண்பாற் கூற்று. தலை - இடம்; சேறல் - செல்லுதல் இரவின்கண் தலைவி தலைவனிடத்துச் செல்லுதல்.
[பார்க்க] பெருந்திணை.

இரவுநீடு பருவரல் :- (புறப்.)புறப்பொருள்துறை. தலைவி இராப்பொழுதில் காமத்தால் துன்புற்றதனைக் கூறும் புறத்துறை. [பு. வெ. கைக்கிளை. 17] இது பெண்பாற் கூற்று. இரவு நீடுதலால் உண்டாகிய பருவரல் (துன்பம்).

இராகங்கலத்தல் :- [இசை]. ஓரிராகம் மற்றொன்றோடு சேர்தல்.

இராகம் :- இசை. அவை முப்பத்திரண்டு [32] வகையின.

1. மகரஞ்சி 2. குறிஞ்சி 3. பூபாளம் 4. கைசிகம் 5. வராளி 6. மலகரி 7. பல்லதி 8. இந்தோளம் 9. படமஞ்சரி 10. நாராயணி 11. நாட்டை 12. வசந்தம் 13. பௌளி 14. ஸ்ரீராகம் 15. பங்காளம் 16. கூர்ச்சரம் 17. கௌளி 18. காந்தாரி 19. லலிதை 20. தேவக்கிரியை 21 தேசாக்ஷரி 22. மாளவி 23. சாவேரி 24. தேசி 26 சாரங்கம் 26. தோடி 27. இராமக்கிரியை 28 வேளாவளி 29. பைரவி 30. குண்டக்கிரியை 31. தன்னியாசி 32. இராமகலி (த. பே. அக.)

இராமகலி :- (இசை) இராகவகை.

இராமக்கிரி :- (இசை) குறிஞ்சிப் பண்வகை.

இராமக்கிரியை :- [இசை.] ஓர் இசை. ஒரு பண். ஓர் இராகம்.

இராப்பண் :- [இசை] இராக் காலத்தில் பாடுதற்குரிய பண்.

இருக்குக்குறள் :- [பா] சிறிய பாவகை. ''ஏகபாதந் தமிழிருக்கு குறள் சாத்தி'' [பெரியபு. திருஞா 276] திருஞானசம்பந்தர் தேவார மூன்றாந் திருமுறையுள் அமைந்த பாடல் இருக்குக் குறளுக்கு எடுத்துக்காட்டாம். [திருச்சிற்றம்பலம்— பண்— கொல்லி]

இருகுறணேரிசைவெண்பா : [பா] நேரிசை வெண்பா வகை. இரண்டு குறள் வெண்பாவாய் நடுவுமுதல் தொடைக்கேற்ற தனிச் சொல்லால் அடிநிரம்பிச் செப்பலோசை வழுவாது முதலி ரண்டடியும் ஒரு விகற்பமாய்க், கடையிரண்டடியும் மற்றொரு விகற்பமாய் வரினும், நான்கடியும் ஒரு விகற்பமாய் வரினும இருகுறள் நேரிசை வெண்பா எனப்படும். [காரிகை. செய். 3. பக் 65]

[எ.டு.] ''தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு-பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நாடாயினா னூர்''
[இரண்டு விகற்பத்தான் வந்தது]

''அரிய வரைக்கீண்டு காட்டுவார் யாவரே
பெரிய வரைவயிரங் கொண்டு — தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தானென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு''
[ஒரு விகற்பத்தான் வந்தது.]

இருசீர்ப்பாணி :- (இசை). இரட்டைத்தாளம். [பொருந. 71]

இருத்தல் :- [அகம்]. முல்லையுரிப்பொருள் [நம்பி. 25]

இருபுறவசை :- வசைபோன்றவாழ்த்து. [யாப். வி. 95 பக். 512]

இருபுறவாழ்த்து : வாழ்த்துப்போன்ற வசை. [யாப். வி. 95 பக். 512]

இருமுற்றிரட்டை :- [யா.] ஒரு செய்யுளின் ஓரடி முற்றெதுகையாய் மற்றையடி மற்றொரு முற்றெதுகையாய் வருவது.
(யாப். வி. பக். 182)

இருமைச் செய்யுட் குறியணி :- [பார்க்க] தொடர் நிலைச் செய்யுட் குறியணி.

இருபாஇருப.".து :- சிற்றிலக்கிய வகை. பத்து வெண்பாவும் பத்து அகவலும் அந்தாதித் தொடையால் இருபது இணைந்து வருவது. (இலக், வி. பாட். 483)

இருமைப்பல்பொருட்சொற்றொடர் :- [பார்க்க] பல் பொருட் சொற்றொடரணி

இருவருமொத்தல் :- [அகம்] இயற்கைப் புணர்ச்சி வகை. தலைவன் தலைவியைப் புணர்தற்கு முன் இருந்த வேட்கை அன்பு புணர்ந்தபின்பும் அத்தன்மையதாகவே இருத்தல்.
[திருக்கோ.]

இருவரும்தபுநிலை:- [புறப்] புறப்பொருள் துறை. இருமன்னரின் படையும் பொருது மடிந்ததால் இரண்டு மன்னரும் தம்முட் பொருது பட்டது பற்றிக்கூறும் தும்பைத் துறை. பொருது படைக்களத்தில் அழியக் காரணமாக இருவேந்தரும் பட்டது எனினும் பொருந்தும். [பு. வெ. தும்பை. 12 உரை]

இருவருந்தபுநிலை :- [புறப்.] எயிலின் அகத்தும் புறத்தும் நின்ற வேந்தரிருவரும் பொருது வீழ்ந்தமை கூறும புறத்துறை.
[தொல். பொ. 68]

இருவருமுன்வழி அவன் வரவுணர்தல் : [அகம்.] பாங்கி மதியுடம் பாட்டின் வகை. தலைவியும், தோழியும் ஒருங்கிருந்தவழி தலைவன் தழையுங் கண்ணியுங் கொண்டு வரக் கண்டு முன் போல ஊர், பெயர் முதலியன வினவிய விடத்துத் தோழி கூட்டம் உண்மையை அறிதல். இது [1] தலைவனிடம் எதிர் மொழி கொடுத்தல், [2] தலைவனை நகுதல், [3] அறிவால்

அவரவர் மனக்கருத்துணர்தல் என மூன்று வகையினையுடையது.
(அ. பொ. வி. 107)

இருவர் நினைவு மொரு வழியுணர்தல் : (அகம்.) தலைவனுள் தலைவி ஆகிய இருவர் நினைவுங் கண்டு இன்புற்ற தோழி; இவ்விருவரும் இவ்விடத்து வந்த காரியம் இவன் முகமாகிய தாமரைக் கண் இவள் கண்ணாகிய வண்டு இன்பத் தேனையுண்டுளழில் பெற வந்த இத்துணையல்லது பிறிதில்லை. என அவ்விருவரது நினைவுந் துணிந்துணர்ந்தது. (திருக்கோ, பக், 134)

இருளன் : (கூ). வரிக் கூத்து வகை. [சிலப். 3. 13 உரை]

இலக்கணி : இலக்கணம் வல்லான்.

இலக்கணை :- ஒரு பொருளைக் காட்டற்கு உரிய சொல்லை மற்றொரு பொருட்குத் தந்து உரைப்பது. [நன். 269. விருத்.] விட்ட விலக்கணை, விடாத விலக்கணை, விட்டும் விடாத விலக்கணை.

இலக்கியம் : 1 சான்றோர் நூல், 2 உதாரணம்; 'ஏற்றப் படாதன வின்னிசைச் சிந்திற் கிலக்கியமே'.
[காரிகை. செய. 5. உரை]

இலதை :- [கூ]. இணையா வினைக்கை வகை [சிலப். 3. 18. உரை] ஒரு வகையொலி.

இலம்பகம் :- நூலின் உட்பிரிவு. நாமகளிலம்பகம் [சீவக].

இலயம் :- [கூ] கூத்து விகற்பம். 'இலயங்களாடக் கண்டேன்.
[தேவா. 1234. 6]

இலயை :- [இசை] தாளப் பிரமாணத் தொன்று.
[பரத. தாள 5]

இலலித பஞ்சமி ;- [இசை] இராக வகை. [பரத. இராக. 10?]

இலலிதை :- [இசை] இராக வகையுள் ஒன்று [பார்க்க] இராகம்.

இலேசம் :- [பார்க்க] இலேசவணி.

இலேசவணி :- [அணி.] குறிப்பை வெளிப்படுத்தும் மெய்ப்பாடு வேறொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லுவதாகிய அணி. இலேசவணி இருவகைப்படும்.

1] புகழ்வது போலப் பழித்தல்

2] பழிப்பது போலப் புகழ்தல் [தண்டி. 15. உரை.]

குணத்தைக் குற்றமாகவும், குற்றத்தைக் குணமாகவும் சொல்லும் அணியே இலேசவணி என்பார் அணியிலக்கண ஆசிரியர்.

[எ டு.] "பறவைக ளெலாமனம் படியே திரிதரக்
குறைவிலிக் கிளிக்குக் கூட்டுச்
சிறைதீங் கிளவியிற் சேர்பய னாமே"

இது, அரசனுக்கு இனியவனாய்த் தன்னீங்கி அவன் புறத்து நெடுநாளாக இருக்கும் கல்வி சான்ற புதல்வனைப் பார்ப்பதற்கு விரும்பிய தந்தையாற் சொல்லப்பட்டது. இதில் மதுரச் சொல்லாகிய குணம் பஞ்சரஞ்சிறைக்குக் காரணமாகையால் குற்றமாகவும், மதுரச்சொல் இல்லாமையாகிய குற்றம் வேண்டியவாறு திரிதற்குக் காரணமாகையால் குணமாகவும் சொல்லப்பட்டது. இலேசவணியை வடமொழியில் 'இலேசா-லங்காரம்' என்பர். [அணியி. 72].

இலைக்குழல் :- [இசை.] இலையால் அமைந்த ஊது கருவி. 'அண்ண லிலைக் குழலூதி" (திவ். பெரியதி. 10.7.6.)

இலையம் :- [கூ.] கூத்தின் விகற்பம். [அக.நி.]

இல்பொருளுவமை :- [அணி.] உலகில் இல்லாத பொருளை உவமையாகக் கூறுதல். [பார்க்க]. அபூதஉவமை.

இல்லவைநகுதல் :- [புறப்.] புறப்பொருள்துறை. தலைவி, தலைவன் செய்யாதவற்றைச் செய்தனவாகக் கூறி நகைத்ததுபற்றிக் கூறும் புறத்துறை. [பு வெ பெருந் 7]

இது பெண்பாற்கூற்று இல்லாதன கூறி நகுதல். தலைவி தானே சொல்லித் தானே நகுதல் [பார்க்க]. பெருந்திணை

இல்லாண்முல்லை :- [புறப்.] புறப்பொருள்துறை. பாசறைத் தலைவனை' இல்லாள் நினையும் புறத்துறை. (திவா.) தலைவி தலைவனை வாழ்த்தி விருந்தோம்பும் இல்லத்தின் மிகுதியைப் புகழ்ந்து கூறும் புறத்துறை. [பு வெ. 10. முல்லை]

இழிவழக்கு :- இழிசினர் வழக்கு. [தொல் எழுத்.64. நச்சி] தாழ்ந்தோரின் பழக்க வழக்கம்.

இழுகுபறை ;- [இசை] துடிப்பறை. [அகநா. 19. உரை)

இழுமெனல் :- இன்னோசைக் குறிப்பு.
[தொல். பொ. 550; புறநா.3]

இழைபு :- நூல் வனப்புக்களுள் ஒன்று. ''ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடங்காது ஆசிரியப்பாவிற்கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது. இழைபு என்னும் செய்யுளாம். [தொல், செய்யு 236]

இழைபு என்னும் நூல் வனப்பை, ''வல்லொற்று யாதும் தீண்டப்படாது செயயுளியலுடையோரால் எழுத்தெண்ணிவகுக்கப்பட்ட குறளடி முதலாப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களான் வருவது'' என்பர் விருத்தியார். [எ.டு]

''பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து—

....

.... — ... ஒழிகுவ தன்றே''
[யாப்.வி. பக்.401. தொல். செய்.543]

இளமை கூறிமறுத்தல் :- [அகம்] தலைவன் தலைவிக்குச் சிறப்புடைத் தழை கொண்டு வந்தானாக; அது கண்ட தோழி குழலும், முலையும் குவியாத குதலைச் சொல்லிக்கு நீ சொல்லுகின்ற காரியம் சிறிதும் இயைபுடைத்தன்றென அவளது இளமை கூறி மறுத்துரைத்தல். [கல்லாடம். பக். 52]

இளம்பிறை : [கூ.] இணையா வினைக்கை வகை [சிலப். 3. 18. உரை]

இளி :- [இசை.] பஞ்சம சுரம். (திவா.) [பார்க்க]. இசை.

இளிப்பு - [சுவை] இளிப்புச் சுவை. [சிலப். 3. 13. உரை]

இளிவரல் :- [சுவை] எண்சுவையுள் ஒன்று. மூப்பு, பிணி வருத்தம், மென்மை என்னும் நான்கு பொருள்பற்றிப் பிறப்பது இளிவரல். இவையேயன்றி வீரம் முதலாயின பற்றியும் பிறக்கும் இளிவரல் இருவகையில் அமையும்.

1. தன்கட்டோன்றுவன.
2. பிறன்கட்டோன்றுவன.

[தொல். மெய். 254 பேரா. உரை

தன்கண்தோன்றல் :- [எ.டு.]

"தொடித்தலை விழுத்தண்டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல
பெருமூ தாளரே மாகிய வெமக்கே"

[புறம். 243]

பிறன்கண்தோன்றல் :- [எ.டு.]

"முத்துத்தலை யிறைஞ்சிய நின்னோடு யானே
போர்த்தொழில் தொடங்க நாணுவல் அதனால்"

வீரம்பற்றிய இளிவரல் :- [எ.டு.]

"தானால் விலங்கால் தனித்தால் பிறன்வரைத்தால்
யானை யெறிதல் இளிவரவால் - யானை
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்து வாழ்வேன்"

[தொல். மெய். பக் 111]

இறந்ததுவிலக்கல் :- [உத்தி.] முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுக்குள்ளே பிற்காலத்து வழக்கொழிந்ததை நீக்குதலாகிய உத்தி, இது உத்தி முப்பத்திரண்டனுள் ஒன்று.
[நன். 14. உரை]

இறந்தவழக்கு :- வீழ்ந்த வழக்கு. [சீவக. 2108 உரை]

இறவாணம் :- [இசை.] தோற் கருவிவகை [யாழ். அக.]

இறவுளர் :- குறிஞ்சிநில மக்கள். [பெரியபு. கண். 16]

இறுக்கர் :- பாலை நில மக்கள். [சூடா.]

இறைச்சி :- [பொருள்.] 1. கருப்பொருளைக் கொண்டு நேராக உணரப்படாது. கூறப்பட்ட செய்தியின் புறத்தே குறித்து உணரப்படுவதாகும். 2. உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள்.- கருப்பொருளின் புறத்தே தோன்றும் பொருள் என்றும் கூறுப. "இறைச்சி என்பது உரிப்பொருளின் புறத்தே தோன்றும் பறவை, விலங்குகள் போன்ற உயிரினங்களின் செயல்பற்றிய செய்தியாகும். இங்ஙனம் வரும் இறைச்சி பெரிதும் ஓர்பொருள் கொள்ளக் கிடப்பனவும், கிடவாதனவும் என இருவகைப்படும் [சங்க இலக்கிய ஒப்பீடு, டாக்டர். தமிழண்ணல் பக். 154] 3. கருபபொருளாகிய நாடு, ஊர், துறை, ஆகியவற்றிற்கு அடையாக வருவது. 4 பொதுவாகக் கருப்பொருள்களையும் சிறப்பாக அக்கருப்பொருள் சார்ந்த உயிரினங்களையும் குறிக்கும்.
[சங்க இலக்கிய ஒப்பீடு. பக். 157]

5. உள்ளுறை ஐந்தில் முதலாவதாகிய உடனுரையே இறைச்சி என்பர் நச்சினார்க்கினியர். 6. டாக்டர் உ.வே சா. இறைச்சியைக் 'குறிப்பு' என்று குறிப்பிடுவார்
[குறுந்தொகை. உ. வே. சா.]

7. இறைச்சிப் பொருள்கோள் என ஒன்றைத் தொல்காப்பியர் கூறுவதாக ஔவை. சு. துரைச்சாமிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.
[ஐங்குறு. உரை. முன்னுரை]

8. இறைச்சிப் பொருளை 'இறைச்சிப் பொருள் அலங்காரம்' என்று ஓர் அணியாகக் கொள்வார் மாறனலங்கார ஆசிரியர். [மாறன். 176]

9. வடநூலார் இறைச்சிப் பொருளைத் 'த்வனி' [தொனி] எனக் குறிப்பர்.

''இறைச்சிதானே உரிப்புறத் ததுவே'' என்பர் தொல்காப்பியர். 'பொருட் புறத்ததுவே' என்ற பாட பேதமும் காணப்படுவது நோக்கற்குரியது. [தொல, பொ. 225 இளம்.] அன்புறுதற்குத் தகுவன இறைச்சிப் பொருட்கண் சுட்டப்படலும் கொள்ளப் படுகிறது. [இளம்பூ] ''அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்'' என்பர் தொல்காப்பியர் [226.] அன்புறு தகுவனவாவது தோழி, கருப் பொருள்களுள் தலைவன் அன்பு செலுத்தற்குத் தகுவனவற்றைக் கருதிக் கூறுதல் என்பர் நச்சினார்க்கினியர்.
[தொல். பொ. 231, நச்சர்.]

இறைச்சி :- இறை-தங்குதல் கருப்பொருளில் தங்கிய பொருள் என்பது இதன் விளக்கம். இது உள்ளுறை உவமத்தைப் போலவே கருப்பொருளிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளும் பொருளாகும். ஆனால் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. உள்ளுறை என்பது கூறப்பட்ட பொருளும், உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிவதாகும். இறைச்சியென்பது கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிந்து அதனின்று மற்றொரு பொருள் அவாவப்பட்டு நிற்பதாகும் [அ. பொ. வி. பக். 422].

இறைச்சிப்பொருள்:- கருப் பொருளினுள்ளே கொள்ளும் பொருள். [தொல். பொ. 229] [பார்க்க] இறைச்சி.

இறையணி :- [அணி.] பொருளணி வகை. இதனை வடமொழியில் 'உத்தாலங்காரம்', என்பர். இறையணி இரண்டு வகைப்படும்.

1. மறைப்பு இறை :- ஒரு கருத்தைத் தன்னுள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிற உத்தரத்தைச் சொல்லுதல். [எ.டு.]

'மாயையை யகன்றா னடக்கக்கா லெழுமோ
வாயிடை மாற்றமொன் றுண்டோ
போயொரு விடய முணமனம் வருமோ
பொருந்துற பகலிர வுளவோ
காயமு முயிருங் கலந்துவாழ் வுறுமோ
கண்டன மெனவெனை யொருவர்
நீயறி வுறவிங் குரைப்பவ ருளரோ
நேரிழா யென்றனை னிமலன்''

இதில் மாயை பிரிவு அப்பெயரினள் பிரிவுள் மறைந்தது.

2. வியப்பு இறை :- ஒரு வினாவிற்கு அதனையே விடையாகவும் பல வினாக்களுக்கு ஒன்றே விடையாகவும் சொல்லுதல்.

எ.டு] ''என்பணி பூண்டா னிறைவன்''

இதில் **என்பணி**,—யாதுபூணென்னவும், எலும்புப் பூணென்னவுமாம்.
[அணியி. 83]

இற்கொண்டுபுகுதல் :- [புறப்.] புறப்பொருள் துறை. போரிற்பட்ட மறவன் கல்லைக் கோயிலெடுத்து அதன்கட் கொண்டு புக்கது பற்றிக் கூறும் புறத்துறை. [பு. வெ பொது 14] புறப்பொருள் வெண்பாமாலை இதனைப் பொதுவியற் றிணையுள் அடக்கும். 'சீர்த்தகு மரபிற் பெரும்படை' எனக் கூறித்தொல்காப்பியர் கரந்தைத் திணையுள் அடக்குவார்.
[தொல்.புறத். 63]

இற்செறித்தல் :- (அகம்.) தலைவனைச் சந்தித்தற்கிடமின்றிப் பெற்றோர் தலைவியை அவள் வயது முதிர்ச்சி நோக்கி வீட்டினுள் இருத்துதல். [திருக்கோ.134]

இற்செறிவு :- [பார்க்க] இற்செறித்தல்,

இற்பரத்தை :- [அகம்.] காமக்கிழத்தியாகக் கொண்ட பரத்தை. [பரிபா. 6. உரை]. காதற்பரத்தை.

இனமோனை :- [யாப்.] இனவெழுத்தாய் வரும் மோனை. (காரிகை ஒழிபி. 6) வலலினமோனை; மெல்லினமோனை; இடையினமோனை.

இனவெதுகை :- (யாப்.) இனவெழுத்தாய் வரும் எதுகை. (காரிகை. ஒழிபி.6) வல்லின வெதுகை; மெல்லினவெதுகை; இடை-யின வெதுகை.

இனவெழுத்துப்பாட்டு:- (பா) வல்லினம் முதலிய மூவினங்களுள் ஓரினத் தெழுத்துக்களே வரப்பாடும் சித்திரக் கவிவகை. (யாப்.வி.503)

இன்சொலுவமை :- (அணி.) பொருளில் உவமைக்கொரு மிகுதி தோன்றக் கூறி இனனுமிகுதியுடைத் தெனினு மொப்பதன்றிச் சிறப்பிலையென முடிப்பதோர் அணி. (த-பே.அக.)

இன்பம் :- சொல்லினும் பொருளினும் சுவைபடுவதாகிய குணம். [தண்டி. 18] அகமகிழ்ச்சி (திவா). காமம். 'அறம் பொருளின்-பம்' (குறள் 501). திருமணம். 'கொம்பனையும்... குன்றனை யானையும் .. இன்பமியற்றினார், (சீவக. 1980]

இன்பவணி :- (அணி.) பொருளணி வகை இதனை வடநூலார் 'பிரஹர்ஷணாலங்காரம்' என்பர். இவ்வணி மூன்றுவகைப்படும்

(1) முயற்சியினின்று விரும்பப்பட்ட காரியஞ் சிந்தித்தல்

(எ.டு) " தன்னா யகன் விழைந்த தையலையே தூதாக
அன்னான்கண் உய்த்தாள் அணங்கு''

(2) விரும்பப்பட்ட பொருளினும் அதிகமாகிய பொருள் சிந்தித்தல் :- (எ.டு)

''மழுங்குவிளக் கைத்தூண்ட மங்கை யெழும்போது
செழுங்கதிர்தோன் றிற்றிருள்கால் சீத்து''

(3) உபாயஞ் சிந்தித்தற் பொருட்டுச் செய்யும் முயற்சியால் பலமே சித்தித்தல் :- [எ.டு.]

"தங்கு நிதியஞ் சனமு விகையகழ்ந் தோன்
அங்குநிதி யேகண்டா னன்று"

(அணியி,67)

இன்மைநவிற்சியணி :- (அணி.) பொருளணிவகை. யாதேனும் ஒன்றன் இல்லாமையால் உவமிக்கப்படும் பொருளை [வருணியத்தை] உயர்வடைவதாகவேனும், தாழ்வடைவதாகவேனும் சொல்லுதல். இதனை வடநூலார், 'விநோக்தியலங்காரம்' என்பர். (எ.டு).

"மறங்கொள் கொடியோரி லாமையினம் மன்னோ
சிறந்துளதுன் பேரவைசீர் சேர்ந்து"

இதில் தீயோரில்லாமையால் சபைக்கு உயர்வு சொல்லப்பட்டது.

"புகழ்க்குரியன் கற்றோ னெனினும் புவியில்
இகழ்க்குரியன் சாந்தமில னேல்"

இதில் சாந்தமில்லாமையால் கற்றோனுக்குத் தாழ்வு சொல்லப்பட்டது. (அணியி.22)

இன்மையதுஅபாவம் :- [பார்க்க] ஏதுவணி.

இன்றியமையாமைகூறல் :- [அகம்.] புணர்ச்சிபிறு நிக்கண் விசும்பும் நிலனும் ஒருங்கு பெறவரினும் இக்கொங்கைகளை மறந்து அதன்கண் முயலேன் எனப் பிரிவுதோன்றத் தலைமகன் தனது இன்றியமையாமை கூறிநின்றது. [திருக்கோ. பக். 95]

இன்மைவழக்கு :- உலகில் இல்லாத வழக்கு.

இன்னதல்லதிதுவெனமொழிதல் :- [உத்தி.] — ஐயப்பாடுதோன்றிய விடத்து இப்படிப்பட்டது அல்லாதது இது எனச் சொல்லுதலாகிய உத்தி. (நன்.14. உரை)

இன்னலெய்தல் :. [அகம்.] செவிலித்தாய் தலைவியின் வேறுபாடு கண்டு இஃது எதனாலுற்றது என அறிதற்பொருட்டு

வேல்னை அழைத்தானாக. அதுகேட்ட தலைவி இனி எவ்வாற்றானும நமக்கு உயிர்வாழ வழியில்லை எனத் தன்னுள்ளே கூறித் துன்புறா நிற்றல். [கல்லாடம், பக். 264]

இன்னாவிசை :- செய்யுட்குற்றம் இருபத்தேழனுள் ஒன்று. [யாப். வி. ஒழிபு. 5]

இன்னிசை - (இசை.) இராகம். எழுநரம்புள்ள வீணை. த. பே. அக] (பார்க்க) இன்னிசை வெண்பா.

இன்னிசைக்கலிப்பா :- பா.) கலிப்பாவுள் ஒன்று.

இன்னிசை வெண்பா :- (பா.) வெண்பாவகை. நேரிசை வெண்பாவே போல வந்து தனிச்சொல் இன்றி அமைவது. ஒரு விகற்பத்தாலும், பல விகற்பத்தாலும வரும். இரண்டாமடியின் இறுதியில் தனிச் சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வருவதும் ஒருவகை. மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல்பெற்று இரண்டு விகற்பத்தால் வருவதும் ஒருவகை. அடிதோறும் ஒரூஉத் தொடை பெற்று வருவனவும், நேரிசை வெண்பாவிற்சிறிது வேறுபட்டு நான்கடியால் வருவனவும் இன்னிசை வெண்பா எனப்படும். (காரிகை. அ. ப. பக்.69)

இன்னிசை வெண்பா, 'இன்னிசை வெள்ளை' எனவும் அழைக்கப்படும். (பிங்.

இன்னியம் :- [இசை.] இனியவாத்தியம். இனிய இசை. வாச்சியங்கள். [பெருங். வத்தவ. 2.30

ஈச மனோகரி :- *[இசை]. இராகவகை.* *[பரத இராக. 103]*

ஈரசைச்சீர் :- *[பார்க்க] சீர்.*

ஈரடி :- *[யாப்] இரண்டடி. ஈரடி வெண்பா. [காரிகை. செய 3]*

ஈரடிவருக்கம் :- *[பா.] செய்யுள் வகை.*

ஈரடிவெண்பா :- *[யாப்] குறள் வெண்பா. இரண்டு அடியால் வரும் வெண்பா. 'ஈரடி வெண்பாக் குறள்" என்பது காரிகை. 'தொடையொன் றடியிரண் டாகிவருமேற் குறளின் பெயர்க் கொடை கொள்ளப்படுமே" என்பது காக்கைபாடினியம். 'ஈரடி யினைந்தது குறள்வெண்பாவே' என்பர் அவிநயனார்.*

ஈரொற்றுவாரம் :- *(இசை.) தாளத்தில் இரண்டு மாத்திரை பெற்றுவரும் பாடல்.* *(சிலப். 3. 136. உரை)*

ஈற்றசை :- *(யாப்.) அடியிறுதியில் வரும் அசைச்சொல்.*

ஈற்றெழுத்துக் கவி சொல்லல் :- *ஒருவர் கூறிய பாட்டின் ஈற்றெழுத்தை முதலாகக் கொண்டு பிறர் கவியை ஒப்பித்தல்.*

உ

உகிர்நிலைப்பசாசம் :- (கூ.) சுட்டு விரலும் பெருவிரலும் உகிர்நுனி கவ்விநிற்பது. [சிலப். 3. 18. உரை]

உக்கிதசிரம் :- [கூ]. ஆகாய முகட்டை நோக்கும் சிரவபிநயம் [பரத. பாவ. 74.]

உக்கிரம் :- (இசை.) கீத உறுப்புக்களுள் ஒன்று. [சிலப். 3 150. உரை] (பார்க்க) கீதவுறுப்பு.

உக்கிரை :- (இசை.) ஏழாம் சுருதியின் பேதங்களுள் ஒன்று. [பரத. இராக. 64]

உசேனி :- (இசை.) இராகவகை. [பரத. இராக. 104]

உச்சம் :- [இசை.] எண்வகைப் பாடற் பயன்களுள் ஒன்று. (சிலப். 3. 16. உரை)

உடலவருத்தனை :- [கூ.] மெய்யாற் செய்யும் அபிநயம், [சிலப். 3. 16. உரை]

உடனிகழ்ச்சியணி:- (அணி.) பொருளணிவகை. கற்றாரை மகிழ்விக்கும் உடனிகழ்தலைச் சொல்லுதல். இதனைத் தண்டியாசிரியர் புணர்நிலை எனச் சுட்டுவார். புணர்நிலையாவது வினையாலும், பண்பாலும் இரண்டு பொருளுக்கு ஒன்றே பொருந்தச் சொல்லும் அணி.

> "வினைபண் பெனஇவை இருபொருட்[கு] ஒன்றே
> புணர மொழிவது புணர்நிலை யாகும்"
> (தண்டி. பொருளணி. 34)

எனத் தண்டியார் குறிப்பிடுதலான் இவ்வணி வினைப் புணர்நிலை, பண்புப் புணர்நிலை எனவும் இருபாறபடும்.

வினைப் புணர் நிலை :- (எ. டு.)

"வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த-ஆண்டகையோர்
மேவல் விரும்பும் பெருநகையாள் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண் "

ஈண்டு குறிக்கப் பெற்ற முகில், கண் இரண்டற்கும் நீர் பொழிந்த என்னும் தொழில் பற்றிய ஒரு சொல்லே முடிக்கும் சொல்லாக அமைத்திருந்தலின் இது வினைப் புணர் நிலையாயிற்று.

பண்புப் புணர் நிலை : (எ. டு.)

"பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் - தாங்காதல்
வைக்குந் துணைவர் வருமலதி பார்த்தாவி
உய்க்குந் தமியார் உயிர் "

இதில் மாலைப் பொழுது, தமியர் உயிர் என்னும் இரண்டற்கும் நீண்டன என்னும் பண்பு பற்றிய ஒரு சொல்லே முடிவாக அமைத்திருந்தலின், இது பண்புப் புணர் நிலையாயிற்று.

வடநூலார் உடனிகழ்ச்சியணியை 'சகோக்தி அலங்காரம்' என்பர். (அணியி. 21)

[எ. டு] "இகந்த பகைவரினத் தொடுவேல் வேந்தே
திகந்த மடைந்தது நின் சீர் "

இதற்கு ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமையுருபு வரும் மூன்றாம் வேற்றுமையுருபாகிய ஒடு, ஓடு என்பன உடனிகழ்ச்சிப் பொருளில் வருவதால் இவ்வணி இப்பெயர் பெற்றிருக்கலாம்.

தண்டியாசிரியர் குறிப்பிடும் புணர் நிலையணி, ஒருங்கியல் எனவும், உடன் உடனிகழ்ச்சியணி எனவும், நவிற்சியணி எனவும் கூறப்பெறும். [இலக் வி. 679. பக். 324]

உடனிலைச் சிலேடை :- [அணி] ஒரு பாட்டு. நேரே வரும் பொருளையன்றி வேறுமொரு பொருள் கொண்டு நிற்கும் அணி. [திருக்கோ. 1. உரை]

உடனிலைச் சொல் :- பொருள்கள்தம்மில் ஒப்பானவற்றை ஒருங்கு கூட்டிச் சொல்லுதல். அது புகழ்தற் கண்ணும பழித்தற்கண்ணும் வரும். உடனிலைச் சொல் எனினும் ஒப்புமைக் கூட்டம் எனினும் ஒன்றே. [பார்க்க] ஒப்புமைக் கூட்டவணி.

உடனுறை :- [பொருள்.] ஒரு நிலத்தில் உடனுறைகின்ற கருப்பொருளால் பிறிதொரு பொருள் பயப்ப மறைத்துக் கூறும் உள்ளுறை [இறைச்சி] யாகும்.

'உடனுறையாவது உடனுறைவ தொன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது' என்பர் இளம்பூரணர்.
''நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென் (று)அன்னை கூறினள்
புன்னையது சிறப்பே அம்ம நாணுதும் நும்மொடு நகையே''
[நற்றிணை 172]

இதனுள் 'புன்னைக்கு நாணுதும்' எனவே அவ்வழித் தான் வளர்த்த புன்னையென்றும் 'பல்காலும் அன்னை வருவள்' என்றும் பிறிதொரு பொருள் விளங்க நிற்பது உடனுறையாகும.
[தொல். பொ. 238. இளம்பூ]

உடன்படல் விலக்கு : [பார்க்க] முன்ன விலக்கணி.

உடன் போக்கிடையீடு : [அகம்.] உடன் போக்கில் சுற்றத்தார் பின் தொடர்ந்து செல்லத் தலைமகளைத் தலைமகன் விடுத்துச் செல்லுதல். இது 1] போக்கு அறிவுறுத்தல், 2] வரவறிவுறுத்தல். 3] நீக்கம், 4] இரக்கமொடு மீட்சி என்ற நான்கு வகையினையுடையது. ஐம்பத்தாறாம் (56) நாள் தன்னூரை விட்டு நீங்கும் தலைவி எதிர் வந்தாரைத் தலைமகனுடன் தான் செல்லுதலைத் தோழியர்க்கும், நற்றாய்க்கும் உணர்த்த அனுப்புதலும, அந்தணர்கள் தலைவியின் செலவை நற்றாய்க்குக் கூறுதலும் போக்கு அறிவுறுத்தல். சுற்றத்தார் பின்வருவதனைக் கண்டு தலை-

மகள் தலைமகனுக்கு உணர்த்தல் **வரவறிவுறுத்தல்**. சுற்றத்தார் பின்வருவதனை உணர்ந்து தலைமகன் தலைமகளை விடுதல் **நீக்கம்** தலைவன் நீங்கியதால் தலைவி வருத்தத்தோடு சுற்றத்தார் பின்னே தன் இல்லத்திற்கு மீண்டு வருதல் **இரக்கமொடு மீட்சி**. உடன் போக்கிடையீடு கீழ்க்காணும் வகையில் விரிவுபெறும்.

1] தலைவி தன் செலவினைத் தோழிக்கு உணர்த்தி விடுத்தல்.

2] நற்றாய்க்கு உணர்த்தி விடுத்தல்.

3] நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்.

4] நற்றாய் அறத்தொடு நிற்றலின் சுற்றத்தார் பின் வந்ததனைத் தலைவி கண்டு தலைவனுக்கு உரைத்தல்.

5] தலைமகன் தலைமகளை விடுத்தல்.

6] சுற்றத்தாரோடு செல்பவள் அன்புறம் நோக்கிக் கவன்று ஆற்றுதல்

[அ. பொ. வி வரைவியற் கருத்துக்கள்.

உடன் போக்கு :- (அகம்.) பெற்றோரறியாமல் தலைவி தலைவனுடன் செல்லுதல். (நம்பி. 181) தலைவன் தலைவியைத் தன்னூருக்கு உடனழைத்துச் செல்லுதல், போக்கறிவுறுத்தல், போக்குடன்படாமை, போக்குடன் படுத்தல், போக்குடன் படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றம் என எட்டும், பாங்கி தலைவற் குடன்போக்குணர்த்தல் முதலாகத் தலைவன் தன்பதி அடைந்தமை, தலைவிக் குணர்த்தல ஈறாகச் சொல்லப் பட்ட பதினெட்டும் அன்பினையுடைய உடன்போக்கின் வகை விரியாகும். (அ. பொ. வி. பக். 181. 182.(

உடுக்கை :- [இசை.] இடை சுருங்கு பறை.

உடோளக்கை :- [கூ.] விரல்களை நெருக்கிக் கொண்டு தோளுக்கு நேராக இருகைகளையும் நீட்டும் இணைக்கை வகை.

[பரத. பாவ 52]

உட்கருத்து : ஆழ்ந்த கருத்து. அந்தரங்க [illegible]

உட்கைச் சுற்றுகை :- (கூ) நாட்டியத்தில் [illegible]மாகச் சுற்றுகை.

உட்கோள் : [அகப்.] இயற்கை புணர்ச்சிக்கண் தலைவியை நயந்து சென்றெய்த நினைத்த தலைவன் தன்னிடத்து அவளுரக் குண்டாகிய காதல் அவள் கண்ணிற் கண்டு தன்னுள் கொண்டு நின்றது. (புறப்.) புறப்பொருள்துறை. தலைவி தன்னை அறிந்திலள் எனக் கருதியது பற்றிக் கூறும் புறத்துறை. [பு. வெ. கைக்கிளை. 4] இது கைக்கிளைத் திணையுள் அடங்கும் ஆண்பாற்கூற்று. தொல்காப்பியர் கைக்கிளையை அகத்திணையுட் கூற புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் புறமாக வகுத்தனர். [பார்க்க] கைக்கிளைத் திணை. நயந்த தலைவி தலைவனைக் கூடக் கருதியது பற்றிக் கூறும் புறத்துறை. [பு. வெ. கைக்கிளை. 12] பெண்பாற் கூற்று.

உட்சொல் : நெஞ்சோடு கூறல். (சிலப். 3. 13. உரை.)

உட்படுத்தல் : உள்ளாக்குதல்; அகப்படுத்துதல்; உடன்படுத்தல்.

உணர்த்துதல் :- (அகம்.) ஊடல் தீர்த்தல், 'உணர்த்தல் வேண்டிய கிழவோன்' (தொல். பொ. 150.)
நினைப்பூட்டுதல், 'உணர்த்தலூட லுணர்ந்தேன்' [திவ் திருவாய். 6. 1. 5.] துயிலெழுப்புதல். 'ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம், (புறநா. 28)

உணர்ப்பு :- தெளிவிக்கப் படுகை. 'உணர்ப்புவயின் வாரா வூடலுற்றோன், [தொல். பொ. 150]

உணர்வு :- (பார்க்க) உணர்த்துதல்.

உரைப் பொருத்தம் :- [பார்க்க] உண்டிப் பொருத்தம்.

உண்டாட்டு :- (புறப்.) புறப்பொருள் துறை. கள்ளுண்டு மகிழ் தலைத் தெரிவிக்கும் புறத்துறை. [தொல். பொ. 58]
மகளிர் விளையாட்டு வகை.

உண்டி :- [பா.] செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழித்து ஏழு எழுத்தாய் வரும் விருத்தம்.

[எ. டு.] "போதுறு புனைகோதாய்
காதல ரயமானா
வேதுறு மனமீதே
யாதர வகலாதே"

(வீரசோ. யாப்., 33. உரை)

உண்டிப் பொருத்தம்:- [பா.] செய்யுள் முதன்மொழிப் பொருத்தம் பத்தனுள் ஒன்று. பிங்கலம் உண்டிப் பொருத்தம் எனவும் வெண்பாப் பாட்டியல் உணாப் பொருத்தம எனவும் குறிக்கின்றன. இலக்கண விளக்கமுடையார் அமுத எழுத்து என்பர். "ஒகர நீங்கிய உயிர்க் குற்றெழுத்து நான்கும், க, ச, த, ப, ந, ம, வ, என்னும் மெய்யெழுத்து ஏழும் அமுத வெழுத்ததாகக் கூறலால், இவ்வெழுத்துக்களுள் ஒன்றை முதலாக வுடைய முதற்சீர்க்குக் கூறிய கணத்திற்குரிய நட்சத்திரத்தோடு பாட வேண்டுதல் முறையாம். இதுவுமன்றித் தலைவன் பிறந்த நாளேனும், பெயர் நாளேனும, இரண்டிலொன்று பொருந்தக் கூறிய அடியை முதலெடுத்துச் சொன்னால் அப்பாட்டுடைத் தலைவனுக்குச் செல்வம் எந்நாளும் வளரும் என்று புலவர் கூறுவர். [பிங். கழகம். பக் 191]

உண்ணாட்டம்:- உட்கருத்து. ஆராய்ச்சி உண்ணாட்டங் கொள்ளப் படுதலால். [நாலடி. 181

உண்மகிழ்ந்துரைத்தல் :- (அகம்.) தலைவியைப் பிரிந்து சென்று வேண்டியாங்கு பொருள் ஈட்டிக் கொண்டு இளைஞர் எதிர் கொள்ள மீண்டுவந்து புகுந்த தலைவன் தலைவியுடன் பள்ளியிடத்தனாயிருந்து அயாவுயிர்ப்பவன், பொருள் தேடும் பொருட்டு இவளைப் பிரிந்து யான் வெவ்விய பாலை நிலத்திற்சென்ற துயரமெல்லாம் இவள் கொங்கைகள் என் மார்பிடை மூழ்கும் படி இவளைத் தழுவியவுடன் ஒழிந்தன என்று தன்னுள்ளே மகிழ்ந்து கூறியது. [கல்லாடம். பக். 407]

உதயகாந்தாரி :- [இசை] இராகவகை. (பரத.இராக.103)

உதயகிரி :- (இசை) குறிஞ்சியாழ்த்திறவகை. (பிங்)

உதயபானு :- (இசை) இராகவகை. (பரத. இராக. 103)

உதயராகம் : (இசை). காலைப்பண். (பரத. இராக.69. உரை

உதாத்தம் : [அணி] செல்வத்தினுயர்ச்சியையேனும், மனத்தின் பெருமையையேனும் மேம்படுத்துக் கூறுவதாகிய ஓர் அணி) [தண்டி.72]

உதாரணம் :- திருட்டாந்தம். 'அசைச்சீர்க் குதாரண நாண் மலரே' (காரிகை. உறுப்.7) கண்டதொரு பொருளைச்-சொல்லி அதுபோல் என்று எடுத்துக்காட்டிக் காரணத்தை நிச்சயப்படுத்துவதாகிய அனுமானம்.

உதாரம் :- குறிப்பினால் ஒரு பொருள் சிறப்புடைமை தோன்றுவதாகிய குணம். (தண்டி.20)

உத்தம் :- (பா.) செய்யுளில் ஒற்றொழித்து உயிராவது, உயிர்மெய்யாவது அடி ஒன்றுக்கு ஓரெழுத்தாய வரும் விருத்தம். இது வடமொழி விதி:

கார்
நேர்
வார்
யார்

(வீரசோ. யாப். 33. உரை)

உத்தளம் :- (இசை) மத்தளபேதம். 'இத்தலைய மத்தளப்பேர் உத்தளமே' (பரத. ஒழிபி. 13)

உத்தானவஞ்சிதம் :- [கூ.] நிருத்தக்கை முப்பதனுள் ஒன்று. (சிலப். பக். 81)

உத்தி :- ஓர் இலக்கண நூலால் உணர்த்தப்படும் பொருளை நூல்வழக்கோடும், உலக வழக்கோடும் பொருந்த உணர்த்தி அப்பொருளை மற்றோர் இலக்கிய நூற்கண்ணும் ஏற்குமிட,

மறிந்து, இவ்விடத்திற்கு இஃதாம் எனக் கருதித் தக்க வகை-யாகச் செலுத்துவது உத்தி எனப்படும். இது தந்திரவுத்தி எனவும் வழங்கப்பெறும். தந்திரம் என்பது நூல்.
(நன். 15. உரை)

உத்திமறுதலை :- செய்யுட் குணங்களுள் ஒன்று.
(யாப். வி ஒழிபு)

உத்துவீதம் :- [கூ.] நிருத்தக்கை முப்பதனுள் ஒன்று.
[சிலப். பக். 81]

உத்க்ஷேபணம் :- (கூ.) கூத்தின் அங்கக்கிரியைகளுள் ஒன்று.
[சிலப். பக். 81.]

உந்தல் :- (இசை.) யாழ் நரம்பு தடவுகை.

உந்தி :- (இசை.) யாழ்ப்பத்தர். (தொல். சொல். 399. உரை)
மகளிர் விளையாட்டு வகை. (பிங்)

உபகதை :- கட்டுக்கதை. கிளைக்கதை

உபசாரக்கை :- (கூ.) இரண்டு கைகளையும் குவித்து மார்போடணைத்து உபசாரமாகக் காட்டும் இணைக்கை வகை. 'உப-சாரக்கை......குடங்கையிரண்டும் கூப்பி மார்பிருத்தல்,
(பரத. பாவ. 54)

உபசாரவழக்கு :- ஒன்றன் தன்மையை மற்றொன்றன்மேல் ஏற்-றிக் கூறுவது. (குறள். 73. உரை)

உபதாளம் :- (இசை) ஐந்து சிறுதாளங்கள். (பரத. தாள 3)
அவை :- 1. ஆதிதாளம் 2. பார்வதிலோசனம் 3. குடுக்கம் 4. சிங்கநந்தம் 5. திரிமாத்திரை.

உபமானம் :- உவமை

உபமேயம் :- உவமிக்கப்பட்ட பொருள் [அணியி. 1)

உபயாங்கம் :- (இசை.) கீதத்துக்கும் நிருத்தத்துக்கும் வாசிக்கும் வாத்தியம்.
[சிலப். 3. 14. உரை]

உபவேட்டணம் :- (கூ.) கூத்தின் அங்கக்கிரியைகளுள் ஒன்று. [சிலப். பக். 81]

உபவேட்டிதம் :- (கூ) அபிநய வகை. (சீவக. 1257. உரை)

உபாங்கதாளம் :- [இசை] தாளவகை. (பரத. தாள. 4. உரை)

உபாங்கம் :- [இசை] தோற்கருவி வகை. (சிலப். 3. 27. உரை)

உபயவிலக்கு :- (பார்க்க) முன்னவிலக்கணி.

உபோற்காதம் :- பாயிரம். (தொல். பாயி. விருத். பக். 16)

உயிரெனவியத்தல்;- (அகம்.). தலைவன் பொழில்கண்டு மகிழ்ந்து அப்பொழிலிடைச் சென்று புக்கு, தலைவியைக் கண்ட துணை-யான் [இ]வ் என்னுயிர் இவ்வாறு செய்தோ நிற்பது என வியந்து கூறி] நின்றது. [திருக்கோ. பக் 83]

உயர்வு :- உயர்வு நவிற்சியணி. (திவா.)

உயர்வுநவிற்சியணி :- (அணி). பொருளணி வகை. ஒரு பொரு-ளானது தன் சொல்லால் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்-விப்பதும், இஃது அஃதன்று என்று தெரிந்துந் தன்னிச்சை யாலாமென்று கொள்ளப் படுவதுமாகிய ஏற்றிச் சொல்வதற்குச் [ஆரோப நிச்சயம்] செய்தியாக மாறலாம்.
இதனை வடநூலார் "அதிசயோக்தியலங்காரம்' என்பர். இவ்வணி எழுவகைப்படும். அவை,

1. உருவக வுயர்வு நவிற்சி - உவமிக்கப்படும் பொருளை அதன் சொல்லால் சொல்லாமல் உவமைச் சொலலினால் இலக் கணையாகச் சொல்லுதல். (எ.டு.)

"புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை
யன்னஞ் செந்நெல்
வயலே தடம் பொய்கை"

இதில் புயல் முதலியஉவமைச் சொற்கள் ஈந்தல் முதலிய உவமிக்கப்படும் பொருள்கள் இலக்கணையாகச் சொல்லப்பட்டன.

2. ஒழிப்புயர்வுநவிற்சி :- உயர்வு நவிற்சி ஒழிப்போடு கூடி வருதல். (எ டு.)

''பைந்தொடிநின் சொல்லில் அமுதுளதாற் பாமரர்கள்
இந்துவிடத் துண்டென் பரோ''

இதில் அமுதமெனப்பட்ட உவமையினாற் சொல்லில் இருக்கின்ற இனிமையாகிய உவமிக்கப்படும் பொருள் சொல்லப்பட்டுச் சந்திரனிடத்து இல்லையென்பதால ஒழிப்பை உட்கொண்டிருக்கிறது.

3. பிரிநிலை உயர்வு நவிற்சி :- உலகத்தில் வெளிப்டையான தீரம், உருவம், செல்வம் முதலியவைகட்கு இனமாகிய தீராதிகளைப் பிரித்துச் சொல்லுதல். (எ.டு).

''பாந்தண் முடியிற் பரிக்குங் குவலயத்தில்
வேந்தனது தீரமொன்று வேறு''

''போதார் மலர்க்கூந்தற் பூவையிவள் படைப்புச்
சாதா ரணமான தன்று''

இவற்றில் தீரத்திலும் படைப்பிலும் இருக்கின்ற ஒற்றுமையில் வேற்றுமை ஏற்றிச் சொல்லப்பட்டது.

4. தொடர்புயர்வு நவிற்சி :- தொடர்பின்றி இருப்பவற்றில் தொடர்பைக் கற்பித்தல் [எ.டு.].

''அகழு மிஞ்சியு மண்டபத்தி னடிமுடி காறும்
புகுது மென்றுதம் மாற்றலான் முரணுபு புகுங்கால்
இகலும வெஞ்சினச் சேடனோ டிராகுவென் னுரைக்கும்
நிகரில் பாம்புக ணெறியிடைக் காண்டலு நின்ற''

இதில் தொடர்பின்மையின் தொடர்பு கற்பிக்கப்பட்டது. அன்றியும் தொடர்பிருந்தும் தொடர்பின்மையைக் கற்பித்தலும் அடங்கும். [எ டு.)

"அற்பகத்தின் மன்னவனே நீயருள்செய் யாநிற்பக்
கற்பகத்தை யாம் விரும்போம் காண்"

இதில் கற்பகத்தை விரும்புதலின் தொடர்பிருக்க அதில் அகணது இல்லாமை கற்பிக்கப்பட்டது.

5. முறையிலுயர்வு நவிற்சி :- காரணமுங் காரியமும் ஒரு காலத்தில நிகழ்வனவாகச் சொல்லுதல். (எ.டு).

"மன்னநின் கணையு மொன்னலர் கூட்டமும்
ஏககா லத்தினா ணிகந்தோ டினவெனில்
உன்புகழ்த் திறத்தினை யுணர்ந்து
மன்பதை யுலகுள்யார் பாடவல்லாரே"

இதில் அம்பினது தாக்குகையாகிய காரணத்திற்கும் அரசர்களின் ஓட்டமும் ஆகிய காரியத்திற்கும முன்பின் தோன்றுகைத் தன்மையில் ஒருகாலத்திலுண்டாகுகை கற்பிக்கப்பட்டது.

6. விரைவுயர்வுநவிற்சி :- காரணவுணர்ச்சி மாத்திரத்திலே காரியமுண்டாகுதல். (எ.டு).

"அருளாக்கு நல்லறமுண் டாக்குமின்புண்டாக்கும்
தெருளாக்கு மென்னுளங்கொள் செம்மல்—பொருளாக்கற்
கேழையான் செல்வ னெனப்புகலா நிற்பவிரல்
ஆழிவளை யாயிற் றவட்கு"

இதில் பிரிவுணர்ச்சியினாலே தானே தலைவியின் வாட்டமாகிய காரியம் மோதிரம் வளையாயிற்று என்பதனால் விளங்கிற்று.

7. மிகையுயர்வு நவிற்சி :- காரியத்தை முன்னும், காரணத்தைப் பின்னும் நிகழ்வனவாகச் சொல்லுதல்.
(எ.டு.)

"வணங்கியிறை யின்சொல் வழங்குமுன்ம் பேதைக்
குணங்கூட நீங்கிற் றுளத்து."

இதில் காரண காரியங்களின் முன்பின் நிகழ்தலாகிய முறையில் முறைபிறழ்வு உரைக்கப்பட்டது. (அணியி. 13)

உயர்வுவமை:- இயைபின்மை அணி. [வீரசோ.யாப்.14)

உயிர்ப்பலி:- (புறம்.) வீரன் ஒருவன் தன்தலையைக் கொற்றவைக்குக் கொடுக்கும் பலி. (தொல்.பொ.59.உரை)

உய்த்தலின்பொருண்மை:- கருதிய பொருள் தெளிவாகப் புலப்படுமாறு எளிய சொல்லுடைமையாகிய குணம். (தண்டி 21)

உய்த்துணரவைப்பு:- உத்தி முப்பத்திரண்டனுள் சில சூத்திரவிதிகளைக் கொண்டு ஆராய்ந்தறியும் படி ஒரு பொருளை வைத்தலாகிய உத்தி. (நன்.14.உரை]

உய்த்துணர்மொழி:- செய்யுட் குற்றங்களுள் ஒன்று, யாப்.ஒழிபு.525)

உய்த்துணர்வணி.- [அணி] பொருளணிவகை ஒருகாரியம் முற்றுப்பெறுதற்கு இஃது இவ்வாறாமெனின் என ஊகித்தலைக்கூறும் அணி. இதனை வடநூலார் 'சம்பாவனாலங்காரம' [என்பர்.

எ.டு) "சேடுறுநங் கோன்புகழைச் சேடனவி லத்தொடங்கின்
பீடுறவே முற்றுப் பெறும"

[அணியி.64]

உரகபந்தம்:- (பார்க்க) நாகபந்தம்.

உரகபந்தனம்:- [பார்க்க] நாகபந்தம்.

உரப்பார்சுவார்த்தமண்டலி:- (கூ).நிருத்தக்கை முப்பதனுள் ஒன்று (சிலப் பக்.81)

உரிச்சீர்:- [யாப்.] மூவகைச் சீர்களில் ஒன்று (இயற்சீர்; உரிச்சீர்; பொதுச்சீர்;)

மூன்று அசையால் வரும் சீர் உரிச்சீர் எனப்படும். உரிச்சீர் எல்லாச் செய்யுளுள்ளும் வரும் எனினும் வெண்பாவிற்கும், வஞ்சிப்பாவிற்கும் உரிமைபூண்டு நிற்பது. உரிச்சீர் எட்டு வகைப்படும். அவை :

1. தேமாங்காய் — பொன்னொக்கும்
2. புளிமாங்காய் — பொருளொக்கும்
3. கருவிளங்காய் — பொருள்பெருக்கும்
4. கூவிளங்காய் — பொன்பெருக்கும்

இவை நான்கும் வெண்பா உரிச்சீர். இவை நேரசையை இறுதியாகவுடையன.

5. தேமாங்கனி — மாவீழ்சுரம்
6. புளிமாங்கனி — புலிவாழ்சுரம்
7. கருவிளங்கனி — புலிபடுசுரம்
8. கூவிளங்கனி — மாபடுசுரம்

இவை நான்கும் வஞ்சியுரிச்சீர். இவை நிரையசையை இறுதியாகவுடையன. (யாப். விருத். உறுப்.12)

இரண்டசையினான் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீர் என்பர் காக்கைபாடினியார் "ஈரசை நாற்சீ ரகவற் குரிய" (காரிகை. உறுப். 3)

உரிப்பொருட்டலைவன் :- (அகம்) கிளவித்தலைவன். 'உரிப்பொருட் டலைவன் ஒருவனே யானவாறும்,' [தொல். பொ. 55. உரை]

உரிப்பொருள்:- (அகம்.) ஒழுக்கம், ஐந்திணைக்கும் உரியபொருள். அதாவது அந்தந்த நிலத்து உயர்மக்கட்குரிய ஒழுகலாறுகளும் அவற்றின் நிமித்தங்களும்.

1. குறிஞ்சி — புணர்தல் புணர்தல் நிமித்தம்
2. முல்லை — இருத்தல் இருத்தல் நிமித்தம்
3. மருதம் — ஊடல் ஊடல் நிமித்தம்
4. நெய்தல் — இரங்கல் இரங்கல் நிமித்தம்
5. பாலை — பிரிதல் பிரிதல் நிமித்தம்.

ஐந்திணைக்குமுரிய ஒழுக்கமும் அதன் காரணமும் (நிமித்தம்) என உரிப்பொருள் பத்து வகைப்படும்.

உரிமைசெப்புதல் :- மணம் பேசுதல். "துறைவற்குரிமை செப்பினர்" (குறுந். 351)

உரிமையிடம் :- வீட்டில் மனைவி வசிக்கும் பாகம். (இறை. 21. உரை)

உரியசை:- (யாப்.) நேர்பு நிரைபசைகள். (தொல். பொ. 318)

உருக்குத்துதல் :- உருவம் அமைய வார்ப்படம் வார்த்தல். (நெடுநல். 57 உரை)

உருட்டு :- (இசை) புரளும் குரலிசை.

உருட்டுதல்:- (இசை) இசைநரம்பை வருடுதல். (கூர்மபு. 47)

உருட்டுவண்ணம் :- (பா). அராகம் தொடுத்து வரும் சந்தம், 'உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்' (தொல். பொ. 544)

உருத்திரம் :- வெகுளிச் சுவை. (தண்டி. 69)

உருத்திரவீணை :- (இசை) யாழ்வகை.

உருவக உயர்வு நவிற்சி :- (பார்க்க) உயர்வு நவிற்சியணி.

உருவகப்படுத்துதல் :- (அணி). உவமேயத்தை உவமானத்தோடு அபேதமாகக் கூறுதல்.

உருவகம் :- (அணி) உருவக அணி. உவமைக்கும், உவமிக்கப்படும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றாது இரண்டையும் ஒன்றெனஎண்ணுமாறு கூறுவது. உருவக அணி பதினைந்து வகைப்படும். அவை :

1 தொகையுருவகம் :- 'ஆகிய' என்னும் மாட்டேற்றுச் சொல் தொகுத்துக் கூறுவது.

2. விரியுருவகம் :- அச் சொல் விரிந்து நிற்பது.

3. தொகைவிரியுருவகம் :- அச்சொல் தொக்கும் விரிந்தும் நிற்பது.

4. இயைபுருவகம் :- பல பொருளை உருவகம் செய்யும் போது தம்முள் இயைபுடையனவாக வைத்து உருவகம் செய்வது.

5. இயைபிலுருவகம் :- பல பொருளும் தம்முள் இயையாமை வைத்து உருவகம் செய்வது.

6. வியநிலையுருவகம் :- ஒன்றன் அங்கம் பலவற்றினுள் சிலவற்றை உருவகம் செய்தும், செய்யாதும் உரைத்து அங்கியை உருவகம் செய்து உரைப்பது.

7. சிறப்புருவகம் :- ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகம் செய்து அவற்றானே உருவகமாக்கி யுரைப்பது.

8. விருபகவுருவகம் :- ஒரு பொருட்குக் கூடாத பலவுங் கூட்டி யுருவகம் செய்வது.

9. சமாதானவுருவகம் :- ஒரு பொருளை நன்றாக உருவகம் செய்து அதனையே தீங்கு தருவதாகக் கூறி, அத்தீங்கும் அதனாலே வருகின்றது அன்றென்று அதற்குப் பிறிதோர் காரணம் கூறுவது.

10 உருவகவுருவகம் :- ஒன்றனை உருவகம் செய்து அதனையே பெயர்த்தும் பிறிதொன்றாக உருவகம் செய்வது.

11. ஏகாங்கவுருவகம் :- ஒரு பொருளினது அங்கம் பலவற்றுள்ளும் ஓரங்கமே உருவகம் செய்து, ஒழிந்த அங்கங்களை உருவகம் செய்யாதே கூறுவது.

12. அநேகாங்கவுருகம்:- ஒன்றன் அங்கம் பலவற்றையும் உருவகம் செய்து உரைப்பது.

13. முற்றுருவகம்:- அவயவ, அவயவிகளை ஏற்ற இடத்தோடும் பிறவற்றோடும் முற்ற உருவகம் செய்து உரைப்பது.

14. அவயவவுருவகம் :- அவயவத்தை உருவகம் செய்து, அவயவியை உருவகம் செய்யாது கூறுவது.

15. அவயவியுருவகம் :- அவயவியை உருவகம் செய்து அவயவங்களை உருவகம் செய்யாது கூறுவது.
(உட்பிரிவுகளுக்கு தனித்தனியே எடுத்துக்காட்டுகளை முதனூலுள் காண்க)

இவையேயன்றி ஏதுருவகம், இயைபுருவகம், விலக்குருவகம், சிறப்புருவகம், அற்புதஉருவகம் என்பனவும் உருவக அணியின்பாற்படும். உருவக அணி உவமை, ஏது, வேற்றுமை, விலக்கு, அவநுதி, சிலேடை என்னும் ஆறு அணிகளோடும் கூடியும் வரும். உருவக அணியினை வடநூலார் 'ரூபாலங்காரம்' என்பர். தொல்காப்பியர் உருவகத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை எனினும் 'பொருள் உவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பின் அஃது உவமமாகும் (தொல். பொ. 84) என்னும் நூற்பா கொண்டு தொல்காப்பியர் உருவகத்தையும் சுட்டியுள்ளார் என்ற கருத்தும் கொள்ளப்படுகிறது.

உருவகித்தல் :- உருவகப் படுத்துதல்.

உருவுவமம் :- வண்ணம் பற்றி வரும் ஒப்புமை. வகைபெற வந்த உவமத்தோற்றம் நான்கினும் ஒன்று (வினை, பயன், மெய், உரு) (தொல். பொ. 272) ''தளிர் போலும்மேனி'' என்பது நிறம்பற்றிவந்த ஒப்புமை. ''மணிநிற மாற்றியமா மேனி''. உருவுவமத்திற்குரிய சொற்களாக,போல, மறுப்ப,ஒப்ப,காய்த்த,நேர,வியப்ப, நளிய, நந்த என்னும் எட்டினையும் தொல்காப்பியர் குறிப்பர். (தொல். பொ. உ வ. 287)

உருபகதாளம் - (இசை.) ரூபகதாளம். (பரத. தாள 5. உரை)

உருபகாரப்படுத்துதல் :- மெய்ப்பித்தல். (யாழ். அக)

உரை :- வியாக்கியானம். உரையாமோ நூலிற்கு நன்கு. (நாலடி. 319) புகழ். 'உரைசால் பத்தினி' (சிலப். பதி. 56) முழக்கம். குன்றங் குமுறிய வுரை. (பரிபா. 8,35)

உரைகட்டுதல் :- வியாக்கியானப் பண்ணுதல்.

உரைகேட்டுநயத்தல் :- (புறப்.) புறப்பொருள்துறை. துன்பத்தில் ஆழ்ந்திருந்த தலைவி, தலைவனது மொழிகேட்டு விரும்பியது பற்றிக் கூறும் புறத்துறை. இது பெருந்திணையில் அமைந்த பெண்பாற் கூற்று. (பு. வெ. பெருந். 16) தலைவனது உரையே தன்நோய்க்கு மருந்தாம் என அதனை மேலும் நயந்தபடியாம் (பு. வெ. பெருந். 16. உரை) (பார்க்க) பெருந்திணை.

உரைக்கோள் :- உரைகாரன் கருத்து

உரைசெய்தல் :- சொல்லுதல். 'இருந்தவாற்றை உரை' செய்தான். (திருவாய். நூற். 99) வியாக்கியானம் பண்ணுதல்.

உரைச்செய்யுள் :- கட்டுரை, வார்த்திகப் பொழிப்புயென்பது உரைச்செய்யுளானும் பாச் செய்யுளானும் செய்யப்படுவது.
(சி. போ. பா)

உரைத்தாம் என்றல் :- (உத்தி.) முப்பத்திரண்டு நூலுத்திகளுள் முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்லப்பட்டதைப் பின்னே சொல்லவேண்டிய விடத்து இதனை முன்னேதாமே சொல்லினோமென்பது தோன்றச் சொல்லாது விடுத்தலாகிய உத்தி.
(நன். 14. உரை)

உரைத்தும் என்றல் :- (உத்தி.) முப்பத்திரண்டு நூலுத்திகளுள் பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்ல வேண்டின் இதனைப் பின்னே சொல்வோமென்பது தோன்ற அங்கே சுருக்கிச் சொல்லுதலாகிய உத்தி
(நன். 14. உரை)

உரைநடை :- வாசக நடை

உரைநயம் :- வியாக்கியானத்தின் இனிமை.

உரைநூல் :- உரைபெற்றநூல்; உரையாகிய நூல்.

உரைபெறுகட்டுரை :- காப்பியங்களில் உரைநடையில் அமைந்த தொடர். (சிலப்.)

உரைப்பாட்டு :- கட்டுரை நடை. (சிலப். பதி. 60. உரை) இக்காலத்துப் புதுக்கவிதைகளை உரைப்பாட்டு எனலாம்.

உரைப்பொருள் :- விரித்துரைக்கும் மெய்யுரை. "மணிமேகலை-மேல் உரைப்பொருள முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்" (சிலப்.)

உரையாசிரியன் :- உரைகாரன். (இலக். கொத். 6)

உரையிற்கொள்ளுதல் :- மூலத்தில் சொல்லப்படாத்தை உரையில் சேர்த்துக் கொள்ளுதல். (மாறன். 275. உரை.)

உரையிற்கோடல் :- (உத்தி.) மூலத்தில் சொல்லாதவற்றையும் உரையில் கொள்ளும் ஒரு தந்திர உத்தி. (இறை 27. உரை)

உலகமலையாமை :- நூலழகு பத்தனுள் உயர்ந்தோர் வழக்கத்-தோடு மாறுகொள்ளாமை. (நன். 13. உரை)

உலகமலைவு :- நூற்குற்றங்களுள் உலகவொழுக்கோடு மாறு-படக் கூறுதலாகிய குற்றம். (தண்டி. 122. உரை)

உலகவழக்கு :- செய்யுள் வழக்கு; உலக வழக்குச் சொல். உலக வழக்கம்.

உலக வழக்கு நவிற்சியணி :- [அணி.] பொருளணி வகை. உலக-வழக்கச் சொல்லைத் தழுவிக்கொண்டு சொல்லுதலாகிய அணி. இவ்வணியை வடநூலார் "லோகோக்தியாலங்காரம்" என்பர்.

(எ.டு.) "அண்ணனீ பேசாதைந் தாறுமா தம்வரையில்
கண்ணைமூ டிக்கொண் டிரு" (அணியி. 90)

உலகவிருத்தம் :- உலக வழக்கோடு மாறுபடும் உரை. (மணி. 29. 162)

உலகாசாரம் :- உலக் வழக்கம்.

உலகியல் :- உலகவழக்கம்; உலகநீதி (சீவக. 245 உரை)

உலகியல்உரைத்தல் :- (அகம்.) உலகியல் வேட்கை கொண்டோர் சான்றோரை முன்வைத்து வரைந்து கொள்வர். அவ்வாறு உலகியலால் நீயும் தலைவியை வரைந்து கொள்ளெனத் தோழி தலைவனுக்குக் கூறுதல். (அ. பொ. வி. பக். 280)

உலகியல்புரைத்தல் :- (அகம்.) மகட்போக்கிய செவிலி அவளைத் தேடிப் பாலைநிலத்தே செல்பவள் அங்கு எதிர்வருவோரை, என்மகள் ஒருத்தியும், ஏதிலாள் மகன் ஒருவனும் நும்மெதிர் செல்லக்கண்டீரோ வென்று வினவாநிற்ப, அதுகேட்ட அவர் காணேமல்லேம்; கண்டேம், சந்தனமும, முத்தும், சங்கும் தாம் பிறந்தவிடங்களுக்கு யாதும் பயன்படாமைபோல மகளிரும் தாம்பிறந்தவிடத்துப் பயன்படார். அவள்தானும் சிறந்தானை வழிப்பட்டுச் சென்றனள. அஃதே உலகியல்பு, அறமும் அதுவே எனக் கூறிநிற்றல். (கல்லாடம். பக். 146)

உலகியல்வழக்கு :- உலக வழக்கம். (தொல். பொ. 53)

உலகியற்கை :- (பார்க்க) உலகியல்.

உலகின்மேல்வைத்துரைத்தல் :- (அகம்.) தோழிபால் குறையுறும் தலைவன் அவள் தன் குறைமுடியாமை கண்டு இனியான் மடலூர்ந்தேனும் அவளை எய்துவேன் எனத் தோழிக்குணர்த்துபவன் மடலூருந் தன்கருத்தினை உலகின்மேல் வைத்துக்கூறுதல். [கல்லாடம். பக். 281)

உலகோடுதல் :- எங்கும் பரவுதல். 'விசையை யென்றுலகோடிய வீறிலேன்' (சீவக. 18 4)

உலக்கைப்பாட்டு :- நெற்குற்றும் போது மகளிர் பாடும் பாட்டு. இதனை வள்ளைப்பாட்டென்பர். [திவா.] 'உலக்கைப் பாட்டே வள்ளைப்பாட்டென்ப' (பிங்.) 'வள்ளைக்கு உறங்கும் வளநாட' (தனிப்பா. ஔவை)

நெற்குற்றுங்கால் தம் தலைவனின் சிறப்புக்களை எல்லாம் எடுத்துக்கூறிப்பாடுவது வள்ளைப்பாட்டு எனப்படும்.

"ஊழ்முறை யுலக்கை யோச்சி வாழிய
தருமனைக் கிழவர் தம்வளங் கூறி
மகளிர் பாடுவது வள்ளைப் பாட்டே"

என்பது திவாகரம் (பக். 235)

உலமருதல் :- (பார்க்க) **உலம்வா வருதல்.**

உலம்புதல் :- பேரொலி செய்தல். யாளிநின்றுலம்புமே. [சீவக. 1900] அலப்புதல். 'ஒல்காதார் வாய்விட்டுலம்பப'

[நீதிநெறி. 7]

உலம்வாவருதல் :- நெஞ்சு உழல்தல். 'உயிர்க்கு முசாஅ முலம் வரும்' (கலித். 145. 4)

உலா :- சிற்றிலக்கிய (பிரபந்த) வகை தொண்ணூற்றாறனுள் ஒன்று. இளமைப்பருவமுடைய தலைவனைக் குலம், குடிப்பிறப்பு, பரம்பரை முதலியவற்றால் இன்னான் என்பது தோன்றக் கூறி, அவன் வீதியில் உலாவர (பவனிவர) அவ்விடத்து நெருங்கியுள்ள பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை. பேரிளம் பெண் என்னும் எழுபருவ மகளிர் கண்டு காதல் கொண்டதாக நேரிசை வெண்பாவால் பாடப்படுவது உலா எனப்படும். (வெண்பாப். பாட்) "ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப" (தொல். பொ. புற. 39) என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் உலாபற்றிச் சுட்டுவர். "ஊரொடு தோற்றம் என்பது பேதைமுதலாப் பேரிளபெண் ஈறாக வருவது' என்பர் இளம்பூரணர். உலா இலக்கியங்கள் புறப்பொருள் துறையில் பாடாண்திணையைச் சார்ந்தனவாகும், பெருங்கதை. சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய பெருங்காவியங்களில் தலைமகன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடப்படும் இடத்தில் கிளைத்துப் பிற்காலத்தில் உலாவெனத் தனித்ததொரு பிரபந்தமாகத் தழைத்தது.

தமிழில் வழங்கும் உலா நூற்களில் சில

1. திருக்கைலாய ஞான உலா (ஆதியுலா)
2. ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை.
3. மூவருலா :-
    1. விக்கிரம சோழனுலா
    2. குலோத்துங்க சோழனுலா
    3. இராசராச சோழனுலா.

உலாமடல் :- சிற்றிலக்கிய வகை; கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்பம் நுகர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டு மடல் ஊர்வேன் என்பதைக் கலிவெண்பாவால் முற்றுவிப்பது. (இலக். வி. 483)

உலோலிதமுகம் :- (கூ) ஆழ்ந்த சிந்தையால் ஒருதோள்மேல் தலைசாய்க்கும் முகவபிநயம். (சது.)

உல்லேகம் :- புனைந்துரை. பலபடப் புனைவணி (மாறன். 126)

உல்லோலம் :- [கூ.] கூத்தின் அங்கக் கிரியைகளுள் ஒன்று. [சிலப்.]

உவகைக்கலுழ்ச்சி :- (புறப்.) புறப்பொருள்துறை. வாட்புண் மிகுந்த கணவனைக் கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வீழ்ப்பதைக் கூறும் புறத்துறை. (பு வெ. 7. 25)

உவகைச்சொல் :- முகமன்.

உவகைப்பறை :- மகிழ்ச்சியைக் குறிக்கும் பறை (திவா)

உவமச்சொல் :- உவமை குறிக்கும் சொல்.

உவமப்போலி :- உவமையைப் போன்று வருவது. உவமப் போலியை உள்ளுறையுவமை எனக் கொள்வர் பேராசிரியர். உள்ளுறையுவமமாவது, வெளிப்படையானன்றிக் குறிப்பால் பொருளைப்

''புலப்படுத்தும் உவமம் ஆகும். உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனோடு ஒத்து முடிக என உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம்'' என்பர் இளம்பூரணர். உவமப் போலி ஐந்து வகைப்படும். ''உவமப் போலி ஐந்தென மொழிப'' [தொல் பொ] அவை.

1. வினையுவமப் போலி
2. பயவுவமப் போலி
3. மெய்யுவமப் போலி
4. உருவுவமப் போலி
5. பிறப்புவமப் போலி

ஏனைய உவமத்தினும் உள்ளுறை உவமமே செய்யுட்கும், பொருளிலக்கணத்திற்கும் சிறந்தது என்பர் பேராசிரியர். ஒட்டணியை உவமப் போலி எனவும் அழைப்பர்.
[பார்க்க] ஒட்டணி.

உவமம் :- (பார்க்க) உவமை.

உவமவளவை :- ஒப்பளவை. (குறள் 253 உரை)

உவமவாசகம் :- உவமஉருபு.

உவமவுருபு :- உவமை குறிக்கும் சொல். உவமத்தினையும் பொருளினையும் ஒப்பிடுங்கால் இடையே வரும் சொல். தொல்காப்பியர் உவமவுருபுகளாக முப்பத்தாறினைக் குறிப்பர். அவை-

1. அன்ன :- 'கொன்றன்ன இன்னா 'செயினும் (குறள்)
2. ஆங்க :- 'பலர்புகழ்' ஞாயிறு கடற்கண் டாங்கு (திருமுரு.)
3. இறப்ப :- 'புலியிறப்ப ஒலி தோன்றலின்'.
4. உறழ :- 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (புறம்)
5. என்ன :- 'புலி யென்னக் கலிசிறந் துராஅய்'

6. எள்ள :- 'எழிலி னொனம் எள்ளினன் தளூஉங்'

7. ஏய்ப்ப :- 'அகலிரு விசும்பிற் குறைவில் ஏய்ப்ப'
[அகம்.]

8. ஒன்ற :- 'வேலொன்று கண்'

9. ஒடுங்க :- 'பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்'

10. ஒப்ப :- 'ஒண்செங் காந்தள் ஒக்கு நின்னிறம்'

11. ஒட்ட:- 'முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை'

12. ஓட :- 'செந்தீ யோட்டிய வஞ்சுடர்ப் பருதி'

13. கடுப்ப:- 'விண்கதிர் இமிழிசை கடுப்ப' (மலைபடு. 2)

14. கள்ள :- 'கார் கள்ள வுற்ற பேரிசை யுதவி, (புறம்.11)

15. காய்ப்ப :- 'கணைக்கா னெய்தல் காய்த்திய கண்'

16. தகைய : 'பொருகளிற் றெருத்தத்தின் புலிதகையப் பாய்ந்து,

17. நடுங்க :- 'படங்கெழு நாகம் நடுங்க மல்கும்'

18. நந்த ⎫ இலக்கியத்துள் வந்தவழிக்
19. நளிய ⎭ கண்டு கொள்க.

20. நாட :- 'வேயொடு நாடிய தோள்'

21. நிகர்ப்ப:- 'காவிரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்'
[அகம்]

22. புல்ல :- ''புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல'
(புறம். 11)

23. புரைய :- 'உரல்புரை பா அடி [கலித். 21]

24. பொருவ:- 'விண்பொரு புகழ் விறல் வஞ்சி' [புறம்11]

25. பொற்ப :- 'மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்'

26. போல ;- 'பொன்போற் செய்யும் ஊர்கிழவோனே' [ஐங்குறு. 41]

27. மதிப்ப :- 'இருநிதி மதிக்கும் பெருவளனீகை' [புறம். 11]

28. மருள :- 'வேய் மருள் பணைத்தோள் நெகிழ' (குறுந். 318)

29. மறுப்ப :- 'மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா'

30 மான :- புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மான'

31. மாற்ற : 'மணிநிற மாற்றிய மாமேனி'

32. வியப்ப :- 'தண்டளிர் வியப்பத் தகைபெறுமேனி,

33. விழைய :- 'மழை விழை தடக்கை வாய்வா ளெவ்வி, [புறம். 11].

34. வீழ:- 'விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும், (புறம்.11]

35. வெல்ல] : வீங்கு சுரை நல்லான்
36. வென்ற] வென்ற வீகை' [புறம்.11]

தொல்காப்பியர் உவமவுருபுகளுள் சிலவற்றை வினை பயன், மெய், உரு, என நான்கிற்குச் சிறப்பு உருபுகளாகப் பிரித்துக் காட்டுவர். அது அக்கால மரபு எனத் தெரிகிறது. சங்க காலத்திலேயே இம்மரபு மாறியுள்ளது.

தண்டியாசிரியர் நிகர, ஏய, ஏர, மலைய. இயைய, ஏற்ப, அனைய, அமர, இகல, விழைய, எதிர, துணை, தாக்கு, ஆண்டு, ஆங்கு, மிகு, தகை, வீழ, இணை, சிவண், கேழ், அற்று, செத்து, பிறவும் என உவமச் சொல்லைக் குறிப்பர். தமிழ்ப்பாவியல. பக்.54). தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றுள் அன்ன, ஆங்க, உறழ, என்ன, எள்ள, ஒப்ப, கடுப்ப, நிகர்ப்ப, நேர, புரைய, பொருவ, போல, மாள- இவற்றை மட்டும் தண்டியலங்காரம் குறிப்பிடும். [தண்டி. 35]

உவமன் :- உவமை.

உவமானம் :- உபமானம், மருவுநே ருவமானம் வகுத்திட,
[சேதுபு. இராமதீ. 26]

உவமித்தல் :- ஒப்புக் கூறுதல். [கந்தரலங். 9]

உவமேயப் பொருள் :- உபமேயம்.

உவமேயம் :- உபமேயம்

உவமை :- (அணி.) உவமை அணி. பொருளணிவகை. இரண்டு பொருள்களுக்கு ஒப்புமையை விளங்கச் சொல்லுதல். இதனை வடநூலார் 'உபமாலங்காரம்' என்பர். [அபிதா.] வினை, பயன், மெய், உரு, என்பவற்றின் காரணமாக உவமையை நான்காகக் கூறுவார் தொல்காப்பியர். [தொல். பொ. 276] அவற்றைக் கீழ்க்காணும் மூன்றில் அடக்குவார் தண்டியார். பண்பு, தொழில், பயன் என்பன காரணமாக ஒன்றாகியும், பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்பமை புலப்படப் பாடுவது உவமையணி. [தண்டி. 35].

1. பண்புவமை :- பண்பு காரணமாக வருவது.
[எ.டு] 'பவளத் தன்ன மேனி' (அக.)

2. தொழிலுவமை :- தொழில்காரணமாக் வருவது
[எ.டு.] "களிற்றுஇரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்துஇயங்கு மரபின் வயப்புலி போல"
[அகம் 22]

3. பயனுவமை :- பயன்காரணமாக வருவது.
[எ.டு] "மாரியன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மோ"
[புறம். 133]

"விரவியும் வரூஉம் மரபின என்ப" எனத் தொல்காப்பியர் குறித்ததற்கிணங்க உவமையின் விரி இருபத்து நான்கு என்பர். தண்டியாசிரியர் அவை வருமாறு :-

1. விரியுவமை :- பண்பு முதலியன விரிந்து நிற்பது.

2. தொகையுவமை :- பண்பு முதலியன தொக்கு நிற்பது

3. இதரவிதரஉவமை : பொருள் ஒருகால் உவமையாயும், உவமையொருகால் பொருளாயும் ஒரு தொடர்ச்சிக்கண்ணே வருவது. இது இதரேதரம், அந்நியோந்நியம், தடுமாற்றம் எனவும் அழைக்கப்படும். புகழ்பொருளுவமையணி என்று சந்திரலோகம் குறிப்பிடும். இதனை வடநூலார் உபமேயாலங்காரம் என்பர் [இலக். வி. பக். 107]

4. சமுச்சயவுவமை :- இதனை ஒப்பது இதனாலேயேயன்றி இதனாலும் ஒக்கும் என்பது. இது உம்மை உவமம் எனவும் பெயர் பெறும் [வீரசோ. 157]

5. உண்மையுவமை :- உவமையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது.

6. மறுபொருளுவமை : முன்னர் வைத்த பொருட்கு நிகராவதொரு பொருளைப் பின்னர் வைப்பது. இது எதிர் பொருளுவமை எனவும் பெயர் பெறும். [வீரசோ. 156]

7. புகழுவமை :- உவமையைப் புகழ்ந்து உவமிப்பது. இது புகழ்ச்சியுவமம் எனவும் பெயர் பெறும. (வீரசோ. 156)

8. நிந்தையுவமை :- உவமையைப் பழித்து உவமிப்பது. பழிப்புவமை எனவும் பெயர் பெறும் [வீரசோ. 156]

9 நியமவுவமை :- இன்னதற்கு இன்னதே உவமையாப எனத் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து சொல்வது.

10. அநியமவுவமை :- நியமித்த உவமையை விலக்கிப் பிறிதும் இப்பெற்றியனவாம என்பது

11. ஐயவுவமை :- உவமையையும், பொருளையும, ஐயுற்று உரைப்பது இதனை ஐயநிலையுவமை என்பர் இலக்கணவிளக்க முடையார்.

12. தெரிதருதேற்றவுவமை :- ஐயுற்றதனைத் தெரிந்து துணிவது. இது தேற்றவுவமை எனவும [இலக். வி.] துணிவுவமை எனவும் (வீரசோ. 156) பெயர் பெறும்.

13. இன்சொலுவமை :- பொருளினும் உவமைக்கொரு மிகுதிதோன்றக் கூறி உவமிப்பது; இன்ன மிகுதியையுடைத்தேனும் ஒப்பதன்றிச் சிறந்ததன்று என்பது. இது இசையுவமை எனவும் பெயர் பெறும். (வீரசோ. 156.)

14. விபரீதவுமை :- மேற்றொட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய் வருவதனை உவமையாக்கியுரைப்ப இது. எதிர்நிலையணி எனவும் [சந்திரலோகம்] பிரதிபாலங்காரம் [அணியி] எனவும் பெயர் பெறும்.

15. இயம்புதல் வேட்கையுவமை :- பொருளை இன்னது போலும் என்று சொல்ல வேட்கின்றது என்னுள்ளம் என்பது. இதனை வேட்கையுவமம் என இலக்கண விளக்கமும், கருத்துவமையென வீரசோழியமும் குறிப்படும்.

16. பலபொருளுவமை :- ஒரு பொருட்டுப் பலவுவமை காட்டுவது. பல்லியல் உவமை எனவும் பெயர் பெறும். [வீரசோ. 157].

17. விகாரவுவமை :- ஓர் உவமையை விகாரப் படுத்தியுவமிப்பது. விக்கிரியவுவமை எனவும் பெயர் பெறும்.
[வீரசோ. 157]

18. மோகவுவமை :- ஒரு பொருள் மேல் எழுந்த வேட்கையால் வந்த உள்ளமயக்கந் தோன்ற உரைப்பது.

19. அபூதவுவமை : முன்பு இல்லதனை உவமையாக்கியுரைப்பது. இதனை மாறனலங்காரம், ஒன்று பல குழீஇய பல பொருளுவமைக்கண் அடக்கும். இல்பொருளுவமையாகவும் கொள்ளும். (மாறன். 101)

20. பலவயிற்போலியுவமை :- ஒரு தொடர்மொழிக்கண்

பலவுவமை வரின் வந்த உவமைதோறும உவமைச்சொல் தோன்றப் புணர்ப்பது.

21. ஒருவயிற்போலியுவமை :- ஒரு தொடர் மொழிக்கண் பலவுமைவரின் அவ்வந்தவுவமை தோறும் உவமைச் சொல் புணராது ஓர் உவமைச் சொற் புணர்ப்பது.

22. கூடாவுவமை:- ஒரு பொருட்குக் கூடாத வதனைக்கூடு-வதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கியுரைப்பது. மருட்கையுவமம் எனவும் பெயர் பெறும். [மாறன். 101]

23 பொதுமை நீங்குவமை :- உவமையைக் கூறி மறுத்துப் பொருள் தன்னையே உவமையாக உரைப்பது. ஒப்பில் உவமை எனவும் பெயர் பெறும். [வீரசோழி. 159].

24. மாலையுவமை :- ஒரு பொருட்குப் பலவுவமை வந்தால் அவை ஒன்றோடொன்று இடைவிடாது தொடர்ச்சியுடைய-வாய்ப் புணர்த்துக் கடைக்கண் பொருள் கூட்டி முடிப்பது.

உவமையணி பிற அணிகளுடன் கூடிவருந் தன்மையில் அற்புதவுவமை முதல் ஏதுவமை ஈறாக அவை எட்டனையும் சேர்த்து உவமையணி விரி முப்பத்திரெண்டென்பர் இலக்கண விளக்கமுடையார். அவை:

25. அற்புதஉவமை - பொருளின் குணங்களை உவமையில் ஏற்றி அற்புதந் தோன்றச் சொல்வது.

26. சிலேடையுவமை :- சொற்கள் ஒரு பொருளன்றிப் பல பொருட்பட வருவது. சிலேடையுவமை செம்மொழிச் சிலேடை-யுவமை, பிரிமொழிச் சிலேடையுவமை என இருவகைப்படும்.

i) செம்மொழிச் சிலேடையுவமை :- சொற்கள் ஒரே தன்மைத்-தாக நின்று பொருள்பட்டு இருபொருளின் ஒன்றை ஒன்றுக்கு உவமை கூறுதல்.

ii) பிரிமொழிச்சிலேடையுவமை :- சொற்கள் இருபொருட்குப் பொதுமையாக நின்று அவற்றுள் பெரும்பாலான சொற்கள் ஒவ்வொரு பொருட்கும் ஒவ்வொரு விதமாகப் பிரிந்து பொருள் படுவது.

27. அதிசயவுவமை :- உயர்வு நவிற்சியுடன் உவமையைப் பொருளோடு புணர்த்துக் கூறுவது. இது மிகையுவமை எனவும் பெயர் பெறும்.

28. விரோதவுவமை :- முரண்படு பொருளால் உவமையுரைப்பது.

29 ஒப்புமைக் கூட்டவுவமை :- வேறுபட்ட பொருள்களின் பொதுத் தன்மையை ஒப்புமை தோன்ற உரைப்பது.

30. தற்குறிப்பேற்ற உவமை :- இயற்கை நிகழ்ச்சிகளைக் கற்பனையால் பிறிதொன்றின் நிகழ்ச்சிகளோடு ஒப்பிடல். நோக்குவமை எனவும் பெயர் பெறும்.

31. விலக்குவமை :- உபமானப் பொருள்களுக்கு உபமேயத்திற்குரிய தன்மையில்லை என்று கூறி உபமானத்தைக் குறிப்பாக விலக்குதல். இது தடையுவமை எனவும் பெயர் பெறும்.

32. ஏதுவுவமை :- ஒன்றற்கு மற்றொன்று உவமையாதற்குக் காரணத்தைக் கூறி உவமிப்பது. இது காரண உவமை எனவும் பெயர் பெறும்.

வீரசோழியமும், மாறனலங்காரமும் குறிக்கும் உவமையணி வகைகள் பின்வருமாறு.

வீரசோழியம் :-

1. அந்நியவுவமை. 2. இகழ்ச்சியுவமை. 3. இழிபுயர்வுப்புகழ்ச்சியுவமை. 4. உயர்விழிவுப் புகழ்ச்சியுவமை. 5. ஒப்புமறையுவமை. 6. ஒருவழியொப்பின் ஒரு பொருள் மொழி-

தலுவமை. 7. சந்தானவுவமை. 8. சமஉவமை. 9. தலைப்பெயல்மரபின் சார்ந்துவரலுவமை. 10. பண்புவமை 11. பொருளுவமை. 12. வாக்கியப் பொருளுவமை.

மாறனலங்காரம் :- 1. அந்தாதியுவமை 2. அவயவ்வுவமை 3. அவயவியுவமை 4. ஏகவுவமை 5. ஒருபொருளுவமை 6. குறையுவமை 7. தலைதடுமாற்றவுவமை 8. தற்குணவுவமை 9. நிரலநிறையுவமை 10. நிறையுவமை 11. முற்றுவமை.

உழத்திப்பாட்டு :- உழவுச் செய்திகளைக் கூறும் ஒரு சிற்றிலக்கிய வகை. (பன்னிருபா. 333) இதுவே பிற்காலத்தில் பள்ளு இலக்கியமாகியிருக்கலாம்.

உழபுலவஞ்சி :- (புறப்.) புறப்பொருள்துறை. வஞ்சி வேந்தன் பகைநாட்டினைச் சுட்டெரித்தலைக் கூறும புறத்துறை. இது வஞ்சித்திணைக்குரிய இருபத்தோரு துறைகளுள் ஒன்று. (பு. வெ. 3. 14) தொல்காப்பியர் வஞ்சித்திணையின் துறைகளாகக் குறிப்பிடும் பதின்மூன்றனுள் 'எரிபரந்தெடுத்தல்' என்னும் துறையே உழபுலவஞ்சியோடு ஒப்பு நோக்கற்குரியது.

உழவன் வென்றி :- (புறப்.) புறப்பொருள்துறை. வேளாளனது மிகுதியைக் கூறும் புறத்துறை. (பு. வெ. பெருந் 41) எண்வகை உணவுகளையும் ஆக்கித்தருதல் வேளாளனுக்கு வென்றி என்பது கருத்து. எண்வகை உணவாவன. நெல், வரகு, சாமை, தினை, இறுங்கு, கேழ்வரகு, கொள்ளு, உழுந்து என்பன. "நெல் வரகு சாமை தினை இறுங்கு கேழ்வரகு கொள்ளுழுந்தோ டெண் விளைவாகும்" (பு. வெ. பெருந். 41. உரை)

உழிஞை :- (பார்க்க) உழிஞைத் திணை.

உழிஞைத்திணை :- (புறம்.) புறத்திணை ஏழனுள் ஒன்று. அகத்திணை ஏழனுள் மருதத்திற்குப் புறனாக அமைவது உழிஞைத்திணை. "உழிஞைதானே மருதத்துப் புறனே' என்பர் தொல்காப்பியர். புனலுலகமாகிய மருதத்துப் புறம் எயில அழித்தலும எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் 'இரண்டு நெறிபடும்' என்பர் இளம்பூரணர். (தொல். பொ. புறத் இளம்பூ. விளக்கம்)

உழிஞைத் திணையாவது பகைவரது மதிலைக் கைப்பற்றுதலும் அழித்தலும் ஆகிய இரண்டு வழக்கினை இலக்கணமாகவுடையது. இதற்கு உழிஞைப்பூச் சூடுதல் மரபு. உழிஞை என்பது ஒரு வகைக் கொடி. இது புறத்திணையுள் நொச்சியின் மறுதலைத் திணை. 'கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்' முதல் 'உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்' ஈறாகச் சொல்லப்பட்ட எட்டனையும் உழிஞைத்திணையின் துறை வகையாகவும், ''குடையும் வாளும் நாள்கோள்' முதல் 'தொகைநிலை' ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டனையும் உழிஞைத் திணையின் துறைவிரியாகவும் இருபது துறைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

உழிஞை முதல் தொகைநிலை ஈறாக இருபத்தொன்பதும் உழிஞைத் திணையின் துறைகளாகப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும். உழிஞைமுதல், தொகைநிலை ஈறாக முப்பத்திரண்டு துறைகளை இலக்கண விளக்கம் குறிக்கின்றது. 'உழிஞை' என்பதனைத் தொல்காப்பியர் திணைப்பெயராகக் கொள்ள, புறப்பொருள் வெண்பாமாலை திணைப்பெயராகவும் துறைப்பெயராகவும் குறிப்பிடும்.

உழிஞைத் திணையின் துறைகள் :- **தொல்காப்பியம் :**

1. கொள்ளார் தேயம் குறித்த கொற்றம் 2. உள்ளியது முடிக்கும் வேந்தனது குறிப்பு 3. தொல் எயிற்று இவர்தல். 4. தோலது பெருக்கம். 5. அகத்தோன் செல்வம். 6. புறத்தோன் அணங்கிய பக்கம் 7. திறற்பட ஒருதான் மண்டியகுறுமை. 8. உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில். 9. குடை நாட்கோள். 10. வாள்நாட் கோள். 11. ஏணிமிசை மயக்கம். 12. வென்றுகைக் கொண்டு முற்றிய முதிர்வு. 13. அகத்தோன் வீழ்ந்த நொச்சி. 14. புறத்தோன் வீழ்ந்த புதுமை. 15. நீர்ச்செரு வீழ்ந்த பாசி. 16. பாசிமறன். 17. மேலோர் பக்கம். 18. மண்ணு மங்கலம். 19 வென்ற வாளின் மண்ணோடு ஒன்றல். 20. தொகை நிலை :

புறப்பொருள் வெண்பாமாலை :-

1. உழிஞை. 2. குடை நாட்கோள், 3. வாள் நாட் கோள். 4. முரச உழிஞை. 5. கொற்ற உழிஞை. 6. அரச உழிஞை 7. கந்தழி 8. முற்றுழிஞை. 9. காந்தள். 10. புறத்திறை. 11. ஆரெயில் உழிஞை. 12. தோல் உழிஞை. 13. குற்றுழிஞை. 14. புறத்துழிஞை. 15. பாசி நிலை. 16. ஏணிநிலை. 17. எயிற்பாசி. 18. முது உழிஞை. 19. அகத்துழிஞை. 20. முற்றுழிஞை 21. யானை கைக்கோள் 22, வேற்றுப் படையரவு. 23. உழுது வித்திடுதல். 24. வாள் மண்ணு நிலை. 25. மண்ணு மங்கலம். 26. மகட்பால் இகல். 27. திறைகொண்டு பெயர்தல். 28. அடிபட இருத்தல். 29. தொகைநிலை.

இலக்கண விளக்கம் :-

புறப் பொருள் வெண்பாமாலை குறிப்பிடும், இருபத்தொன்பது துறைகளோடு [1] குற்றுழிஞைப் பக்கம் [2] குற்றுழிஞை மற்றொரு பக்கம் [3] அகத்துழிஞைப் பக்கம் ஆகிய மூன்று துறைகளைச் சேர்த்து உழிஞைத் திணையின் துறைகளை முப்பத்திரண்டென இலக்கண விளக்கம் வகுக்கின்றது.

உழிஞை மாலை :- சிற்றிலக்கிய வகை. மாற்றாரது ஊர்ப்புறம் சூழ உழிஞைப் பூமாலை சூடிப் படைவளைப்பதைக் கூறும் இலக்கிய வகை. [இலக் வி. பாட். பக். 484]

உழுது வித்திடுதல் :- (புறப்.) புறப் பொருள் துறை. உழிஞையார் நொச்சியாரது அரணகத்தே கழுதை ஏரால் உழுது கவடியும் குடைவேலும் வித்தியது பற்றிக் கூறும உழிஞைத் துறை. (பு. வெ. உழிஞை. 26) [கவடி - பலகறை - இது உண்ணா வரகு எனப்படும். குடைவேல் உடைமரம்.]

உளர்தல் :- [இசை] யாழ் முதலியன வாசித்தல்

உளர்வு :- [பார்க்க] உளர்தல்.

உளைத்தல் :- [இசை] யாழ் ஒலித்தல். [திவா]

உள்ளதன் அபாவம்:- [அணி] அபாவவேது. [பார்க்க.] ஏதுவணி

உள்ளப் புணர்ச்சி :- (பார்க்க) இயற்கைப் புணர்ச்சி

உள்ளாளம்:- இசைவகை. கூத்தின் விகற்பம்.. [பிங்.]

உள்ளுறுத்தல் :- உட்கருத்து. "உள்ளுறுத்திதனோடு ஒத்துப் பொருள் முடிகென" [தொல். பொ. 48] உள்ளிடுதல். "தோழி யுள்ளுறுத்த வாயில்" [தொல். பொ. 149.]

உள்ளுறை :- பொருளடக்கம் ' உட்கருத்து. மறை பொருள். [பார்க்க] உள்ளுறையுவமம் "புள் விலங்கு முதலான கருப்-பொருள்களிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளும் தன்மையதாக உணர்வார்க்குப் புலப்படும பொருள் இது அகப்பாட்டிற்குரிய உவமை வகைகளில் ஒன்று" [அ. பொ. வி. பக். 428.]

உள்ளுறையுவமம் :- [பார்க்க] உவமப் போலி.

உள்ளொற்றுதல் :- உண்ணிகழ்ச்சியை உய்த்துணர்தல். "உள்-ளொற்றி யுள்ளூர் நகப்படுவர்". [குறள் 927]

உறழ்கலி :- [பா.] கலிப்பாவின் வகை. ஒருவா ஒன்று கூறுதற்கு மறுமாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் அவற்றை அடக்குவதோர் சுரிதகமின்றி முடிவது.

" கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே "

என உறழ் கலிக்கு இலக்கணம் வகுப்பர் தொல்லாசிரியர் [எ. டு.] கலித்தொகை 69 ஆம் பாடல்.

உறழ்ச்சியணி :- [அணி.] பொருளணி வகை. சமானமாகிய வலிமையுடைய இரண்டு பொருள்களைக் காட்டி விகற்பித்தல் [எ.டு.]

" தலையையேனும் விரைந்தெந் தார்வேந்தர்க் கோர்நின்
சிலையையேனும் வளைத்தல் செய் "

இவ்வணி வடமொழியில் "விகல்பாலங்காரம்" எனப்படும்.
[அணியி. 54]

உறழ்தல் :- [இசை] வீணையில் ஒரு நரம்பை விட்டு ஒரு நரம்பைத் தெரித்தல். 'வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்' [பொருள் 23]

உறழ்ப்பு :- [இசை] காந்தார பஞ்சமம். [பிங்].

உறுப்பு :- [இசை] பாலையாழ்த்திறம் [திவா].

உறுப்பு :- [பார்க்க] உறுபு.

உறுப்புறுப்பிக் கலவை :- [அணி.] சொல்லணி வகை.
[பார்க்க] கலவையணி.

உறுமி :- தோற்கருவி வகை

உற்கடிதம் :- [இசை] ஐந்து தாளத் தொன்று [பரத. தாள. 15.]

உற்கடிதம் :- [கூ.] ஐவகை நிருத்தங்களுள் ஒன்று. [சிலப். பக். 31]

உற்கிரகம் :- [இசை] இசைக்கிளை ஐந்தனுள் ஒன்று. [பெரியபு. ஆனாய. 26 உரை.]

உற்கிருதி :- [பா.] செய்யுளில் ஓரடிக்கு ஒற்றொழிந்து இருபத்தாறெழுத்தாய் வரும் விருத்தம். [எ. டு.]

" தொழுவடிய ரிதயமல ரொருபொழுதும் பிரிவரிய
துணைவ னென்லா
மெழுமிரவி கிரணநிக ரிலகுலகில் புனைசெய்தரு
நிறைவ ரிடமாங்
குழுவுமறை யருவமுனி வரருமரி பிரமருர
கவனு மெவருந்
தொழுதகைய விமையவரு மறமருவு துதிசெய்தொழு

துடிதபுரமே "

(வீரசோ. யாப். 33 உரை)

உற்சங்கக்கை :- [கூ] அபிநயக்கை வகை. (பரத பாவ. 53)

உற்சங்கம் :- [கூ] இணைக்கை வகை (சிலப். 3.18 உரை) [பார்க்க] உற்சங்கக்கை.

உற்பணம் :- [கூ] நிருத்தக்கை முப்பதனுள் ஒன்று [சிலப். பக். 81]

உற்பவ மாலை :- சிற்றிலக்கிய வகை. திருமால் பிறப்பு பத்தினையும் ஆசிரிய விருத்தத்தால் கூறும் இலக்கிய வகை [இலக். வி. பாட். பக். 484.]

உற்பாதம் :- தீயகுறி 'உற்பாதமாப்க படியிடையற்று வீழ்ந்த ......பதாகை!' [கம்பரா. நாட. 74]

உற்பிரேட்சை :- [அணி.] தற்குறிப்பேற்ற அணி. [அணியி. 12]

உற்றுரைத்தல் :- [அகம்] எதிர்ப்பட்டு வினவிய பாங்கனுக்கு நெருநலை நாள் [நேற்று] பொழிற்கண் சென்றேன் அவ்விடத்து ஒரு சிற்றிடைச் சிறுமான்விழிக் குறத்தியால் இவ்வாறாயினேன்' எனத் தனக்கு உற்றதைத் தலைவன் கூறியது. [திருக்கோ. பக். 53].

உற்றாண்மை :- நெருங்கிய உரிமை.

உன்ன நிலை :- [புறப்.] புறப்பொருள் துறை, போருக்கு முன் உன்ன மரத்தால் நிமித்தம் அறியும் புறத்துறை. (தொல். பொ. 50 உரை) (பார்க்க) உன்னம்.

உன்னம் :- (கூ.) சிறு விரலும் பெருவிரலும் தம்முட் கூட மற்றைய மூன்று விரல்களும் விட்டு நிமிரும் இணையா வினைக்கை "உன்ன நிலையே யுணருங்காலை" [சிலப். 3.18.]

ஊ :- [இசை.] கைக்கிளை என்னும் இசையின் எழுத்து. (திவா.)

ஊகாஞ்சிதம் :- [அணி] தற்குறிப்பேற்றம். [தொன். வி, 346]

ஊசல் :- சிற்றிலக்கிய வகை. [பிரபந்தம்] ஆசிரிய விருத்தத்தினாலோ கலித்தாழிசையாலோ தலைவன் சுற்றத்தொடும் பொலிவானாக என்று பொருள் தொடர்புறப்பாடுவது [இலக். வி.]

"ஆங்கவிருத் தத்தால் அறைந்தகலித் தாழிசையால்
ஓங்கியசுற் றத்தளவாய் ஊசலாம்" [வெண்பாப். செய் 23)

" அகவல் விருத்தம் கலித்தா ழிசையால்
பொலிதரு கிளையோடும் புகலுவது ஊசல் "
[இலக். வி. 845]

ஊசல்வரி:- ஊஞ்சற்பாட்டு. [சிலப். 29]

ஊசற்சீர்:- ஊஞ்சல் வரி. "நாம் பாடுஞ் சேயுய ரூசற் சீர்." (கலித். 131)

ஊசற் பருவம்:- பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்கள் பத்தனுள் ஒன்று. ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பருவம் பத்தனுள் ஈற்றிலமைந்த சிற்றில், சிறுதேர், சிறுபறை முதலிய மூன்றனையும் நீக்கி அவற்றிற்குப் பதிலாக கழங்கு, அம்மனை, ஊசல் என்பனவற்றை அமைத்தல் மரபு. இவ்வூசற் பருவம் பாடுங் கவியால் பாடப்பட்டு வகுப்பானும், அகவல் விருத்தத்தானும் சுற்றமுறப் பாடப்படும். ஊசற்பருவம் பிள்ளையின் இருபத்தோராம திங்களில் பாடப்பெறும்.

ஊஞ்சல் :- ஊசற்பாட்டு.

ஊஞ்சற் பாட்டு:- ஊஞ்சலாடும் போது பாடும் பாட்டு.

ஊடலுவகை:- (அகம்) புலவியின் பின் கூடலால் நிகழும் மகிழ்ச்சி (குறள். 133. அதி)

ஊடலுள் நெகிழ்தம்: (புறம்] புறப்பொருள் துறை தலைவி மாலைப்பொழுதிலே தன் நெஞ்சு ஊடிய வழிக்குழைந்தது பற்றிக் கூறும் புறத்துறை. (பு. வெ. பெருந் 15.) இது பெருந்திணையில் அமைந்த பெண்பாற் கூற்று. ஊடலுள் என்றது. தான் கூடக் கருதவும் தலைவனோடு தன் நெஞ்சு ஊடியதாக அவ்வூடலிடத்து என்றவாறு (பு. வெ பெருந். 15 உரை) (பார்க்க) பெருந்திணை

ஊடல் :- (அகம்) தலைவன் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவிக்கு ஏற்படும் மனப்பிணக்கு. தலைமகன் பரத்தை காரணமாகப் பிரியத் தலைவிக்கு ஊடல் நிகழும். ஊடல் மருதத்திணையின் உரிப்பொருளுள் ஒன்றாகிய புலவி. (நம்பி யகப். 2) ''உப்பமைந்தற்றால் புலவி'' (திருக்)

ஊடல்தணிவித்தல் (அகம்) தலைவன் தன் பரத்தமை காரண, மாகத் தன்னோடு ஊடியிருந்த தலைவியின் ஊடல் தீர்தற்-பொருட்டு விருந்தோடு சென்றானாக, விருந்து கண்ட தலைவி விருந்தேற்றுக் கொண்டனள். அதன் பின்னர்த் தலைவன் பின்னும் அவள் ஊடல் தணிவித்தற்கு மகவினை ஏந்திச் செல்ல அது கண்ட தோழி தலைவியின்பாற் சென்று இனி நீ ஊடி யிருத்தல் அடாது. நம்பெருமான் தனக்குத் துணையாக நந்தோன்றலைக் கைப்பற்றிக் கொண்டு வந்தனன். ஆதலால் இனிநீ ஊடுதல் எங்ஙனம்? நின்கவலையை விடுத்து நம்-பெருமானுக்குக் குற்றேவல் செய்வாயாக! என்று அவள் ஊடலைத் தணிவித்தது. (கல்லாடம். பக 387)

ஊடுதல்:- (அகம்.) புலத்தல். 'ஊடுதல் காமத்திற்கின்பம் (குறள்—1330). பிணங்குதல். 'சென்றுதோறுடைப்பினும் செம்புன லோடுடோர். (நாலடி 222) (பார்கக) ஊடல்.

ஊடனீட வாடியுரைத்தல் - (அகம்.) தலைவன் ஊடல் தணிக்கத் தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மேன்மேலும் ஊடி நிறக, அன்று அம்மலையினிடத்துத் தன்னை யெய்துதற்கோ ருபாயமின்றி வருந்தா நிற்ப, யானுய்யும் வண்ணம் தன்னிணை மலர்க் கண்ணினது இனிய நோக்கத்தைத் தந்தருளி என்னைத் தன்வயமாக்கிய நம்பெண்ணமுதம் அதுவன்று; இது நம்மை

வருத்துவதொரு மாயமெனத் தன் நெஞ்சிற்குச் சொல்லி ஊடனீடித் தலைமகன் வாடி நிற்றல். (கல்லாடம். பக். 491)

ஊமை: (இசை.) ஒரு வாச்சியம். 'ஊமை சகடையோ டார்த்த வன்றே. (கம்பரா. பிரமாத். 5)

ஊரன் :- (அகம்) மருதநிலத் தலைவன். 'தண்டுறை யூரனை (ஐங்குறு. 88)

ஊராளி: (கூ) வரிக் கூத்து வகை. (சிலப். 3. 13 உரை)

ஊரின்கண்தோன்றிய காமப்பகுதி :- (புறப்.) புறப்பொருள் துறை காதல்மிகக ஆடவரும் மகளிரும் அழகு மிகக் கூடாநின்ற ஊரைப்பாராட்டிக் கூறிய பாடாண் துறை (பு. வெ. பாடாண். 51) இதனைத் தொல்காப்பியர், ''ஊரொடு தோற்றம். என்பர். ஊரின்கண்தோன்றிய காமப்பகுதியும், தொல்காப்பியர் வகுத்த ஊரொடு தோற்றமும் பிற்காலச் சிற்றிலக்கிய வகையில் அமைந்த 'உலா' இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம.

ஊரின்னிசை :- சிற்றிலக்கியவகை, தலைவனூரரை இன்னிசை வெண்பாக்களால் சிறப்பிக்கும் பிரபந்த வகை. (இலக். வி. 825).இன்னிசை வெண்பாவின் எண்ணிக்கை 96 அல்லது 75 அல்லது 50 எனச் சதுரகராதி குறிப்பிடுகின்றது.

ஊரெறிதல் :- (புறம்) ஊரைக் கொள்ளையிடுதல். (இறை. 1. பக். 18)

ஊரெறிபறை :- பாலை நிலத்துப்பறை.

ஊர்கொலை :- (புறப்.) புறப்பொருள்துறை. பகைமேற் செல்வோர் நிரை கொள்ளுமுன் நிரை காவலரைக் கொல்லும் புறத்துறை. 'முற்றிய ஊர்கொலை' (தொல். பொ. 58.)

ஊர்ச்செரு :- [புறப்.] புறப்பொருள்துறை. தம்அரண் சிதைக்கும் உழிஞையாரைச் சிதைக்க விடாமல் தடுத்ததைக் கூறும்புறத்துறை (பு. வெ. நொச்சி. 3) இப்போர், அரணின் புறத்து ஊரின்கண் நிகழ்வதால ஊர்ச்செரு எனக் குறிக்கப்பெற்றது. இதனை,

'ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறன்'' என்பர் தொல்காப்பியர். [தொல். பொ.'புறத். 69] இவ்வூர்ச் செருவினைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் நொச்சித் திணையிலும் தொல்காப்பியர் உழிஞைத் திணையிலும் அமைத்துள்ளனர்

ஊர்த்துவ கலிகை - (கூ) கூத்தின் அங்கக்கிரியைகளுள் ஒன்று. (சிலப் பக் 81)

ஊர்த்துவ தாண்டவம் :- (கூ.) மேலே ஒரு பார்தத்தைத் தூக்கியாடும் நடனம்.

ஊர்நேரிசை :- சிற்றிலக்கியவகை. தலைவனது ஊரை நேரிசை வெண்பாவால் சிறப்பிக்கும் பிரபந்தவகை. [இலக். வி. 830. உரை] பாட்டுடைத் தலைவன் ஊரினைச்சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது. (இலக் வி. பாட். 484)

ஊர்ப்பொருத்தம் :- [சோதிடம்]. ஊர்ப் பெயரின் முதலெழுத்துக்கும், குறிகேட்போன் பெயரின் முதலெழுத்துக்கும் அமையும் பொருத்தம். [சோதிட. சிந். 199-

ஊர்விருத்தம் :- சிற்றிலக்கிய வகை. தலைவனின் ஊரைப் பத்து விருத்தச் செய்யுளால் சிறப்பிக்கும் பிரபந்த வகை. (இலக். வி. 853)

ஊர்வெண்பா :- சிற்றிலக்கியவகை. தலைவனின் ஊரைப் பத்து வெண்பாவினால் சிறப்பிக்கும் பிரபந்த வகை. [வெண்பாப். செய்யு. 22]

ஏ

எக்கமத்தளி :- [இசை.] ஒருவகை முழவு (திவ். பெரியாழ். 3. 4. 1)

எக்கம் :- (இசை.) ஏக தந்திரி என்னும் இசைக்கருவி. ஒரு-தலைப் பறைவகை.

எக்காளம் - ஓர் ஊதுசின்னம்.

எக்காளை :- ஒரு கஞ்சக் கருவி. [அபிதா.]

எச்சரிக்கை :- எச்சரிக்கைப் பாட்டு.

எச்சு :- வாத்தியக் கருவி வகை (யாழ். அக)

எஞ்சியசொல்லினெய்தக்கூறல் ;- [உத்தி.] முப்பத்திரண்டு நூலுத்-தியுள், சொன்னவற்றால் சொல்லாதவற்றையும் உய்த்தறியுமாறு கூறுகையாகிய உத்தி. [நன். 14. உரை.]

எடுத்தடி மடக்கு :- ஒருவர் சொன்னதைக் கொண்டே மறுக்கை.

எடுத்தமொழியினெய்த வைத்தல் :- (உத்தி.) நூலுத்தி முப்பத்தி-ரண்டனுள் தான் எடுத்துக் காட்டும் இலக்கியத்திலே இலக்கண மமைந்திருப்பதைக் காட்டுதலாகிய உத்தி. [நன். 14. உரை]

எடுத்துக்காட்டல்:- [உத்தி] நூலுத்தி முப்பத்திரண்டனுள் தான் கூறும் இலக்கணத்திற்குத் தானே இலக்கியத்தை எடுத்துக்காட்டு-தலாகிய உத்தி. [நன். 14. உரை]

எடுத்துக்காட்டு :- மேற்கோள். திருஷ்டாந்தம்.

எடுத்துக்காட்டுவமையணி :- (அணி.) பொருளணிவகை. உவமை உவமிக்கப்படும் பொருள் இவை இரண்டையும் உவமஉரு-மின்றித் தனித்தனியே கூறுவதாகிய அணி. இவ்வணியை வட நூலார் "திருஷ்டாந்தாலங்காரம்" என்பர். எடுத்துக்காட்டு.

உவமை அணி இரு வகைப்படும். அவை:

1. நிகரெடுத்துக்காட்டுவமை:- (எ.டு)

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு''

எழுத்துக்கு அகர முதலும், உலகுக்கு ஆதி பகவனும் நிகராகக் கூறப்பட்டது.

2. முரணெடுத்துக்காட்டுவமை:- (எ.டு)

''மன்னவ நின் நெஞ்சிற் சினந்தோன்ற மாநிலத்தின்
ஒன்னலர்தங் கூட்ட மொழிந்தால் - பன்னின்
எதனளவும் வெய்யோ னுதயவெற் பெய் தானோ
அதனளவு மேவுமே யல்''

இதில் தோன்ற ஒழிந்தது என்பதற்கு, எயதானோ மேவும் என்னும் பகைப் பொருளால் தோன்றுகின்ற சூரியன் அடைந்தால் இருள் மேவும் என்பது ஒப்பாதல் காண்க. (அணியி. 18)

எடுத்துக்கோள்வரி:- (கூ) கையற வெய்தி வீழ்தலைக் கண்டு பிறர் எடுத்துக் கொள்ளும்படி நடிக்கும் நடம் 'அடுத்தவர் முன் மயங்கிய மயக்க மெடுத்தவர் தீர்த்த எடுத்துக் கோள்வரியும்.
(சிலப். 8.108)

எடுத்துச்செலவு:- (புறம்). படை எடுத்துச் செல்லுகை. 'மண்ணசை வேட்கையால் எடுத்துச் செலவு புரிந்த வேந்தன் மேல்'.
(தொல். பொ. புறத் 1 இளம்)

எடுத்துச் சொல்லுதல்:- சிறப்பித்துக்கூறுதல். விளக்கமாகக் கூறுதல்,

எடுத்துத் தொடுத்தல்:- இல்லாததைக் கட்டிக் கூறுதல். பொய் வழக்குப் பிணைத்தல்.

எடுத்து மொழிதல்:- விளக்கச் சொல்லுதல். இருந்தவர்க் கெல்லா மெடுத்து மொழிந்தான் (சீவக. 518).

எடுத்துரை மலைவு:- செய்யுள் குற்றங்களுள் ஒன்று.
(யாப். வி ஒழிபு. 525)

எடுத்துரைத்தல்:- [பார்க்க] எடுத்து மொழிதல்.

எடுத்து விடுதல்:- (புறம்) படையெடுத்தல், காங்கேயன் தெற்கே யெடுத்து விட்ட போது [திங். கண்ணிநுண் 3. வ்யா] படை நீங்குதல். (பு. வெ. 6. 30. உரை)

எடுத்தேத்து:- புகழ்ச்சி, "கையறியா மாக்க ளிளிப்பு மெடுத்தேத்தும்" (நாலடி. 163)

எடுத்தோத்து:- எடுத்து ஓதுகை. 'எடுத்தோத்துரையின்' (பெருங். மகத. 15. 11) எடுத்துக் கூறும் விதி, "இந்நூலுள் எடுத்தோத்தே இலேசேயென்று இவற்றான் முடியாது நின்றன-வெல்லாம்" [இறை. 59. உரை]

எடுப்பு:- [இசை]. தாளத்தின் தொடக்க முறை அவை நான்கு வகையின. 1. அதீத வெடுப்பு 2. அனுகத வெடுப்பு 3. சம வெடுப்பு 4. விஷம வெடுப்பு, இசைக்கிளை ஐந்தனுள் ஒன்று (பெரியபு. ஆனாய. 26. உரை)

எடுப்புதல்:- இசை எழுப்புதல்: 'மகர வீணைத்தெள் விளியெடுப்பி' [சீவக. 608]

எடை:- துயிலெழுப்புகை. துயிலெடைநிலை (தொல். பொ. 91)

எட்டன் மட்டம்:- (இசை). தாள வகை. [சிலப். 3. 16. உரை]

எட்டாரச் சக்கரம்

மிறைக்கவி வகை. (மிறைக்கவி—சித்திரக்கவி) எட்டு ஆரமுள்ள சக்கரத்தினுள்ளே எழுத்தெல்லாம் அமையப்பாடும் மிறைக்கவி.



1. ''மலர்மலி சோலை யகநலங் கதிர்க்க்
2. மடமயி லியற்றக மாதிரம் புதைத்து
3. வளைந்து புகன்மேக வல்லிருண் மூழ்க
4. வரியளி துதைந்த ததுப்பினி தடைச்சி
5. மன்னுமா மடமொழி வடிவாள வளவன்
6. கன்னித் துறைவன் கனகச் சிலம்பே'' [தண்டி—217]

இதன் கண் எட்டு ஆரராய், ஆர்மேல் ஆறெழுத்தாய் நடுவே ககரம் நின்று குறட்டின்மேல் 'அ(ய)றமே தளமாவது' என்னும் சொல் நின்று சூட்டின்மேல் முப்பதிரண்டு எழுத்து நின்று முற்றுப்பெற்றது.

எண் :- (பார்க்க) அம்போதரங்கம்.

எண்ணலங்காரம் :- (அணி). எண்கள் முறையே வரும் ஓர் அணி. (சி. சி. விநாயக. காப்பு. சிவஞா)

எண்ணுவண்ணம் :- (பா). எண்ணிடைச்சொல் பயின்று வரும் சந்தம். 'எண்ணு வண்ண மெண்ணுப் பயிறும்', (தொல். பொ. 540)

எண்செய்யுள்:- சிற்றிலக்கியவகை. பாட்டுடைத் தலைவனுடைய, ஊரினையும், பெயரினையும் பத்துமுதல் ஆயிரம அளவும் பாடி எண்ணால் பெயர் பெறுவது. (இலக். வி. பாட். பக். 485)

எதிரதுபோற்றல் :- (உத்தி). முப்பத்திரெண்டு உத்திகளுள் முற்காலத்து வழங்காது பிற்காலத்து வழங்கி வரும் இலக்கணத்தைத் தழுவிக் கொள்ளுதலாகிய உத்தி. [நன். 14. உரை

எதிருன்றுதல் :- பொருதற்கு உறுதியாய் எதிர்நிற்றல். 'எதிருன்றல் காஞ்சி' (பழம்பாடல்)

எதிர்கழறுதல் :- மாறுகூறுதல், ஒலித்தல். 'இடியெதிர் கழறும்' [பரிபா. -. 37]

எதிர்கொள்ளுதல்:- ஏற்றுக்கொள்ளுதல். 'எஞ்சாலெதிர்கொண்டு' [பு. வெ. 9. 32]

எதிர்கோள் :- எதிர் கொள்ளுகை. 'அரசை எதிர்கோளெண்ண' (கம்பரா. திருவவதா. 59)

எதிர்நிரனிறை:- பொருள்கோள் வகை. முறைமாறிவரும் நிரனிறை பெயரும் வினையுமாகிய சொற்களையும், அவை

கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறு நிரையாக நிறுத்தி எதிராக இதற்கு இது பயனிலை என்பது படக்கூறும் பொருள்கோள்.

1. பெயர்ச் சொற்களும் பெயர்ப் பயனிலைகளுமாய் நின்ற எதிர் நிரனிறை:- (எ.டு)

''களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனும் தோன்றும்
தோன்றல் மறைந்தோர் துறைகெழு நாட்டே''

களிறு போலக் கலனும், கந்துபோலக் கூம்பும் தோன்றும் என்க]

2. பெயர்ச் சொற்களும் வினைப் பயனிலைகளுமாய் நின்ற எதிர் நிரனிறை;- [எடு]

ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவர் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமே— நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு''

நீடிய மால், வெஃகா கிடந்தான்; பாடகம் இருந்தான், ஊரகம் நின்றான் என்பது] (நன். விருத்தி. 414 உரை)

எதிர்நிலையணி:- [அணி]. பொருளணி வகை. உவமான உவமேயங்களை மாற்றிச் சொல்லும் அணி. இது உவமானத்திற்குக் குறைவு தோன்றச் சொல்லல். இவ்வணி உவமையணிக்கு எதிரியதாக நிற்றலின் எதிர் நிலை அணி எனப்பட்டது. இவ்வணி ஐந்து வகைப்படும். அவை:

1. உலகின்கண் தெளிவாக வழங்குகின்ற பொருளை உவமேயமாக்கிக் கூறல். (எ.டு)

''அதிர்கடல் சூழ் வையத் தணங்கு முகம் போல
மதியுஞ்செயுமே மகிழ்''

2. உவமானத்தை உவமேயமாகக் காட்டி உவமேயத்தை இகழ்தல்

எ.டு] "பொன்செருக்கை மாற்றுமெழிற் பூவை திருமுகமே உன் செருக்குப் போது மொழிகவினிக் - கென் செருக்கு
மிக்கமகரக்கடற்பூ மிக்கண் மகிழ்செயலால்
ஒக்கு மதியு முனை"

3. உவமேயத்தை உவமானமாகக் கூட்டி உவமானத்தை இகழ்தல். [எ.டு]

"ஆற்றலுறு கொலையின் லாரெனக்கொப் பென்றந்தோ
கூற்றுவநீ வீண் செருக்குக் கொள்கின்றாய்-சாற்றுவல் கேள்
வெண்டிரை சூழ்ஞால மிசையுனக்கொப் பாகவே
ஒண்டொடிதன் நீள்விழியு முண்டு"

4. உவமேயத்தோடு உவமானத்திற்கு ஒப்புமைஇன்றெனக் கூறல். (எ.டு)

"இறைவி மதுரமொழிக் கின்னமுதொப் பாமென்
றறைவ தபவாத மாம்"

5. உவமானத்தை வீணென்று சொல்லுதல். [எ.டு]

"செங்கயற்க ணாயுன் றிருமுகத்தைப் பார்ப்பவர்க்குப்
பங்கயத்தா லுண் டோ பயன்" [அணியி 4]

எதிர்நூல்:- தன் கோள் நிறுவிப் பிறன்கோள் மறுக்கும் நூல் [இறை. 1 பக 12) [கோள்-கொள்கை]

எதிர் மறையணி:- [அணி] [பார்க்க] ஆஷேபாலங்காரம்

எதுகுலகாம் போதி (இசை) ஓர் இராகம்

எதுகை:- [யாப்பு] செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது'. இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் எதுகை என்பது காரிகை. எதுகையை எட்டுவகைப் படுத்துவார் காரிகையார். அவை.

1. அடியெதுகை:- [எ.டு].

"வடியேர் கண்ணீர் மல்க வான் பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டில்
இடியின் முழக்கஞ்சி யிரக்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை"

[ய், ர், ல், ழ் என்னும் மெய்யெழுத்துக்களுள் ஒன்று அடியெது கையில் ஆசாக வருவது' [காரிகை, ஒழிபி, 6, உரை]

2. இணை எதுகை:- முதலிருசீர் எதுகை இணைந்தன இணை.
[எ.டு] "பொன்னி னன்ன பொரிசுணங் கேந்தி"

3. பொழிப்பு எதுகை:- ஒன்றுவிட்டு ஒன்று எதுகை இணைந்தது
[எ.டு] பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி"

4. ஒரூஉ எதுகை:- இருசீர் இடைவிட்ட எதுகை.
[எ.டு] மின்னவி ரொளி விடந்தாங்கி மன்னிய

5. கூழை எதுகை:- ஈற்றில் எதுகை இல்லாதன
[எ.டு] நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி

6. மேற்கதுவாய் எதுகை:- முதலயற்சீர்க்கண் எதுகை இல்லாதன
[எ.டு] "என்னையுமிடுக்கண் துன்னுவித் தின்னடை

7 கீழ்க்கதுவாய் எதுகை:- ஈற்றயற் சீர்க்கண் எதுகை இல்லாதன
[எ.டு] "அன்ன மென்னடை போலப் பன்மலர்

8. முற்று எதுகை:- எல்லாச் சீர்க்கண்ணும் எதுகை வருவன.
[எ டு] "கன்னியம் புன்னை யின்னெழில் [துன்னிய' அடியின்

இரண்டாம எழுத்து ஒன்றாமல் வரினும இரண்டாம் எழுத்தின் மேலேறிய உயிர் ஒன்றிவந்தால் அது உயிரெதுகை எனக் கொள்ளலாம். (எ டு)

"துளியொடு மயங்கிய தூங்கிரு நடுநாள்
அணிகிளர் தாரோய் அருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலன்வயின் ஏந்தித்
தனியே வருதி நீயென்
மையிருங் கூந்தலோ அரிது"

செய்யுட்கண் ய ர ல ழ என்னும் ஒற்று நான்கும் ஆசாய் வரின் அது ஆசெதுகை எனக் கொள்ளலாம். [எ.டு]

காய்மாண்ட தெங்கின் பழம் வீழ ....
பூமாண்ட தீந்தேன்————————————————————" } [ய]

"மாக்கொடி மாலையும் ———————————
கார்க்கொடி ————————————————" } [ர]

"ஆவேறுருவின் ....
பால்வே றுருவின் ——————————————" } [ல]

"அந்தரத்துள்ளே ....
மந்தரமே ....
வாழ்கின்றே ....
போகின்ற ....'' } [ழ]

வல்லின எதுகையும் ஆசிடையிட்டு வருதல உண்டு.
[எ.டு] "ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை"

முன்னிரெண்டடியும் ஒரெதுகையாய் பின்னிரெண்டடியும்மற்றோரெதுகையாய் அமைவது இரண்டடி எதுகை எனப்படும். 'தா அவண்ணம் இடையிட்டு வந்த எதுகைத்தாகும்' என்பர் தொல்காப்பியர். [எ.டு] வந்த வழிக்கண்டு கொள்க. இடையிட்ட எதுகையை இருவிகற்பம் எனக் கொள்ளலாம் [ஒரு விகற்பம், இரு விகற்பம், மூன்று விகற்பம், நான்கு விகற்பம்] இரண்டாம் எழுத்தன்றி மூன்றாமெழுத்தும் ஒன்றியும் எதுகையாக அமைவது உண்டு. [எ.டு]

"பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் மீன்றன புன்னை"

வல்லொற்று அடுத்தாற்போல் விட்டிசைத்துக் குற்றெழுத்தினோடு புணரின் வீட்டிசைவல்லாற்றெதுகை எனக் கொள்ளலாம். [எ.டு]

"பற்றிப் பலகாலும் பான்மறி உண்ணாமை
நொ அலையல் நின்னாட்டை நீ"

இலையேயன்றி வருக்க எதுகை. நெடிலெதுகை. இனவெதுகை, [வல்லின எதுகை; மெல்லின எதுகை; இடையின வெதுகை]

தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை எனவும் எதுகையினைக் காரிகையர் வகைப்படுத்துவார் [காரிகை, ஒழிபி எதுகை]

எதுகைத்தொடை:- (யாப்). அடிதோறும் செய்யுளில் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது. (பார்க்க) எதுகை

எயில்காத்தல் - (புறப்) புறப்பொருள் துறை. அகத்தோன் உள்ளிருந்து கோட்டையைக் காத்து நிற்றலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 67, உரை) "எதிரூன்றல் காஞ்சி எயில் காத்தல் நொச்சி"

எயில்தனையழித்தல்:- (புறப்) புறப்பொருள் துறை மதிலிடத்தே காவல் செய்த வெட்சி மறவனது அழிவைக் கூறும் புறத்துறை (பு வெ. நொச்சி 7) எயில் ஆகுபெயராய் அதன்கண் காவல் செய்த மறவனை உணர்த்தும்.

எயிற்பாசி:- (புறப்) புறப்பொருள்துறை, உழிஞையார், நொச்சியாரது மதிலில் சாத்திய ஏணிமேல் ஏறியது பற்றிக் கூறும் புறத்துறை. இது உழிஞைத் திணைக்கண் அடங்கும். [பு. வெ. உழிஞை. 19] இதனை 'ஏணிமிசை மயக்கமும்' என்பர் தொல்காப்பியர். [தொல், பொ. புறத். 69]

எயிற்போர்:- (புறப்). புறப்பொருள் துறை, மதியின்கண் நின்று காவல் செய்யும் நொச்சி மறவரின் போர்த்திறத்தைப் புகழ்ந்து கூறும் புறத்துறை. இது நொச்சித்திணைக்கண் அடங்கும். (பு. வெ. நொச்சி. 6)

எருக்குல காம்போதி :- [இசை]. எதுகுல காம்போதி.

எருமைமறம் :- (புறப்.) புறப்பொருள்துறை. வீரன் ஒருவன் தன்சேனை புறமுதுகிடவும் பகைவர் சேனையைத் தான் அஞ்சாது எதிர்த்து நிற்றலைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 7. 13)

எல்லரி :- பறைவகை. கடிகவர் பொலிக்கும் வல்வாயெல்லரி [மலைபடு. 10]

எழால் :- (இசை). யாழில் எழும் இன்னிசை. மக்கள் மிடற்றிசை.

எழுகூற்றிருக்கை : 1. [பா]. மிறைக்கவிவகை. ஒன்று முதல் ஏழுவரையும் எண்கள் முறையே ஒவ்வொன்றாக ஏறியும் இறங்கியும் வருமாறு கூறப்படும் மிறைக்கவி. (மாறன். 297—299)

2. சிற்றிலக்கியவகை. ஏழு அறையாக்கிக் குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையால் ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையாகப் பாடுவது (இலக. வி. பக். 435)

எழுச்சிகொட்டுதல் :- புறப்பாட்டிற்குரிய வாத்தியம் முழக்குதல்.

எழுச்சிமுரசம் :- பள்ளி எழுச்சி முரசம். புறப்பாட்டு முரசு.

எழுத்தந்தாதி :- [யாப்.] ஒரு செய்யுளின் ஓரடியினீற்றெழுத்து அடுத்த அடியின் முதலெழுத்தாக வரத் தொகுப்பது. (யாப். வி. 52. பக். 184)

எழுத்தலங்காரம் :- எழுத்தைக் கூட்டல் குறைத்தல் மாற்றங்களால் பாடல்களில் தோன்றும் அழகு.

எழுத்தானந்தம் :- செய்யுட் குற்றங்களுள் ஒன்று. பாடப்படுவோன் பெயரைச் சார்த்தி எழுத்தளபு எழப் பாடுவதாகிய குற்றம். [யாப். வி. 96. பக். 518]

எழுத்து :- (யாப்.) யாப்பு உறுப்புக்களில் ஒன்று. [எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை) அசைக்கு உறுப்பாவது எழுத்து. குறில், நெடில், உயிர், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடை, ஆகிய பதின்மூன்று எழுத்துக்களும் அசைக்கு உறுப்பாவன. செய்யுளுள் எழுத்து எண்ணுங்கால் ஒற்று நீக்கி எண்ணுதல் முறையாகும். (காரிகை. அ. ப பக். 1)

எழுத்துக் குற்றம் :- நச்செழுத்துப் பரவப் பாடுதலாகிய குற்றம். (யாழ். அக)

எழுத்துச் சுதகம்:- அக்கரச் சுதகம் (யாப். வி. (509)

எழுத்துப் பொருத்தம்: காப்பியத்தின் தொடக்கச் செய்யுளின் முதன்மொழி முதலெழுத்துட்பட மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்னும் எழுத்துக்களுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று, வருவதாகிய செய்யுள் முதன்மொழிப் பொருத்த வகை.
[வெண்பாப் முதன். 4. தலைப்பு]

எழுத்து மடக்கு:- (அணி) செய்யுளில் எழுத்து மடங்கி வரும் சொல்லணி வகை.

எழுமுரசு:- அரசனது பயணத்தையறிவிக்கும் முரசு.

எழுவுதல்:- ஓசை எழுப்புதல். 'எழூவும் முரசு' (சூளா. கலியா. 248)

எளிதின்முடியணி:- [அணி] பொருளணி வகை. ஒருவன் செயத் தொடங்கிய காரியம் மற்றொரு காரண உதவியால் எளிதில் முடிதலைக் கூறும் அணி. இவ்வணி வடமொழியில் 'சமாதியலங் காரம்' எனப்படும்
[எ.டு] ''மதிநுதலாட் கியானூடல் மாற்றத் தொழும்போ
நுதவிமுகில் செய்தன் றொலித்து'' [அணியி. 57]

எறுப்பிடைச்செய்யுள்:- (பார்க்க) பிபீலிகாமத்தியம்

எற்பாடு:- பிற்பகல். [எல் + படு] சூரியன் அடையும் நேரம். (தொல். பொ. 8. உரை) காலை [தொல்.விடுத். 38]

என்றும் அபாவம்:- [பார்க்க] ஏதுவணி.

ஏ

ஏகதார்:- (இசை). ஒரு தந்தியுடைய வாத்தியம்.

ஏகதாளம்:- (இசை) சுத்த தாளத்தொன்று. ஏகதாளத்துக் கிலகு ஒன்றாமே. (பரத. தாள. 24)

ஏகதேச உருவகம்:- (அணி) ஒரு பொருளின் ஏகதேசத்தை உருவகப் படுத்தும் உருவக அணி.(குறள், 24 வரை) (பார்க்க) உருவகம்.

ஏகபாதம்:- [பா] மிறைக்கவி வகை. நான்கு அடியும் ஒரே எழுத்துத் தொடரால் அசைந்து வருவது. (திவா).

ஏகாங்க ரூபகம்:- உருவக வகை. [பார்க்க] உருவகம்''.

ஏகாட்சரி:- (பா). மிறைக்கவி வகை. உயிரோடும் தனித்தும் ஒரே மெய் வருவதாகிய மிறைக்கவி.(எ.டு)

''தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித் தூததே -தாதொத்த
துத்தித் தாதே துதித்துத்தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி'' (தனிப்பா காளமே. 418)

ஏங்கல்:- [இசை]. யாழ்நரம்பின் ஓசை. (பிங்)

ஏச்சுரை-: பழிப்புரை. ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையும் 'கேட்-டேங்கி (சிலப். -9.)

ஏணி மயக்கம்:- (புறம்) புறப்பொருள் துறை. கோட்டைக்கு உள்ளும் புறமும் நின்றோர் ஏணி மிசை நின்று போர் செய்தலைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 68. உரை) [பார்க்க] எயிற்பாசி.

ஏணிமிசை மயக்கம்:- [பார்க்க] ஏணி மயக்கம்.

ஏணி நிலை:- [புறப்]. புறப்பொருள் துறை. உழிஞையார் நொச்சியாருடைய மதிலின்கண் ஏணி சாத்தியது பற்றிக்கூறும

புறத்துறை. இது உழிஞைத் திணையுள் அடங்கும். (பு. வெ. உழிஞை. 18) இதனை 'ஏணி மிசை மயக்கம்' என்பர் தொல் காப்பியர். (தொல். பொ. புற. 69)

ஏதீடு:- [அகம்) தோழி அறத்தொடு நிற்கையில் தலைவி தலைவனை மணத்தற்கு அவன் செய்த உதவிகளைக் காரணமாக இட்டுரைக்க 'ஏதிடு தலைப்பாடு' (தொல். பொ. 207)

ஏது.- 1. காரண காரியங்களை ஒருசேரக் கூறும் ஓர் அணி. [தண்டி.57]

2. அனுமான உறுப்புகள் ஐந்தனுள் இரண்டாவது.
3. நிமித்தம்)

ஏதுமலைவு:- செய்யுட் குற்றங்களுள் ஒன்று. (யாப். வி. ஒழிபு. 525)

ஏது வணி:- (அணி). பொருளணி வகை. ஏதாவது ஒரு பொருள் திறந்து இதனால இது நிகழ்ந்தது என்று காரணம் வித்து சொல் லுதலாகிய அணி. இதனை வடநூலார் 'ஹேத்வலங்காரம்' என்பர். ஏதுவணி இருவகைப்படும்.

1. காரணத்தைக் காரியத்துடன் சேர்த்துச் சொல்லுதல்; [எ.டு]

> "பெருந்திங்கள் தோன்றுமே பெய்வளையார் நெஞ்சில்
> பொருந்தூடற் றீர்தற் பொருட்டு"

இதில் ஊடல் தீர்தல் -காரியம்; தோன்றல் காரணம்.

2. காரணத்தையும் காரியத்தையும் அபேதப்படுத்துச் சொல்லுதல்.

[எ.டு] "கூர்கொண்டு வேலுடைநங் கோன்கடைக்கண் பார்வையே
சீர் கொள்கவி வாணர் திரு" (அணியி. 100)

தண்டியலங்காரம் ஏது வணியைக் காரக ஏது, ஞாபக ஏது என இருவகைப்படுத்திக் கூறும்.

1. காரக ஏது:- காரணமாகத் தோன்றுவது. இதுநான்கு வகைப் படும். அவை

(அ) கருத்தாகாரக ஏது:- ஒரு வினை முதலே [கருத்தா] தொழிலை இயற்றுவிப்பதாயும் (காரகமாயும்) பிற தோன்றற்கு ஏதுவாயும் நிற்பது. (ஆ) பொருட்காரக ஏது:- ஒரு செயப்படு பொருளே காரகமாயும் அதுவே ஏதுவாயும் நிற்பது. (இ) கருமகாரக ஏது:- ஒருகருமமே [செயலே] காரகமாயும், அதுவே ஏதுவாயும் நிற்பது. (ஈ) கருவிகாரக ஏது:- ஒரு கருவியே காரகமாயும், அதுவே ஏதுவாயும் நிற்பது.

2. ஞாபக ஏது:- இதனால் இது விளைந்தது என்று அறிவிப்பது. இவையேயன்றி அபாவவேது சித்திர வேது, ஐயவேது, முதலிய வற்றையும் ஏதுவணியின் வகைகளாகத் தண்டியலங்காரம் குறிப்பிடுகிறது.

3. அபாவஏது.- ஒரு வினை நிகழ்ச்சிக்கு இல்லாத தன்மையை ஏதுவாகக் கூறுவது. அபாவவேது ஐந்து வகைப்படும். அவை:

(அ) என்றும் அபாவம்:- ஒரு வினை நிகழ்ச்சிக்கு எக்காலத்தும் இல்லாத தன்மையை ஏதுவாகக் கூறி விளக்குவது. இதனை- இன்மை ஏது எனலாம் ஆ) இன்மையது அபாவம்:- இல்லாமை- யினது இல்லாமை ஏதுவாக ஒன்றனை அறிவது. இ) ஒன்றி னொன்று அபாவம்:- ஒன்றன்கண் ஒன்று இல்லாமை ஏதுவாக வருவது. ஈ) உள்ளதன் அபாவம் :- ஓரிடத்தும் ஒருகாலத்தும் உள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதொரு காலத்தும் இல்லாமை. உ) அழிபாட்டு அபாவம் :- முன்பு உள்ளது அழிவுபட்டு இலதாதல்

[4] சித்திரஏது : வியப்பைத் தரத்தக்கதாகிய ஏது. இது ஐந்து வகைப்படும்.

அ) தூர காரிய வேது :- ஒருவழிக் காரணம் நிகழப் பிறிதொரு வழிக் காரியம் நிகழ்வது ஆ) ஒருங்குடன் தோற்றவேது:- காரண- மும் காரியமும் ஒக்க நிகழ்வது இ) காரணமுந்துறா உங்காரிய-

நிலை ஏது.- காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வது. ஈ) யுத்தவேது:- காரணத்திற்குப் பொருத்தமான காரியம் நிகழ்வது. உ) அயுத்தவேது :- காரணத்திற்குப் பொருந்தாத காரியம் நிகழ்வது ஊ) ஐயவேது:- ஒன்றற்குக் காரணம் இதுவோ என ஐயுறுவதாகிய ஏது. [எடுத்துக் காட்டுக்கள் தனித்தனியே முதனூலுள் காண்க]

ஏதுவின்முடித்தல் :- உத்தி முப்பத்திரெண்டனுள் முன்காரணம் விளங்கப் பெறாத ஒன்றைப் பின் காரணத்தால் முடிவுசெய்வதாகிய உத்தி. (நன். 14 உரை)

ஏந்தல் :- [பார்க்க] ஏந்திசை.

ஏந்தல்வண்ணம் :- விளக்கத்தின் பொருட்டும் வற்புறுத்தற் பொருட்டும் ஒரு சொல்லே மிக்கு வரும் சந்தம். (தொல்.
''வைகலும் வைகல் வரக்கண்டும்'' பொ. 543)

ஏந்திசை :- (யாப்.) செய்யுள் ஓசை வகை.

ஏந்திசை அகவல் :- (யாப்.) நேரொன்றாசிரியத்தளையால் பிறக்கும் ஓசை. [காரிகை. செய். 1. உரை]

ஏந்திசைச்செப்பல் :- (யாப்.) வெண்சீர் வெண்டளையாற் பிறக்கும் ஓசை. [காரிகை. செய். 1. உரை] (எ-டு)

''யாதானு நாடாமா லூராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லா தவாறு'' (குறள். 397)

ஏந்திசைத்துள்ளல் :- [யாப்.] கலித்தளையாற் பிறக்கும் ஓசை. [காரிகை. செய் 1. உரை]

ஏமாந்தருது :- முன்பனிப்பருவம். மார்கழி, தை ஆகிய மாதங்கள். குறிஞ்சித்திணைக்குரிய காலமாக கூதிர், யாமம், இவற்றோடு பனியெதிர் பருவத்தினையும் காப்பியனார் குறிப்பர். 'பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப' (தொல். பொ. 8) பனியெதிர் பருவமே ஏமந்தருதுவாகும்.

ஏமவெருமை :- எருமை மறம். [மாறன். 79, 71. உரை]

ஏர்க்களவுருவகம் : [புறப்] போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகப் படுத்தும் புறத்துறை. [புறநா. 369]

ஏலப்பாட்டு :- கப்பற்பாட்டு.

ஏழகநிலை:- (புறப்.) புறப்பொருள்துறை. இவன் ஏழகமூரினும் இத்தகையோன் என ஓர் இளமன்னனின் சிறப்பைப் பாராட்டிக் கூறும் புறத்துறை. இது பொதுவியற் றிணையுள் அடங்கும். [பு. வெ பொது 5] ஏழகம் - ஆட்டுக்கிடாய்: அரசன் குதிரை போன்ற ஓராட்டுக் கிடாயிலேறி விளையாட்டு நிமித்தம் செலுத்துதல் பண்டைக்கால வழக்கம் ஒரு மன்னன் தனது இளமையை எண்ணாமல் அரசுரிமை மேற்கொண்டு நடத்தலும் ஏழக நிலை என்னும் துறையுள் அடங்கும். [பு. வெ. பொது 6]. அரசன் ஆண்டிளையனாயினும் அரசாட்சித் திறமையில் பெரியவன் என்று உயர்த்துக் கூறுதலே ஏழகநிலை என்னும் துறையின் கருத்தாய் அமைதல் எண்ணத்தக்கது

ஏழிசை :- சுத்த சுரம் [திவா.] 1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4 உழை, 5. இளி, 6. விளரி. 7. தாரம். (பார்க்க) இசை. 'ஏழிசையாய் இசைப்பயனாய்'

ஏழிசையெழுத்துக்கள் :- (இசை). குரல் முதல் தாரம் ஈறாக அமைந்த ஏழிசைக்கும் குறியீடாக வழங்கும் ஏழு நெட்டுயிர். [பார்க்க] இசை.

ஏழுபெண்பருவம் :- பெண்மக்கட்குரிய எழுவகைப் பருவங்கள். அவ்வெழு பருவத்தார் 1. பேதை 2. பெதும்பை 3. மங்கை 4. மடந்தை 5. அரிவை 6. தெரிவை 7. பேரிளம்பெண். உலாவிலக்கியத்துள் தன்னேரிலாத் தலைவன் உலாவருங்கால் அவ்விடத்து நெருங்கியுள்ள ஏழுபருவத்துப் பெண்களும் கண்டு காதல் கொள்வர் (பார்க்க . உலா. ஏழுபருவத்துப் பெண்டிரும் வெவ்வேறு வயதுடையார். ஐந்துமுதல் ஏழாண்டளவு பேதைக்கும், எட்டு முதல பதினான்களவு பெதுமபைக்கும பன்னிரெண்டு

முதல் பதின்மூன்றளவு மங்கைக்கும், பதினான்குமுதல் பத்தொன்பது அளவு மடந்தைக்கும், இருபதுமுதல் இருபத்தைந்தளவு அரிவைக்கும், இருபத்தாறு முதல் முப்பத்தொன்றளவும் தெரிவைக்கும் முப்பத்திரெண்டு முதல் நாற்பதளவு பேரிளம் பெண்ணிற்கும், வெண்பாப் பாட்டியல் வயது வகுத்துரைக்கும். இவ்வயது வகுப்பில் பன்னிருபாட்டியல் வேறுபடுகின்றது.

[1] பேதை ... 5 — 8

[2] பெதும்பை ... 9 — 10

[3] மங்கை ... 11 — 14

[4] மடந்தை ... 15 — 18

[5] அரிவை ... 19 — 24

[6] தெரிவை ... 25 — 29

[7] பேரிளம் பெண் ... 30 — 36.

ஏழொத்து :- [இசை]. தாளவகை.

ஏறங்கோட்பறை :- [பார்க்க] ஏறுகோட்பறை.

ஏறங்கோள் :- (பார்க்க) ஏறுகோட்பறை.

ஏறடுதல் :- 1. மேல்வைத்தல். 'கொம்பினிடத்தே யேறட்டதம் கையிடத்தே' (முல்லைப். 34. உரை) 2. மேற்கொள்ளுதல். 'இவை சுண்ணமென்பதொரு பெயரை யேறட்டுக் கொண்டு'. (சீவக. 876. உரை)

ஏறாண்முல்லை :- (புறப்) புறப்பொருள்துறை. ஆண்மை மிகுந்த வீரக்குடியின் ஒழுக்கத்தைப் புகழ்ந்து கூறும் புறத்துறை. (பு. வெ. 8. 22)

ஏறாவழக்கு :- கூடாவழக்கு. 'ஏறாவழக்குத் தொடுக்கின்றார்' (அருட்பா 1. இங்கித 13)

ஏறுகொள்வென்றி :- (புறப்.) புறப்பொருள துறை. ஏற்றைத் தழுவி எய்தும் வென்றியைக் கூறும் புறத்துறை. [பு வெ. பெருந். 42] இது பெருந்திணையுள் அடங்கும்.

ஏறுகோடல் :- (பார்க்க) ஏறுகோள்.

ஏறுகோட்பறை :- [புறம்] ஏறு தழுவும்போது ஒலிக்கும் முல்லை நிலப் பறை. [இறை.1. உரை. பக் 18]

ஏறுகோள் :- (புறம்) ஆயர்குல வழக்கத்தின்படி ஒரு பெண்ணை மணந்து கொள்வதற்காக ஏறுதழுவுதல் (திருக்கோ. 136. உரை)

ஏறுதழுவுதல் :- (புறம்). ஆய்க்குல இளைஞர் மணமுடிக்கும் பொருட்டுக் காளையைத் தழுவிப் பிடித்தல. 'அந்நிலத் தியல்பு பற்றி ஏறுதழுவி'. (தொல். பொ. 53. உரை) (பார்க்க) ஏறுகோள்.

ஏறுவிடுதல் :- (புறம்.) ஆயர்தம் மகளை மணம் புரியத் தக்கோர் தழுவிப் பிடிக்கும் பொருட்டு எருது விடுதல்.

ஏற்பு : பொருத்தம். 'ஏற்புற வணிதலும்' [நம்பி. 125]

ஏற்புழிக்கோடல்:- உத்தி முபபத்திரெண்டனுள் பொருந்து மிடங்களில கொள்ளுகையென்னும் உத்தி. [நன். 227. விருத்தி.]

ஏழ்புழை :- [இசை.] வேய்ங்குழல் வகை. 'ஏற்புழை யைம்புழை யாழிசை கேழ்த்தன்ன. [பரிபா. 8. 22]

ஏனை :- ஓர் இசை விகற்பம். (திவா)

ஏனையுவமம் :- வெளிப்படை யுவமம். [தொல். பொ. 49]

ஐ

ஐ :- (இசை). இளி என்னும் ஐந்தாம் இசையின் எழுத்து (திவா) (பார்க்க) இசை.

ஐந்திணை :- (அகம்) அன்புடைக்காமம். (நம்பி. 4. உரை) ஐவகை அகத்திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் பாலை. [திவா]. [பார்க்க] அகத்திணை.

ஐந்திணைச் செய்யுள் :- [பா.] புணர்தல் முதல் ஐந்து உரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சிமுதலிய ஐந்திணையினையும் கூறும் பிரபந்தம். [இலக். வி. பக். 485]

ஐந்துபா :- ஐவகையான பாக்கள். அவை. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா.

ஐம்படைப்பருவம் :- ஐம்படைத்தாலியை அணிதற்குரிய குழந்தைப் பருவம். 'ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி'.

ஐயக்கலவை :- (அணி). (பார்க்க) கலவையணி.

ஐயக்காட்சி:- தோன்றியதொரு பொருளை அதுவோ, இதுவோ என்று இரண்டுறக் கருதுகை. (சி. சி. அளவை. 3. மறைஞா]

ஐயமொழி :- செய்யுட் குற்றங்களுள் ஒன்று. (யாப். வி. 525)

ஐயம் :- (i) (அகம்.) தலைவன் தலைவியைக் கண்ணுற்றபின் இவள் வரையர மகளோ? வானர மகளோ? நீரர மகளோ? என்று ஐயப்படுவது; 'அணங்கு கொல், ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர்கொல் மாலும் என்நெஞ்சு'' என்னும் குறள் ஐயத்திற்கு எடுத்துக்காட்டு. தலைவனைக் கண்ணுற்ற தலைவியும், இவன் கடம்பமர் கடவுளோ? இயக்கனோ? என்று ஐயப்படுவதும் உண்டு. [இறை 2 உரை]

2. (புறப்) புறப்பொருள் துறை. காமஞ்சாலா இளமை-யோளைக் கண்ட தலைவன் அவள் இத்தன்மையளென்று அறியாது ஐயமுற்றது பற்றிக் கூறும் புறத்துறை (பு. வெ. கைக்கிளை 2) கைக்கிளையை அகத்திணை ஏழனுள் தொல்-காப்பியர் அடக்கிக் கூறவும் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் அதனைப் புறப்பொருளில் கைக்கிளைப் படலத்துள் அடக்கிக் கூறுவர். கைக்கிளையைப் புறப்பொருளாகக் காட்டியது பிற்கால வளர்ச்சி எனலாம். [பார்க்க] கைக்கிளைத்திணை.

ஐயவணி :- (அணி.) பொருணிவகை. உவமை, உவமிக்கப்படும் பொருள் ஆகியவற்றின் ஒப்புமையினால் ஒரு பொருளைக் கண்டு அதுவோ இதுவோ என ஐயுறுதலாம். வடநூலார் இதனை 'சந்தேகாலங்காரம்' என்பம்.

[எ.டு.] ''தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவும் வாண்முகங்கொல் — யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாட
ஒருபாற் படாதென் னுளம்.''

ஐயவிலக்கு :- [அணி] [பார்க்க] முன்னவிலக்கணி.

ஐயவுவமை :- அணி வகை. [பார்க்க] உவமை

ஐயவேது :- அணிவகை. [பார்க்க] ஏதுவணி.

ஐயுறுதல் :- [அகம்]. [பார்க்க] ஐயம்.

ஐவகைத்தாயர் :- 1] ஈன்ற தாய் 2] ஊட்டுந்தாய் 3] முலைத்-தாய் 4] கைத்தாய் 5] செவிலித்தாய். [பிங்].

ஐவகைப்பாதம் :- [கூ.] சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்-சிதம், குஞ்சிதம், என ஐந்து வகையான அடிவைத்து நடிக்கும் நிலை. [சிலப். பக். 8]

ஒ

ஒக்கடித்தல்:- *[இசை] தாளங்கொட்டுதல் (சீவக. 156 உரை)*

ஒட்டணி:- *(அணி)*. பொருளணிவகை. தன்னால் கருதப்பட்ட பொருளை மறைந்து அதனை வெளிப்படுத்துவதற்குத் தக்க பிறி தொன்றனைச் சொல்லுவது [எ டு]

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

ஒட்டணியை பிறிதுமொழிதல், நுவலாநுவற்சி, சுருங்கச் சொல் லல், தொகைமொழி. உள்ளுறையுவமம், உவமப்போலி எனவும் வழங்குவர். (தண்டி. 51). தண்டியலங்காரம் ஒட்டணியினை நான்கு வகைப்படுத்துகின்றது அவை:

1. அடையும் பொருளும் அடைபட மொழிதல்:-
சிறப்பிக்க வந்த அடைமொழியையும், அவற்றால் சிறப்பிக்கப் படும் பொருளையும் வேறாகக் கூறி அவற்றால் தம் உள்ளத துள்ள கருத்தை வெளிப்படுத்துவது

2. அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்:-
சொல்லக் கருதிய பொருளுக்கும், அதனை மறைதது அதற்கு ஒத்ததாகக்கூறப்பட்ட பொருளுக்கும் அடைமொழிகளைப் பொது வாகக்கூறித் தாம் கருதியதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருளை வேறாக மொழிதல்.

3. அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்;-
கருதிய பொருள், அதனை மறைத்து அதற்கு ஒத்ததாகக் கூறும் பொருளும் ஆகிய இரண்டற்கும சில அடைமொழிகளைப் பொது வாகக் கூறியும், சிலவற்றை ஒன்றற்கே சிறப்பாகக் கூறியும் கருதிய பொருளுக்கு வேறான பொருளைக் கூறுதல்.

4. அடையை விபரீதப் படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்:-
கருதிய பொருளை மறைத்து அதற்கு ஒத்ததாகக் கூறப்படும்

பொருளில் அதற்கு ஒவ்வாத விபரீதமான அடைமொழிகளைப் புணர்த்துக் கூறுதல்.

[எடுத்துக் காட்டுக்கள் தனித்தனியே முதனூலுள் காண்க]

ஒட்டுப்பிரிமொழி:- செய்யுட் குற்றங்களுள் ஒன்று. (யாப். வி. 525

ஒத்தறுத்தல்:- [இசை] தாள வரையறை செய்தல். (பிங்)

ஒத்தாழிசை - (யாப்). பாவினம். கலிப்பாவின் வகை. அறவொத்து மூன்றாக வருவது ஒத்தாழிசையாகும்." 'ஒத்து மூன்றாகும ஒத் தாழிசையே' என்பர் தொல்காப்பியர். (தொல். பொ. செய் 445)

ஒத்தாழிசைக் கலிப்பா தாழிசை, தரவு, சுரிதகம், அடைநிலைக் கிளவியென நான்கு உறுப்பினை உடையது. ஒத்தாழிசைக் கலி மூன்று வகைப்படும். அவை:-

1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா:-

தரவு என்னும் உறுப்பு முதற்கண்ணே வரத்தாழிசை மூன்றுவந்து தனிச்சொல் பெற்றுச் சுரிதகத்தால் முடிவது. (தாழிசை தரவினும் சுருங்கிய அடியுடையதாகும். சுரிதகம் வெண்பாவானும் ஆசிரியத் தானும் ஒன்றில் முடியும்)

2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா :-

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் நான்கும் வரும் கலிப்பாவில் தாழிசையை அடுத்து அம்போதரங்க உறுப்பு வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். அடியா- னும் சீரானும் முறையே ஒன்று சுருங்கிவரும் உறுப்பே அம்போ தரங்க் ஒத்தாழிசைக் கலிப்பா என வழங்கப்படும்.

3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா :.

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், ஆகிய உறுப்- புக்களோடு முடுகியல் அடியை உடைய அராக உறுப்பைத் தாழிசையின் பின்கூட்டிச் சொல்லப்படின் அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும். [தமிழ்ப் பாவியல் பக். 116. 117]

தொல்காப்பியர் ஒத்தாழிசைக் கலிப்பாவினை 'இடைநிலைப் பாட்டு' எனவும் குறிப்பர்.

ஒத்தாழிசைக்கலி :- (பார்க்க) ஒத்தாழிசை.

ஒத்திசை :- இசையின் லயம்.

ஒத்துதல் :- [இசை.] தாளம் போடுதல். 'குணலைக் கொத்தினபாணி' [கோயிற்பு. நட. 30]

ஒத்து :- (இசை.) தாளஒற்று. 'ஒத்தளஞ் 8' [பரிபா. 12. 42] நாகசுரத்துக்குச் சுருதி கூட்டும் ஓர் ஊது குழல்.

ஒட்பணி :- உவமையணி.

ஒப்பாரி :- 1. அழுகைப்பாட்டு. 'மகனேயென் றொப்பாரி சொன்னாள்' (இராமநா. உயுத்த. 81) 2. ஒப்பு. 'அரவன்ன ஒப்பாரி (குறள். 1071) 3. போலி. 'நானும் ஒப்பாரியாய் வந்த புறத்துறவுக்கு நன்மை பலவே செய்தவார்' (அறப். சத. 80)

ஒப்பின்முடித்தல் :- உத்தி. முப்பத்திரெண்டனுள் ஒன்றற்குச் சொல்லப்படும் இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்து வருமாயின் அதற்கு அதுவே இலக்கணமாக உடன் முடிவு செய்தலாகிய உத்தி. [நன். 14.உரை]

ஒப்புமைக்கூட்டம் :- [அணி.] பொருளணி வகை. ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணமுதலாயினவற்றின் மிக்க பொருள்களைக் கூடவைத்துச் சொல்லுதல். [தண்டி. 62.] இதனை வடநூலார் 'துல்யயோகிதாலங்காரம்' என்பர். (அணி.பி. 14) ஒப்புமைக் கூட்டவணியைத் தண்டியலங்காரம் 1. புகழ் ஒப்புமைக்கூட்டம், 2. பழிப்பு ஒப்புமைக் கூட்டம் என இருவகையாக்கிக் கூறும். அணியிலக்கணம் 1. புனைவுளி ஒப்புமைக் கூட்டம், 2. புனைவிலி ஒப்புமைக் கூட்டம் எனக் கூறும்.

1. புகழ் ஒப்புமைக் கூட்டம் :-

(எ.டு.) "பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டிவ் வுலகு"

புகழத்தக்க திருவேகம்ப நாதர், திருநந்தா விளக்கு, கொடைத் தன்மைவாய்ந்த சான்றோர் இம்மூன்றும் காஞ்சி நகரின்கண் வுள்ளதால் உலகம் எனப் புகழ்ந்தமையால் இது புகழ் ஒப்புமைக் கூட்டமாயிற்று.

2 பழிப்பு ஒப்புமைக் கூட்டம்:- (எ டு)

"கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழையறுக்குங் கோள்" [திரிக. 50]

பழிக்கத் தக்க குடியலைக்கும் வேந்தன் சலமொழி மாந்தர் கற்பு நெறிதவறிய பெண் இம்மூவராலும் காலமழை பொய்க்கும் எனப்பழித்தமையால் இது பழிப்பு ஒப்புமைக கூட்டமாயிற்று.

ஒப்புமைப்புனைவிலி புகழ்ச்சி:- (அணி),
(பார்க்க) புனைவிலி புகழ்ச்சியணி.

ஒருகட்பகுவாய்,- (இசை). பறைவகை. (பிங்)

ஒருகட்பறை:- [பார்க்க] ஒருகட்பகுவாய்.

ஒருங்கியலணி - [அணி] (பார்க்க) புணர் நிலையணி

ஒருங்குடன்தோற்றவேது:- (அணி). பார்க்க ஏதுவணி.

ஒருசிறைநிலை:- சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்கப் பாடலமைந்துள்ள முறை. [இறை. 56 உரை]

ஒருசொல் விழுக்காடு:- யாதொரு பொருளுமன்றி வாக்கியத்தினிடை வழங்கும் சொல் [சிவக, 1886 உரை]

ஒருசொற் பலபொருள்:- ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள் [பிங்]

ஒரு சொன்னீர்மை:- சொற்கள் இணைந்து ஒரு பொருளே தருந் தன்மை (புறநா. 206 உரை)

ஒருதலைக்காமம் - [அகம்] (பார்க்க) கைக்கிளை.

ஒருதலைத்துணிதல்:- உத்தி முப்பத்திரண்டனுள் ஒன்றுக் கொன்று மாறுபாடான இரண்டு கொள்கைகளில் ஒன்றை ஏற்றலாகிய உத்தி. (நன். 14. உரை)

ஒருதலைப்படுதல்:- ஒரு முடிவு பெறுதல்.

ஒருதலையுள்ளுதல்:- [அகம்] அவத்தை பத்தனுள் ஒன்றாகிய இடைவிடாத நினைவு. இது மெய்யுறுபுணர்ச்சி நிகழுமிடம உணர்த்துவது. (நம்பி. :6 உரை)

ஒருதனிநிலை:- (புறப்) புறப்பொருள்துறை. தன்படை தளர்தல் கண்ட வஞ்சியமறவன் ஒருவன் தமியனாய்ப் பகைப்படைஞரை எதிர்த்துத் தடுத்து நின்ற நிலைமையைக் கூறும் புறத்துறை. பு வெ. வஞ்சி. 19] இத்துறையினை "வருவிசைப் புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமை" என்பர் தொல்காப்பியர் (தொல. பொ. புற. 65) இது வஞ்சித் திணைக்கண் அமைந்த துறையாகும்.

ஒருதிறம்பற்றுதல்:- ஒரு பட்சமாக இருத்தல். அறங்கூரவையத் துரை நூல்கோடி யொருதிறம் பற்றினும்" [சிலப். 5. 136]

ஒருதொடர்ப்பொருட்கலவை:- [அணி] [பார்க்க] கலவையணி.

ஒருபாவொருப:ஃது:- சிற்றிலக்கிய வகை. அகவல், வெண்பா, கலித்துறை என்பவற்றுள் ஏதேனும் ஒரு பாவில் பத்துப் பாடல்களாக அமைக்கப்பட்ட ஒரு பிரபந்தம். (இலக். வி. 823)

ஒருபான்மை மயக்கம்:- சொற்றொடரில் ஒருமை பன்மைகள் மயங்கி வழங்குதல். [சீவக. 2210. உரை]

ஒருபுடையுவமை:- முழுவதும் ஒப்பாகாமல் சில தன்மையில் மாத்திரம் ஒத்திருக்கும் உவமை.

ஒருபுடையொப்புமை:- [பார்க்க] ஒருபுடையுவமை

ஒருபொருட்கிளவி:- ஒரு விதப பரியாயச் சொல். [த பே. அக] பரியாயச் சொலலாவது ஒரு பொருள் குறித்த பல சொல்.

ஒருபொருட் பன்மொழி:- ஒரு பொருளைத் தரும் பலசொற்கள், மிமிசைச் சொல். (நன். 398)

ஒருபொருண் மொழி:- செய்யுட் குற்றங்களுள் ஒன்று [யாப்.வி.525]

ஒருமுற்றிரட்டை:- [யாப்]. ஓரடி முற்றெதுகையாய் வருவது. [யாப். வி. 51]

ஒருவழித்தணத்தல்:- [அகம்] களவுக் காலத்தில் ஊரில் அலர் எழுந்தால் அவ்வலர் சிறிது அடங்குமாறு தலைவன் ஒரோவழிப்பிரிதல் (தணத்தல்-பிரிதல்) இப்பிரிவு ஒரிரு நாட்களே நீடிக்கும். இது நாடிடையிட்டும், காடிடையிட்டும் பிரியப்படாமல் ஒரூரின் கண்ணும், ஒரு நாட்டின் கண்ணும் நிகழும். ஒருவழித் தணத்தல் எழுவகைப்படும் அவை,

1. செலவறிவுறுத்தல்:- தலைவன் தன்பிரிவைத் தோழிக்குத் தெரிவித்தலும், அவள் அதனைத் தலைவிக்குத் தெரிவித்தலும்.

2. செலவுடன்படாமை:- தலைவன் செலவைத தோழி தடுத்தல்

3. செலவுடன்படுத்தல்:- தலைவன் தனது செலவின் இன்றியமையாமையைக் கூறித் தோழியை உடன்படச் செய்தல்.

4. செலவுடன்படுதல்:- தலைவன் செலவிற்குத் தோழி உடன்படல்.

5. சென்றுழிக் கலங்கல்:- தலைவன் பிரியுங்கால் (ஒருவழித் தணத்தற்கால்) தலைவி மயங்குதல்.

6. தோழி ஆற்றுவித்தல்:- ஒருவழித் தணத்தலில் தலைவி கலங்கும்போது அமைதியான சொற்களால் தோழி தலைவியை ஆற்றுவித்தல்.

7. வந்துழி நொந்துரைத்தல்:- மீண்டும் வந்த தலைவனிடம் தோழி வருந்தியுரைத்தலும, தன் பிரிவினால் தோழிக்கும், தலைவிக்கும் உண்டான துயரத்திற்காகத் தலைவன் வருந்தியுரைத்தலும்.

ஒருவழித் தணத்தலில் தலைவன் தன் பதிக்குச் செல்வதனைத் தோழியிடம் சாற்றத் தோழி தலைமகனைச் செலவு விலக்குவாள்; தலைமகள் நீங்கல் வேண்டத் தோழி தலைமகனை விடுப்பள்; தோழி தலைவிக்குத் தலைவன் செலவுணர்த்தத் தலைவி நெஞ்சொடு புணர்த்துக் கூறுவாள். தலைவனின் செலவு நீட்டிக்கத் தலைவி காமம் மிக்க கழிபடர் கிளவி கூறுவாள்; இந்நிலையில் தோழி தலைவியை ஆற்றுவிப்பாள். (அ. பொ. வி. பக் 114)

ஒருவாய்க் கோதை:- ஒருகட்பறை. மரக்காலன்ன ஒருவாய்க்-கோதை'' (கல்லா. 8. 27)

ஒரூஉ:- [பார்க்க] ஒரூஉத் தொடை.

ஒரூஉத்தொடை:- [யாப்] தொடை விகற்பம், அளவடியுள் நடுவுருசீர்களொழிய முதற்சீர்க் கண்ணும் நான்காம் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது. [இலக். வி. 723]

ஒரூஉவண்ணம்:- (யாப்). ஆற்றெழுக்காகப் பொருள் கொண்டு செல்லும் சந்தம். (தொல். பொ. 539)

ஒலியந்தாதி :- 1. ஓரடிக்குப் பதினாறு அல்லது எட்டுக் கலைகள் தொடுத்த பல்சந்த வகுப்புக்கள். 2. அந்தாதியாக முப்பது கூடியதொரு பிரபந்தம். [வெண்பாப். செய். 13]

ஒலியலந்தாதி :- (பார்க்க) ஒலியந்தாதி.

ஒழித்துக்காட்டணி:- [அணி.] ஒரு பொருளை ஓரிடத்தில்லையென மறுத்து மற்றோரிடத்து உண்டென்று நியமித்துக்காட்டும் அணி. [அணியி. 53]. (எ.டு)

> ''சிறைபடுவ புட்குலமே யன்றிநின் றேயத்
> திறைவமக் கட்குள் இலை''

இதில் 'ஒழிப்புச்சொல்லானது தொக்குநின்றது. இவ்வணியை வடநூலார் 'பரிசங்கியாலங்காரம்' என்பர்.

ஒழிந்ததுவினாதல் :- (அகம்) தலைவன் ஊர், பெயர், கெடுதி வினவியும் தலைவி பேசாதிருந்த போது, நீ பேசா தொழிந்த தென்னவென வினாதல். (அ. பொ. வி பக் 229)

ஒழிபியல் :- நூலின்கண் முன்னியல்களில் சொல்லாதொழிந்த வற்றைக் கூறும் இயல். (நம்பி.)

ஒழிப்பணி :- [அணி.] பொருளணி வகை. ஒன்றனை ஏற்றிக் கூறற்பொருட்டு ஒன்றனை மறுத்துககூறல். இதனை வடநூலார் அபநுதியலங்காரம்' என்பர். ஒழிப்பணி அறுவகைப்படும. அவை.

1. வெற்றொழிப்பு:- உவமையை ஏற்றிக் கூறற் பொருட்டு உவமிக்கப்படும் பொருளை ஒழித்துக் கூறல்.

2. காரணஒழிப்பு :- ஒழிப்பு காரணத்தோடு வருதல்.

3. வேறுபாட்டொழிப்பு :- உவமிக்கப்படும் பொருளை (வர்ணியம்) ஏற்றிக் கூறற்பொருட்டு மற்றொன்றனை ஒழித்தல்.

4. மயக்கஒழிப்பு :- ஒரு பொருளை மற்றொரு பொருளென்று கொள்ளும் மயக்கத்தை உண்மைகூறி ஒழித்தல்.

5. வல்லோரொழிப்பு:- பிறர் ஐயமுற்று வினவியதன் சொல்லின் உண்மைப் பொருளை வல்லோர் அச் சொல்லுக்கு மற்றொரு தாற்பரியத்தால் (பொருளால்) கற்பித்து மறுத்தல்.

5. வஞ்சனையொழிப்பு :- வஞ்சனை, கபடம், பெயர், முதலிய சொற்களால் உவமிக்கப்படும் பொருளினை மறுத்தல்.
(அணியி. 11)
(எடுத்துக்காட்டுக்கள் தனித்தனியே முதனூலுட் காண்க)

ஒழிப்புயர்வுநவிற்சி :- (பார்க்க) உயர்வுநவிற்சியணி.

ஒழுகிசை :- வெறுத்திசையில்லாமல் செவிக்கினிய மெல்லிசை யுடைமையாகிய குணம். (தண்டி. 19)

ஒழுகிசைச்செப்பல் :- [யாப்.] இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை இரண்டும் விரவி வந்த வெண்பாவின் ஓசை
(காரிகை. செய். 1. உரை)

ஒழுகிசையகவல் :- (யாப்) நேரொன்றாசிரியத் தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் விரவி வந்த அகவலோசை.
(காரிகை. செய். 1. உரை)

ஒழுகுவண்ணம் :- (யாப்) ஒழுகிய ஓசையால் செல்லும் சந்தம்
[தொல். பொ. 538]

ஒளி:- பாடற் பயன்களுள் ஒன்று. [சிலப். 3. 16. உரை)

ஒள்வாள்அமலை - [புறப்] புறப்பொருள் துறை. வாளேந்திய தும்பை மறவர்கள் போரிட்ட பகையரசனைச் சூழ்ந்து கொண்டு ஆடியது பற்றிக் கூறும் தும்பைத்துறை. (பு. வெ. தும்பை. 21) இதனை "களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோரார் ஆடும் அமலை" என்பர் தொல்காப்பியர்.
[தொல். பொ. புறத். 72]

ஓற்றுப்பெயர்த்தல் - மிறைக்கவி வகை. ஒரு மொழியுந் தொடர் மொழியுமாக நின்று வெவ்வேறு பொருள் தருவதாகப் பாடப்படும் மிறைக்கவி. [தண்டி 95 உரை]

ஒற்றுறுப்பு :- [இசை] செங்கோட்டு யாழில் நரம்பினும் பத்தரினும் தாக்குவதோர் கருவி. [சிலப். 3. 108. அரும்]

ஒற்றைக்கை:- [கூ] ஒரு கையாற் காட்டற்குரிய அபிநயம்
(பரத. பாவ. 19)

ஒற்றொழிபாட்டு: [பா]. மெய்யெழுத்தில்லாப் பாட்டு. [சூடா]

ஒற்றைமாலையணி:- [அணி]. பொருளணிவகை. பின்னாக வருவனவற்றிற்கு முன்னாக வருவனவற்றை அடையடுத்ததாக வேனும [விசேடியம்] அடைமொழியாக வேனும் [விசேடணம்] கூறுதலாகிய அணி. இதனை வடநூலார் ஏகாவளியலங்காரம் என்பர். (அணியி. 47)

ஒன்பதொத்து:- [இசை]. ஒருவகைத் தாளம். (திவ். திருவாய்

ஒன்றற்கொன்றுதவியணி:- [அணி]. பொருளணிவகை, ஒன்றற்கு ஒன்று உதவுதலைச் சொல்லுதல்,

[எ டு] "திங்களிர வால்விளங்கும் செப்புகதிர்த் திங்களால்
கங்குல் விளங்குமே காண்" இவ்வணியை வடநூலார்
"அந்நியோந்நியாலங்காரம" என்பா. [அணியி. 43]

ஒன்றாத வஞ்சித்தளை:- (யாப்) நிரையீற்றுரிச் சீரின் முன் நேரசை வருந்தளை. (இலக். வி. 718. உரை) கனிமுன் நேர்வரின் அது ஒன்றிய வஞ்சித்தளையாம் [பார்க்க] தளை

ஒன்றியவஞ்சித்தளை:- (யாப்) நிரையீற்றுரிச் சீரின் முன் நிரையசை வரும தளை (இலக். வி. 718. உரை) கனிமுன் நிறைவரின் அது ஒன்றிய வஞ்சித்தளையாம் [பார்க்க] தளை.

ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல்:- உத்தி முப்பத்திரெண்டனுள் ஒரு பொருளைக் கூறி முடிக்கையில் அதற்கினமான பொருளையும் அங்குத்தானே கூறி முடிக்கையாகிய உத்தி [நன். 14. உரை]

ஒன்றினொன்றுஅபாவம்:- (அணி) [பார்க்க] ஏதுவணி,

ஒன்றுகூட்டு:- பொருள்கோள் வகை. கொண்டு கூட்டுப் பொருள்கோள் (யாழ். அக.)

ஒன்றுமொழிதல்:- வஞ்சினங் கூறுதல. இடியிசை முரசமொடொன்று மொழிந்து [பதிற்றுப். 66. 4]

ஓ

ஓ:- [இசை] விளரி என்னும் இசையின் எழுத்து (திவா). [பார்க்க] இசை.

ஓசை:- பாடல பெறும் ஒலியமைப்பு செய்யுளோசை எழுத்தோசை

ஓசையுடைமை:- நூலழகு பத்தனுள் இன்னோசையுடைத்தாதல்,

ஓசையுண்ணுதல்:- செய்யுளோசை இசைதல். (யாப். வி. 57)

ஓசையூட்டுதல்:- செய்யுளோசையை வாய்ப்பாட்டால் அளந்தறிதல். [யாப். வி. 57]

ஒட்டியம்: மிறைக்கவி வகை, பாடல் முழுவதும் இதழ் குவிந்தும் கூடியும் இயலும் எழுத்துக்களைக் கொண்ட மிறைக்கவி. [மாறன். 275]

ஓதற்பிரிவு:- [அகம்] பிரிவுவகை. தலைவன் கல்வி கற்றற் பொருட்டுத் தலைவியைப் பிரியும் பிரிவு (தொல். பொ. 25) ஓதற் பிரிவு நால்வகைப்படும். அவை.

1. அந்தணர், அரசர் முதலியோர் வேதம் ஓதற்பொருட்டும் 2. அனைவரும் வேதமல்லாக் கல்வியின் பொருட்டும், 3. அந்தணர் படைக்கலம் பயிறல் பொருட்டும். 4. அரசர் வணிகர் போன்றோர் பகடுபிற ஊர்தற் பொருட்டும் பிரிவர். ஓதற்பிரிவிற்குரிய காலம் மூன்றாண்டுகள்.

ஓத்து:- இலக்கண நூற்பிரிவு. 'இனமொழி கிளந்த ஓத்தினானும்' (தொல். பொ. 480) இயல் என்னும் உறுப்பு, ஓரினமாயுள்ள இரத்தினங்களை வரிசையாகப் பதித்து வைத்தாற்போல ஓரினமாயுள்ள பொருள்களை ஒருவழிப்பட வைத்துச் சொல்வது. ஓத்து எனினும் இயல் எனினும் ஒன்றே. (நன். 16, உரை)

ஒத்துமுறைவைப்பு:- உத்தி முப்பத்திரெண்டனுள் இயல்களைக் காரண காரிய முறைப்படி வைத்தல். [நன். 14. உரை] இதனைத் தொல்காப்பியர் அதிகார முறை வைப்பு என்பார்.

ஓம்படுத்ததல்:- பாதுகாக்குமாறு சேர்த்தல். 'சிறைப்புறமாக ஓம்படுத்தது. (தொல். பொ. 114 உரை)

ஓம்படை:- [புறப்]. புறப்பொருள் துறை. அறிவன் மன்னனுக்கு முன்னின்று இன்னது செய்தல் நினக்குத் தகுதியாகும் என்று கூறும் பாடாண்துறை. (பு. வெ. பாடாண் 37) ஓம்படை - ஒப்புவித்தல். நன்மையின் பால் மன்னனை ஒப்புவித்தல். இதனைத் தொல்காப்பியர், 'காலங்கண்ணிய ஓம்படை' என்பார். "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" (புறம். 195) என்னும் பாடலைத் தொல்காப்பியர் கூறும் ஓம்படைக்கு இளம பூரணர் எடுத்துக்காட்டுவார். (தொல் பொ. புறத். 88). தொல் காப்பியர் கூறும் ஓம்படை என்னும் துறைக்கும் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் துறைக்கும் கருத்து வேறுபாடு காணப்படுவதாக உரையாசிரியர் பொ. வே. சோமசுந்தரனார் கருதுகிறார். (பு வெ. பாடாண். 37. உரை பக். 230)

ஓம்படைக்கிளவி:- (அகம்) தலைவியைப் பாதுகாத்துக் கொள்ளெனத் தலைவனுக்குத் தோழி கூறும் கூற்று (தொல். பொ 114) பெரியோர் பாதுகாவலாகச் சொல்லும் சொல்.

ஓம்படை சாற்றல்:- (அகம்) தலைமகளைத் தோழியரிடையே கூட்டி மீண்டு வந்து தலைவனுக்குத் தன் நிலைமையை மறவாதிருக்கும்படி உயிர்த்தோழி கூறுதல். [அ. பொ. வி. பக். 280]

ஓரசைச்சீர் :- [யாப்]. ஓரசையே நின்று சீராக அமைவது. இது இருவகைப்படும். 1. நேர்—நாள்; 2. நிரை—மலர். (பார்க்க) சீர்.

ஓரடிப்பதம் :- ஒருவகை இசைப்பாட்டு.

ஓரெழுத்தினம்: [பார்க்க] ஏகாட்சரி

ஓரெழுத்துமடக்கு :- (அணி). சொல்லணி. வந்த எழுத்தே மடக்கிவருவது. (தண்டி. 94) (எ.டு.)

"நா நா நா தங் கூடினை
நாடுந் தொழிலோ வா"

ஓரொலிவெண்டுறை :- (பார்க்க) வெண்டுறை.

ஓரொற்றுவாரம் :- ஒரு மாத்திரையே பெற்று வரும் செய்யுள் [சிலப். 3, 136. உரை]

ஓர்ச்சி :- 1. ஆராய்ச்சி. 2. அறிவு. 'ஓர்ச்சியின்புருவாகி (வேதாரணி. வான். 25 3. உணர்ச்சி. 'ஒய்ந்த வோர்ச்சிவந் தெழுதலும் [விநாயகபு. 75, 443]

ஓர்ப்பு :- ஆராய்ந்துணர்கை.

ஓலைத்தூக்கு :- (பா.) சீட்டுக்கவி. 'மன்னுடை மன்றத் தோலை தூக்கினும்' [நன். 53]

ஓலைப்பாசுரம் :- கடிதச் செய்தி. 'வருக என்னுமளவும் ஓலைப் பாசுரம்'. [சீவக. 2147 உரை]

ஓலைப்பாயிரம் :- (பார்க்க) ஓலைப்பாசுரம். 'ஓலைப்பாயிர முதலாயின வெல்லாங் கொச்சகமாவதற்கு இழுக்கென்னை யெனில்' [தொல். பொ. 461. உரை]

ஓலை முகப்பாசுரம் :- கடிதத் தொடக்கத்து எழுதும் வக்கணை. [சிலப், 13 87 உரை]

ஔ

ஔ :- (இசை.) தார இசையின் எழுத்து. (பார்க்க) இசை.

ஔகம் : இடைப்பாட்டு. (சிலப். 14. 156. உரை)

ஔடவம் :- (பார்க்க) ஔடவராகம் (சிலப். 13. 106. உரை)

ஔடவராகம் :- [இசை] ஐந்து சுரம் மட்டும் உபயோகிக்கப் படும் இராகம்.

ஔபசாரிகம் :- ஒன்றின் தன்மையை மற்றொன்றில் ஏற்றிக் கூறுகை.

37